பிஸ்மில்லாஹ்

# பூரணமெய்ஞ்ஞான
# பொக்கிஷத்திறவுகோல்.

இஃது

ஸ்ரீவைகுண்டத்துக்கடுத்த ஏரல்மாநகரம்

ப-மு-முகம்மதுமுத்தலிபுசாகிப் அவர்கள்

குமாரர்.

முகியித்தீன்பிச்சைஎன்னும்

கா திருமுகியித்தீன் மஸ்தான்சாகிப்

அவர்களியற்றியது.

நாகூர்சாஹுல்கமீது ஒலியுல்லாஅவர்களின்

மகமகவாய்வந்த அபுல்ஹசன்ஹக்கானி

ஆரிபுபில்லாஹி அவர்களால்

பார்த்துவக்கப்பட்டுப்.

பிணக்குளமென்னுங் கற்பகநகரில்

சீ-பி-சீனியிபுறுகிம்சாகிப் அவர்கள்

(மனோதயாள. தனோபகாரத்தால்)


சென்னை ரூளை.

நிரஞ்சனவிலாச அச்சியந்திர சாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை] 1906. [அணா-8



REGISTERED COPYRIGHT.

பிஸ்மில்லாஹி.

# ரிஜிஸ்ட்டர் அறிவிப்பு.

இதனால் சகலமானவருக்குந் தெரிவிப்பது யாதெனில் ஹக்
கீக்கத்து ஹக்குமஃறிபத்தில் நிக்காஹம்வென நிகர்ப்ப மெய்ஞ்
ஞான மங்களவிவாகம்-க. மனோபாவிதப்பதிஞானம்-உ. மெய்ஞ்
ஞான ஆத்மகிரீடத்தந்தாதி-ங. இம்மூன்றுபுத்தகத்துக்குட்பட்ட
பலவிதமான பாடல்களும் வர்ணமெட்டுள்ள பதங்களும் ஒற்று
மைசெய்து இதற்காதாரமாயுள்ள பூரண மெய்ஞ்ஞான பொக்கி
ஷத்திறவுகோல் என்னும் பெயரினை யமைத்திருக்கின்ற இந்நூலு
க்குடையவர்களாகிய காதிரு முகியித்தீன் மஸ்தான்சாகிப் அவர்
களின் சகோதரன் முகம்மது கஸ்ஸாலி சாகிப் என்னும் நாமம்
வாய்ந்த யானும் கற்பகநிருகர், சி. பி. சீனியிபுறுகிம்சாகிப் அவர்
களும், இந்நூலிற் குள்ள ரிஜிஸ்ட்டர் காபிரைட் என்னும் சுதந்
திரத்தை அடியிற் கையொப்பமிட்டிருக்கும் எம்மால் 1906ஞு
நவம்பர்மீ 20-ந்தேதி அச்சிற்பதித்து இங்கிலீஷ் இலாகாவாகிய
மதராஸிலும் பிரஞ்சு இலாகாவாகிய புதுச்சேரியிலுங் காரைக்
காலிலும் காபிரைட் ரிஜிஸ்ட்டர் செய்திருப்பதால் இந்நூலை என்
னுடைய அனுமதியன்றி சிலபாகத்தைப் பிரித்தாவது மற்றொரு
புத்தகத்தோடு கலந்தாவது அல்லது பூரணமெய்ஞ்ஞான பொக்
கிஷத்திறவுகோல் என்ற பெயரை மாற்றி வேறு பேரிட்டாவது
அச்சிடுவாராகில் 1867-வது வருத்திய 25-வது ஆக்டு 20-வது பிரி
வின்படி யாம் கோரும் நஷ்டத்திற்கும் இந்தியன் பினல்கோட்
டென்னும் ஆக்டின்படி குற்றத்திற்கும் உத்தரவாதியாக வேண்டு
மென்பதை கவனிக்கக்கோருகின்றோம். இப்புத்தகங்கள் ஒவ்
வொன்றும் உடையவர் முத்திரை பெற்றிருக்கும்.

இப்படிக்கு,

ப. மு. முகம்மது கஸ்ஸாலி சாகிப் முஸ்லீம்,
தெற்குதெருவு வாமுல்லான் சரகம்,
ஏரலூர்போஸ்டு, ஸ்ரீவைகுண்டந்தாலூக்கா,
திருநெல்வேலி ஜில்லா.

# அறிவிப்பு.

பரிபூரண மெய்ஞ்ஞானதீப சங்கீர்த்தனமென்னும் அரிய கிரந்தபுத்தகம் 1904 வருஷம் நவம்பர்மீ 20-ந்தேதி அச்சிட்டுவெளியாகிய புத்தகத்தில் 128-வது பக்கத்திற் சொல்லிய அறிவிப்பை நிறைவேற்றுதற்கு எனக்குக் கிடைத்தமட்டும் மேற்படி பாடல்களை ஒற்றுமைசெய்திருக்கும் விபரமாவது ஹக்கீக்கத்து ஹக்குமஃறிபத்துல் நிக்காஹு-வென நிகர்ப்ப மெய்ஞ்ஞான மங்கள விவாகம் என்னும்-1 மனோபாஷிதப்பதி ஞானமென்னும்-2 மெய்ஞ்ஞான ஆத்மக்கிரீடத்தந்தாதி-3 இம்மூன்றுக்கும் ஆதாரமாயுள்ள பூரணமெய்ஞ்ஞானப் பொக்கிஷத்திறவுகோலெனப்பெயரிட்டு அச்சிற்பதிப்பித்திருக்கின்றேன்.

## விலையறிவிப்பு.

| | | | |
|---|---|---|---|
| பூரணமெய்ஞ்ஞான பொக்கிஷத் திறவுகோல் ரப்புகாகிதம் ஸ்டிப்கவர் புத்தகம் 1-க்கு | 0 | 4 | 0 |
| ஷை கிளேஸ் சுத்தபதிப்பு ஆப்பயிண்டு புத்தகம் 1-க்கு | 0 | 8 | 0 |
| முன்பதிப்பித்தபரிபூரணமெய்ஞ்ஞான தீபசங்கீர்த்தனம் சுத்தபதிப்பு கிளேஸ் கலிகோபயிண்டு | | 0 | 12 |

இவைகளில், ஒரேதடவையில் புத்தகம் 5-வாங்குவோருக்கு ஒருபுத்தகம் இனும் கொடுக்கப்படும்.

இப்படிக்கு,

ப. மூ. மூகம்மது கஸ்ஸாலி சாகிப் மூஸ்லீம்,
தெற்குதெருவு வாமுவல்லான் சரகம், ஏரலூர்போஸ்டு,
ஸ்ரீவைகுண்டந்தாலூகா, திருநெல்வேலி ஜில்லா.

## முக்கியகவனிப்பு:

இப்புத்தகம் வேண்டுவோர் மேற்கூறிய விலாஸப்படி என்னிடத்திலும் அடியிற் காணும் விலாஸ்தாரர்களிடத்திலும் வி-பி-யிலோ முகதாவிலோ பெற்றுக்கொள்ளலாம்.

பு. யி முகியித்தீன் பிச்சை அவர்கள்,
புடவைகடை, நெம்பர் 70. குயின்ஸ்ட்ரீட், பினாங்கு.

சீ. கு. சுல்தான் அவர்கள்.
பலசரக்குக்கடை, பனைக்குளம்போஸ்டு, இராமநாதபுரம்

சீ பி. சீனிபிபுறுகிம் சாகிப் அவர்கள்,
நெம்பர் 17, பலசரக்குக்கடை வியாபாரி,
3-வது டிவிஷன், மருதானை கொழும்பு.

# முகவுரை.

அல்லாகுவென்னும் அரியபெரிய திருநாமங்கொண்டு எல்
லாமொன்றணைந்து ஏகமாய் நிறைந்து ஒப்பியு மொப்பா வுவமை
யுள்ளடங்கா வலுமையு மிருந்து பெருமையிற் சிறந்த அரியமெ
ய்க்கடவுளென்னும் நாயன் அல்கம்துலில்லாஹியென்ற புகழெ
ன்கிற புகழெல்லாம் அந்த ஆண்டவனுக்கேயாம் ஒஸ்ஸலாத்து
ஒஸ்ஸலாமு அலா செய்யிதுனாமுகம்மதுனபி யிற்றகுமத்தி அல்
லாகுத்த ஆலாவுடைய றகுமத்துஞ் சலாமும் அவனுடைய தூதா
ங்கர் நம்முடைய நயினார் முகம்மது றகுமத்தான வேதாம்பர்பேரி
லும் ஒசுலா ஆலிகி வசகுபிகிவஜமீகி அம்மத்து. அவர்களைத்தோ
த்திரஞ்செய்தும் அவர்களின் ஆலவுலாதுகள் அசுகாபுகள் பேரி
லும் கலவாத்துஞ் சலாமுஞ் சொல்லித்துதித்து எனது வைகு
அவர்களின் இருபாத பொற்கமலங்களென் னிருதயத்திலிருத்தி
திருநெல்வேலிஜில்லா ஸ்ரீவைகுண்டந்தாலூகா ஏரல்யாநகரம் கப்
பல் ப-மு-முகம்மது முத்தலிபு சாகிப் அவர்களின் குமாரர் முகி
யித்தீன் பிச்சையென்னும் காதிருமுகியித்தீன்மஸ்தான் சாகிப்
அவர்களின் திருவாய்மலர்ந்தருளிய இந்நூல் வெளிவந்த காரண
மேதோவெனக்கேட்பீரேல் கிஷரத்து 1320 வருஷம் முஹற்றம்
14ந்தேதி மேற்படியூரில் வசிக்கும் இந்நூலாசிரியரின் சகோதரன்
கப்பல் ப-மு-முகம்மது கஸ்ஸாலி சாகிப் என்னும் பெயர்வாய்ந்த
யான் மேற்கூறிய தேதியில் மிகுதாழ்மையுடன் வருந்துதலாய்
கேட்டுக்கொண்டவிபரமாவது எல்லாப்புகழுக் குரியவனுகிய அல்
லாகுத்த ஆலா அவனது திருத்தூதராய் வந்தமுகம்மது முஸ்தபா
றசூல் சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்களுக்கினி தளித்த புறு
கானுல் அலிமுக்கும் கலிமாவுக்கும் மறைவான பாத்தின் வெளி
யான வாகிறு இரண்டு மருணுக்கருண்டாய் விளங்குகின்றனை
யால் லாஹிறென்னும் வெளிரங்கத்தில் ஆண்பெண்ணிரண்டுக்கும்
நிகழ்த்தும் நிக்காகுவென்னு மங்கள விவாகத்தை பாத்தினென்னு
மறைவான சிற்றில் ஹக்குடையதாத்துஞ் சிபத்துமொன்றணைந்த
அற்புதமங்களவானந்தக் காட்சியுள் வெளியுள்வழி வெளிவழிநிகர்
த்தலினிது கூறும் பொருட்டு ஹக்குத்த ஆலா தன்தாத்தைக்கொ
ண்டு தனித்து உஜூதாயிருக்கிறதுடன் சிபத்தைக்கொண்டு வெ
ளியாக்கி அவன் தன்னில் தானே அசுமாக்களைக்கொண்டு தஜல்
லியாணு மென்றதால் அந்த உஜூது உள்வெளிகடந்த அற்புத
மங்கள விவாகக்காட்சியைக்கண்டு மேற்படி இந்நூலாசிரியர்
அவர்களின் திருவாய் மலர்ந்தருளிய பாடல்களின் விபரமா
வது ஹக்குத்த ஆலாவின் நட்பானந்த புகழ்ச்சியென்னுஞ்
சித்திரக்கவியுடன் வெண்பாக்களும் விருத்தங்களாகவும் அகமது
முகம்மது மொன்றுகூடிய மணவறையில் ஆனந்தபாஸ்கர கெம்

பீர உல்லாசக் கிளர்ச்சியால் வரும் சுவால்ஷவாப் என்னும் எதிர்
மறைவிடைகள் அலங்காரநாலடிச்சிந்தாகவும் இன்னம் அகமது
முகமதுதனக்களித்த நஞ்சை நாலிலும் நாடோறுந்திருடர்களால்
சோரம்போன நெல்தொகைக் கணக்கை அகமதியாவென்னும்
அழகிய மணவாளரிடம் சஞ்சலங்கூறும் உழவர்கள் முறையிடா
முறையிடும்வினுக்களும்கலிபாபனுபக்காவிபரித்தும்விபரியர்நின்ற
தாலாட்டு நாவடிச்சிந்தும் இன்னும் அகமது முகம்மது என்னும்
ஹக்கான அரூபசொரூபத்தைக் கண்டானந்தக் கிளர்ச்சியால்
வரும் பதங்களும் பவனியுல்லாசப்பதங்களும் இன்னங்காட்சியா
னந்தக் கலித்துறைகளும் இவைகளுக்கு ஹக்கீக்கத்து ஹக்கு
மஃறிபத்தல் நிக்காகுமென நிகர்ப்ப மெய்ஞ்ஞான மங்களவிவாக
மென்னும் இன்னம் மெய்ஞ்ஞான ஆத்மகிரீடத்தந்தாதியும் மனோ
பாஷிதப்பதிஞானமும் லாஹூப்பதிகமும் மக்காமதினப் பதிக
மும் ஆனந்தக்களிப்பும் இன்னும் பலவிதமெட்டுள்ள தெளிந்து
பதங்களும் இவ்வாறு சேர்ந்த பாடல்களுக் காதாரமான பூரண
மெய்ஞ்ஞான பொக்கிஷத்திறவுகோலெனப் பெயரிட்டு திருநெல்
வேலிஜில்லா ஆழ்வார் திருநகரென்னும் அழகிய மணவாளபுரத்
தில் வசிக்காநின்ற நெ. மீ செய்யிது அகமது முகம்மது முஸ்த
பாவென்னு நாமம் வாய்ந்தவர்கள் மிகவும் விருப்புற்றாக் கேட்டுக்
கொண்டமையாலும் நாகூர் சதீப் குதுபுல் மஜீது சாகுல்ஹமீது
ஒலியுல்லா அவர்களின் மகமகவாய்வந்த அபுல்ஹசன் ஹக்கானி
ஹாதினு வமுறுசிதனு முறப்பினு ஷைகுல் மஷாயிகு ஆறிபுபில்
லாகி அவர்களால் மேற்படி பாடல்களைப் பார்த்துவக்கப்பட்டு
மதுரைஜில்லா இராமநாதபுரம் தாலூகா கீழ்ப்பாகம் பனைக்குள
மென்ற பெயர் விளங்கிய கற்பகநிநகரில் வசிக்காநின்ற பிருமாட்
சிமைதங்கிய முஸ்லீங்கள் அனைவோர்களும் அதிகிருபைபூரூவி
அல்லாகுத்த ஆலா அவன் திருத்தூதராய்வந்த முகம்மது முஸ்
தபா றசூல்சல்லல்லாகு அலைகிவசல்லம் அவர்க்கினிதளித்த அரிய
கிரந்த சிதானந்தசெஞ்சொல்லான குர்ஆனும் இன்னம் நுண்ணிய
அறிவைவிளக்கும் கிதாபுகளும் பயிற்சிபெற நாடிவந்தபேர்களு
க்கு தன்மவிஷயமாய் அருமான வுபகாரஞ்செய்து மேற்கூறிய
விபரம் பயிற்றும்படி யுவமித்த மதுறூதாவென்னும் பெயரினை
யணைந்த மதுறசத்தென்றதற்கிணங்கும் கல்விச்சாலைக்கேற்படுத்த
லான பெயர்களுக்கெல்லாந் தலைவராயும் மிகுபெட்பும் பேரறிவும்
நிறைந்து மிகு சிறப்புற்றுவாழும் மகாகனந்தங்கிய சி. பி. சீனியிபு
ருகிம்சாகிப் அவர்கள் மனோதயாள தமோபகாரத்தால் சென்னைக்
குக்கொண்டுவந்து அச்சிடப்பட்டது.

முகவுரை முற்றிற்று.

## சிறப்புப் பாயிரம்.

இஃது

கோட்டாறு வித்வான் சோடசாவதானம்

கா-ப-செய்குத்தம்பிப் பாவலரவர்களியற்றிய

நேரிசை யாசிரியப்பா.

நீர்நிலை யுடையே நிலமக டனக்குப்
பேர்நிலைத் தியாண்டும் பிறங்கப் பிறங்கிச்
சாலெழில் குலாய தண்மதி முகனே
போலெனச் சிறந்து பொங்குறு பஃறிணை
காட்டுபல் லாக்கக் கணந்தரு பாண்டி
நாட்டி னின்ப நலக்கக் கிடந்தோ
ரக்கம் போலு மமைபடு மாவி
புக்கறு காலே பூசையஞ் சிறைப்புள்
கிண்டி யுழக்கக் கிழிமல ரருகி
மண்டிக் குளக்கான் மடையுடைத் தோடி
யவபபயிர் வளர்த்து மருமை கான்ற
தவப்பயன் மரீஇய தலமக லேர
றேளத்துதித் தீரெண் செல்வங் கெழூஉமக்
காத்தருண் முகிலாய்க் கவின நின்ற
முகம்மது முத்தலி பென்னு முதுப்பெயர்
செகமது நாட்டுஞ் செம்மனுட் களித்துக்
கைதவம் போக்கிக் காசினி யுவப்பச்
செய்தவ மொன்றாய்த் திரண்டுதித் தனைய
னிருந்தமிழ்க் கடலி னெல்லை காணுபு
திருந்திய சிந்தையன் சிதசற் குணத்தன்
பொக்க மொருபோழ்தும் புகலாப் புந்தியன்
தக்கவர் கேண்மை தாங்கிய வயத்தினன்
ஒன்றைப் பற்றி யிரண்டிறத் தோர்த்து
மும்மல மொரீஇ நான்மையு மாயா

வைம்புல னடக்கி யறுகுண மழித்து
ளெழுவரம் பேணி யெண்ணிலை நிலையூ
வொன்பது மடைத்தின் பத்துறை பயின்றோன்
முன்னு காதிர் முகியித்தீன் மஸ்தா
னென்னு மியற்பெய ரிலங்கிய முகியித்தீன்
பிச்சை மாந்தர் பெரிது முய்ய
விச்சை யுடன்செய் தீர்ந்தனன் மன்னே
அறம்பொரு ளின்பம் வீடென வாய
திறம்படு பயன்கள் சிறந்தன வாக
விருடரு நெஞ்சக் கிலகொளி கொளுத்தி
யருடரு வாம மமைசுடர் சிவண
வாரண நெறிக்கோ ரணுவு முறழாப்
பூரண மெய்ஞ் ஞான பொக்கிடத் திறவுகோ
லென்னு மபிதான மிலங்க
மன்னு முலக மகிழ்தரு நூலே.

---

## சாத்துக்கவிகள்.

திருநெல்வேலிஜில்லா சரகம் செவ்வல்மாநகரம்

எம். ஏ. நெயினா முகம்மதுப் பாவலர்

இயற்றியது.

கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

மய்ஞ்ஞான வழியொழித்து முதுக்குறைவோ ராழ்ந்தாழ்ந்து மதிப்பக்கூர்ந்து, செய்ஞ்ஞான வாத்மக்கி ரீடத்தந்தா திவிரை திகழ்வி வாகம், உய்ஞ்ஞான மனோபாவிதப் பதிகமொடுஞான மொருங்குபூப்ப, மெய்ஞ்ஞானப் பொக்கிஷத்திறவுகோ லென்றொருநூல் விளம்பினால்.

பார்ப்பதனால் விழிசிறக்கும் பகர்வதனால் வாய்சிறக்கும் பரிவா யுள்ளஞ், சேர்ப்பதனால் மனஞ்சிறக்கு மிருகரங்களுஞ் சிறக்குந் தீண்டலாலிவ், வார்ப்புடைய கடலிடந்திந் நூலினிமைக்கு வமையிலா தாதலானே, கார்ப்பறுகற்கண்டு விற்போரிடமடங்கி நாணமுற்றுக் கசிந்ததம்மா.

இம்மதுர வாக்யமுறாஉந்தமிழ்ப்புலவனெவ னெனிலீண்டிசைப்பாங்கேண்மின், செம்மதுரமலர்வனஞ்சூழேரலம்பதிபிறந்த திறலோன் "கப்பல்", எம்மதுர வர்த்தகர் முகம்மது முத்தலிபென்பாரீன்றோன் சான்றீ, நம்மதுர மழையனைவான் முகியித்தீன் பிச்சையெனு நல்லான்மாதோ.

---

வித்வான் ஸ்ரீ, அப்பண்செட்டியாரவர்கள்

மாணவருளொருவராகிய

## செ. மு. வேலுமுதலியார் பாடியது.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

கார்கடனீரைக்கொண்டு ககனத்திற்கொண்டுமென்னப்
பேர்கொடுநின்றதென்னும் பிதற்றுரைபொய்யேமெய்யாம்
பார்புகழ்பாண்டிநாட்டிற் பல்வளங்கெழுமுமேர
லூர்கிலனீர்கொளீஇவா னுயர்ந்ததுகொண்டுமென்றே.

வானத்தையணாந்துநோக்கும் வையகமெல்லாமிவ்வூர்த்
தானத்தைக்கவிழ்ந்துநோக்குஞ் சகம்புகழ்வானமெல்லா
மானத்தாற்சென்றாப்போதா ரருட்டிருக்குறள்வெண்பாவிம்
மானத்தார்கிலஞ்சிவாய மற்றையநிலத்துக்காமால்.

இப்பெரும்புகழைவாய்ந்த வேரலூரென்னுமூரிற்
கப்பலேமுகமதுமுத்தலிபெறுங் கடல்போல்வான்ற
னொப்பிலாச்செம்மலாகி யோதம்மொடொலிநீர்சூழு
நற்புவிபுகழவர்தா னுமமும்பின்னேகாண்டும்.

ஆரணங்காணவொண்ணு வறப்பெருங்கடவுளீந்த
பூரணமாமெய்ஞ்ஞானப் பொக்கிடத்திறவுகோலைப்
பாருளார்க்கீந்துதானும் பலனுறும்பாவல்லோனும்
பேரணாற்பெயருங்கேண்மோ முகியித்தீன்பிச்சையன்றே.

---

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 3 | 19 | விளங்கின | விலங்கின |
| 7 | 6 | ஓவுள்ள | ஓதவுள்ள |
| 7 | 27 | மானம்அபிமானம் | மானாபிமானம் |
| 7 | 29 | புவிரேழும் | பூவீரேழும் |
| 9 | 20 | கானா | கானாக் |
| 11 | 26 | தோங்கப் | தோங்கக்கண்டு |
| 13 | 30 | அறிதாமொரு | அரிதாமொரு |
| 16 | 26 | இட்டவை | இட்டம்வை |
| 17 | 22 | டொத்தசிமத் | டொத்தசிபத் |
| 21 | 26 | வெளிபாய்ந்து | வெளியாய்ந்து |
| 22 | 3 | தானாகின்ல | தானாகின்ற |
| 30 | 26 | வேறந்திரமா | வேரந்தரமா |
| 31 | 6 | வோரந்திரமா | வோரந்தரமா |
| 32 | 22 | பின்னொடர் | பின்றொடர் |
| 36 | 12 | பில்லாவிலே | யில்லாவிலே |
| 41 | 18 | மும்முல | மும்மல |
| 45 | 5 | ஆலம்பத | ஆலம்பல |
| 47 | 26 | நமனன்று | நமனென்று |
| 49 | 25 | வைத்தாலும் | வைத்தானும் |
| 54 | 19 | ஞனசூட்சம் | ஞானசூட்சம் |
| 56 | 14 | சாட்டிகாளிடை | சாட்டினாளிடை |
| 56 | 16 | பூட்டிநாளவ | பூட்டினாளவ |
| 58 | 23 | றல்லறிவாம் | நல்லறிவாம் |
| 59 | 31 | மஹா-ப | மஹா-றி |
| 60 | 12 | றெழுந்துமந்து | றெழுந்துவந்து |
| 60 | 25 | பெருகன்றே | பெருகலன்றே |
| 63 | 25 | பாதமெறி | பாதமறி |
| 64 | 10 | பெற்றாளே | பெற்றாள |
| 64 | 16 | தொழுதனைய | தொழுதணைய |
| 64 | 25 | யகவொளி | யகவெளி |
| 66 | 11 | அளல்பெருக | அனல்பெருகு |
| 67 | 33 | தனையனந்த | தனையணைந்த |
| 76 | 14 | நெடுநள் | நெடுநாள் |
| 76 | 26 | விட்டாடா | விட்டாட |
| 79 | 30 | கடந்துதேக | கடந்தேக |

பிஸ்மில்லாஹி.

ஹக்கீகத்துஹக்கு

# மஃறிபத்துல் நிக்காஹு

என்னும்

## மெய்ஞ்ஞானமங்களவிவாகம்.

---

வெண்பா.

முப்பொருளாய்முச்சுடராய் மூன்றுமொன்றாயுள்வெளியா
யப்பூ அல்ஹம்தானபுகழாதிபா—ஒப்பாந்
திருமணமாமங்களநற் க்ஷேமமிகவெங்கு
மருமணமேயாண்டருள்காப் பாம். (௧)

இதுவுமது.

எழுகண்ணையோர்பொருளாய் எங்குநிறைந்துள்ளடங்கா
வாழுங்கலிமாவுவந்த வல்லோனே—நாளுமுன்றன்
நாட்டமாமெந்நாளு நாடுமணக்காட்சிமிகு
நீட்டமா மிங்குதவி நீ. (௨)

இதுவுமது.

முப்பொருளுமொன்றாய் முழங்கிநின்றநாதவொளி
யப்பொருட்குமுன்னெழுந் தனாதியா—யொப்பருளும்
சொல்லாற்பொருளாற் றேற்றநிகரற்ற
வல்லானை வந்தனஞ்செய் வாம். (௩)

இதுவுமது.

எட்டாப்பொருளா யிணையற்றுயிர்க்குயிரா
யொட்டாப்பொருளா யுவந்தோனே—கிட்டுதவம்
பெற்றோருட்காட்சிவெளி பேசும்நிக்காகுலகிற்
கற்றோர்க் கியம்பவிறை காப்பு. (௪)

இதுவுமது.

மாமதத்தைப்பூட்டிடுந்தூர் மங்கையர்கண் வீசும்வலை
யாமவத்தை நீக்கிவெளி யாகவே—மாமதத்தை
போக்குமொருசொல்லாற் புகட்டிவைத்தசற்குருவை
வாக்குமனமொன்றுறக்கொள் வாம். (ரு)

இதுவுமது.

முன்னாளிற்கண்கண்டு மோகித்தலான்மருண்டு
பின்னாளுருகிவரப் பேசவே—யன்னாளிற்
பெண்ணாசைதானென்ற பேதலிப்பைநீக்குமகக்
கண்ணானநாதனடி காப்பு. (சா)

இதுவுமது.

விழிமருட்டுமாதர் வெளிமருட்டையோட்டி
வழிமருட்டிடாமன் மருட்ட—விழிமருட்டி
பார்க்குமிடைநேரொளியாம் பாருள்நிக்காகுசொல்ல
காக்குமகதானவனீ காப்பு. (எ)

---

## நூல் வரலாறு.

சூவர்முச்சுடரேற்றி முன்னிருத்திப்பார்க்கமதி
தாவரத்துள்ளாயிரத்தெட் டானவூர்—யாவருக்கும்
அஞ்சுபேருழியஞ்செய் யம்பலத்துக்காரரொரு
செஞ்சொனிக்காஹுவையினைச் சேர். (க)

இதுவுமது.

விள்ளுதற்குநாட்டம் விழிமறைத்தலுநாட்டங்
கொள்ளுதற்குவாட்டமுறக் கூரிருள்போம்—விள்ளுதற்கு
அல்லாமுகம்மதுவு மாதருடனோர்மனமாம்
வல்லநிக்காஹுவெழுது வாம். (உ)

இதுவுமது.

திருத்தமிகுமேந்திழைக்குந் திருவகமதீர்பெயருட்
பொருத்தமொன்றுகண்டறிந்து பூட்டுமா—திருத்தம்
மகரெழுபத்தீரா யிர மணிபொற்காசென்
றகமளித்திடாறுத்த லாம். (ங)

கட்டளைக்கலித்துறை.

ஆநா-மாநா-புத்ரன் அகமதுசத் மாப்பிள்ளை யானவர்க்கு
கூநா-நாநா-புத்ரி-ஆமகம்மது சித்தக்குண மெனும்பெண்
ணானதுக்காகக் கொடுக்கும் நிதிபதி னெண்ணாயிரமாந்
தேனார் ஸ்ரீதனம் நிலமஞ்சுமீந்ததைச் செப்புவனே. (௪)

இதுவுமது.

ஐநூறுவருஷத் தடிப்பாடு றம்புவி யாமதிலே
னமயூறுமற்றசதுர் நாலுதிக்குடன் மத்திபத்திற்
கையாளுங்காணி யஞ்சானதுக்கும் வாசலொன்பானென
வையம்பரம்பரைவாழ்கக்கடுத்தம் வரைந்தனரே. (௫)

இதுவுமது.

ஐந்நூறுவருஷ மொருநாளதாக்க வமைந்தகணக்
கைந்நூறுவருஷத் தொலைதூரமுள்ள வமூர்தகுளம்
ஐந்நூறுவருஷமுன் போலமைத்தே தொகையாமறிவாம்
ஐந்நூறுவருஷவாரியுங்கண்டு வரைந்தனரே. (௬)

இதுவுமது.

பூங்காவனமும் பொங்குதேனாரைம் புலனொடுங்க
ஆங்காரங்கொண்டெழு வேங்கைவிளங்கினமாடிடும்புட்
டேங்காமற்றாங்கிச் சுழன்றெழும்வாசஞ் சுகிப்பதற்கு
ஓங்காரக்கோட்டையுஞ் சொந்தமெழுதி யொப்பிட்டதே. (௭)

இதுவுமது.

பானுமதிபெரும் பூவுலகேழுயிர்ப் பல்லினமும்
வானுஞ்சிறந்த மலக்குடன் கூறல்ஹீன் மற்றெவையும்
மீனுமறுசுங் குறுசுங்கலம் லௌகு மேன்மைவகை
தீனானுவந்தர சாளென்று மெய்யொப்பந் தானிட்டதே. (௮)

இதுவுமது.

கோனானுமட்சரத்து டுறவாக்குங் குணமெனும்பெண்
டானானுகென்றினி தா மடங்காப்பொரு டானளித்துத்
தேனானுமின்பமொழிவாலை காட்டுஞ் சிதானந்தமெய்
வானாள்மதியரியொன் றுரு வென்றென்றும் வாழ்கமன்னே. (௯)

ஹக்கீகத்துஹக்கு மஃறிபத்துல்கிக்காஹூ என்னும்.

### வெண்பா.

றானென்றபீங்கானில் றட்பமாய்மேலழுத்தி
பானென்றமுதூட்டப் பருகியே—வானென்ற
பெண்ணுமுகம்மதுவைப் பேணிநின்றதாதியர்நா
லொண்ணுகவாழுங்கோ னுள். (கo)

### இதுவுமது.

தானேதனித்ததுவாய்த் தன்னரசாயெங்குமுள்ள
வானுகவொப்படங்கா வண்மையாய்த்—தானே
யுள்ளுவந்தநாத னேசைதொனியாங்கலிமா
வுள்ளமையைக்கண்டுவந்த தூன். (கக)

### இதுவுமது.

கோலாமரசியவர் கொலுவிற்றிரைநீக்கி
மாலகமதாவஷூக்கின் மாவஷூக்கா—யோலம்
மருவியணிந்தோரலிபு வாசமுற்றமுச்சுடராய்
வருவிசலமிங்குவிள்ளு வாம். (கஉ)

### கட்டளைக்கலித்துறை.

மதியா முகம்மதுமறவாமலுள்ள மகிழுதற்கு
விதியா யகமதுங்கதிர்போ லிருவருமின்பக்கினி
கதியே கொடுக்கு மிப்பொருள் மூன்றுமொன் றுறக் கண்டவர்க்கு
பதியாமிரேழுலகதி பன் லிக்காவது பாலிக்குமே. (கங)

### விருத்தம்.

எனையுவந்துதொலை தூரங்கடந்துவந்தீர்
எந்தனருட்பிராண னெனவிசைத்தமன்னு
வினையறுத்துவிடாறுத்து வஞ்ஞானமற்று
விவேகமுற்றமெய்ஞ்ஞான விஞ்ஞைவக்கற்று
தனைபறியவந்த வரலாறும்பெற்று
சரணமெனக்கால் பிடித்துத்தழுவுமன்னு
எனக்கென்ன கொண்டுவந்தீ ரென்றேகேட்க
ஷிருளற்ற ஹயாத்துனக் கென்றீந்ததாமே. (கச)

### இதுவுமது.

உனது ஹ்றயாத்தது வீந்துகலந்திருக்க
ஓசைதொனி நாதவெளி யொளியுண்டாக்கத்
தனதொளியி லிரவிமதி யண்டபிண்டஞ்
சக்கரஞ் சூழகவிடம் பல்லுயிருமீன்றாய்
எனதுவிரு கரமிருந்த வகைகாணாது
விடும்பருனே வேறென்று மெனைவேறென்று
தனையறியாக் கிடருண்டா மிரண்டுமொன்றாய்த்
தானறியப் பவமிடருந் தவறிப்போமே. (கரு)

### இதுவுமது.

தவறிப்போம் பெண்ணாசை பொருளின் ஆசை
தாவரத்துன் மண்ணாசை மறுக்களாசை
தவறிப்போங் கன்மவினை பாவதுன்பஞ்
சரணமன்னோன் மணியிருதாள் சார்ந்துபோற்ற
தவறிப்போ மிருவினையஞ் ஞானமோட
சன்மார்க்க மேவுமெய்ஞ் ஞானம்நாட
தவறிப்போம் எமலபிபோம் ரவிமதியொன்றாகி
சார்ந்தபர வெளியொளியின் பவனியாமே. (கசு)

### இதுவுமது.

பவனிவருந் தெருவதுநற் குணநேர்கொண்ட
பரவெளியா மகதுகதொன் றாகப்பாரு
பவனிவருந் தொனியொலி யிங்கிதஞ்சொல்ல
பாரில்நிக ரேதேதுபக ரொண்ணாது
பவனிவரு மெனதுமன்னோன் மணியென்தாயார்
பரித்தெடுத் தணைத்துமுகம் பார்க்கும்போது
பவனிவரும் அகம்து முகம்மதைக்கண்
பார்க்கயானங் குறுமகத்வப் பதஞ்சொல்வேனே. (கசு)

---

பிஸ்மில்லாஹி.

## பவுனியலங்காரப்பதம்.

இ-ம்-காம்போதி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

பரனருள்பெருவெளி பவுனியுல்லாசவொளி
பார்த்துவருகவாருங்கள் ஜெகநிறைமதியிறையொளி
பார்த்துவருகவாருங்கள்.

அனுபல்லவி.

அறமார்தவப்ரயோகா ஆர்க்குபகாரணிகா
அகவெளியதில்காட்டும் அதியிருளதையோட்டும்
அதிதவமொருமக மதுமுகம்மதுசிபத்
தழகுதாத்தொருபொரு டழகுமாமணிபெரும் (ப)

---

பிஸ்மில்லாஹி.

அகம்மதுவென்னும் பரமவிராசருக் கிசைந்த முகம்மது
வென்னும் மனோன்மணி மணவாளி சீவித்திருக்கும்
மணவறையில் தன்னழகைக்கண்டு ஆனந்தகெம்பீர
அகக்கிளர்ச்சியால் பாடிய விசித்திர

பதம்.

மங்கையர்க்கெல்லாஞ் சிலாக்யமென்ற வர்ணமெட்டு.

பல்லவி.

திங்களதிரூப சிலாக்யம் இவளுள்ளிலை
சேர்ந்தணைந்திருந்தாள் யோக்யம்.

அனுபல்லவி.

மங்கையென்று சொல்லா தவளுபரு
பங்களோ டொழுகுங் கருபாய்வரு
மூதுமாமதியோ முகமீதொளி
கோதிலாகுழலோ கருவண்டொளி குணமும் ஓ. ஓ
குணமும் மனமும் ஸ்தனமும் கனமுங்
குமுகுமெனபா னமுதந் தருவாள்
கோனேடிலவிய மா மயில் ஆ ஆ
கோனேடிலவிய மா மயிலன் புவி
மானுருவமையற்றேனே மொழியொளி (திங்க)

சரணம்.

பம்பரம்போலாடும் மாது நடனகீதம்
பாரிலொப்பிடவொவ் வாது
உம்பர்தொழும்பாத சாது மெய்ஞ்ஞானானந்தம்
ஓவுஉள்ளமீதாள் தோது
தம்பமென்றடி போற்றி யிரேசக
கும்பகம்பூரகெம்பீரமேபெற
தகைப்புறுந்திட வேமதி பானமு
தினையருந்திடவேதரு மோனமுங் குணமும் ஓஓ. (திங்க)

மாவடுப்பிளப்போமை விழி இடைப்புருவம்
மாமதிச்சுடரோடீ டொளி
காவெடுத்திசைப்போதேன் மொழி நவரத்தினம்
நல்லொளிபரப்போபல்லொளி
காவடுத்து நின்றேமிக போற்றி பொற்
கால்பிடித்திடை யே அலிபேற்றிநற்
கமலமீதடங்காஷக்கெனுந் துடி
எமலபியறத்தோடியதேன்குடி குணமும் ஓஓ. (திங்க)

வாலையென்றநாம மெடுத்தாள் அணைந்தபேர்க்கு
வாலைப்பருவத்தைக் கொடுத்தாள்
காலனைக்காலேற்றி யடித்தாள் கதியாமோக்ஷங்
காலடிதொழுவே கொடுத்தாள்
தாலமென்றசகீரதிலே நிறை
யாலமென்றகபிரதிலேதுணை
நாயகத்தன மீம்தலை சூழ்கிற
நேயம்வைத்தலி போடணைந்தாள்கிற குணமும் ஓஓ. (திங்க)

மானம்அபிமானம் விடுத்தாள் பரவெளியில்
வந்துவிளையாடத் தொடுத்தாள்
வானம்புவியேழும் படைததாள் இவட்கிசைந்த
மாப்பிள்ளையனந்த மெடுத்தாள்
பானமென்றவள் கொங்கையி லூறிய
தேனையுண்டிடமாதவ மீறிய
தகைமிகுந்தவளாழிவ ளற்புத
வகையளித்தலிபோடணை சொற்பத குணமும் ஓஓ. (திங்க)

அ ஹக்கீகத்துஹக்கு மஃறிபத்துல்நிக்காஹு என்னும்

முச்சகம்புகழ்ரா ஜஸ்த்ரீதான் இவள்யோக்யவதி
மூவுலகடங்காச் சோதியோன்
கச்சில்லாஸ்தனக்கஸ்தூரி தேன் கமலெளி
காட்டிநின்றிசைத்தாள்முஹியத்தீன்
பிச்சையென்றவனுக்கதி காரணம்
விச்சையெட்டும் நிறைபரி பூரணம்
கோன்முகம்மதகமதுங் கூடியே
வான்புவிக்குயிராகநின் றூடிய குணமும் ஒஓ. (கிங்க

---

பிஸ்மில்லாஹி.

அகமதுமுகம்மதும் இரண்டுமொன்றான விவாகசம்பந்த முறவை
த்த நஞ்சைநிலம்நான்கின் திருடர்களால் சோரம்போனநெல்
தொகை கணக்கை நாலுமூவர்களு முறையிடும்விருத்தங்கள்.

## சதுர்கோண நிலத்துழவன் சொல்.

விருத்தம்.

நாத்திகா வெனுமுழவன் நயந்தே யெல்லே
நாலுசதுர் கோணவட்டத் தடியின் நெல்லே
காத்திருக்குங் களஞ்சியத்தி லென்கண் பார்த்து
கன்னமிடும்போது மறந்தயர்ந்து நித்ரை
பார்த்தவனும் வெளியிழுக்குந் தொனியைக்கேட்டு
பாரிலிரு பங்குதள்ளி யொருபங்கள்ளி
சேர்த்தெடுத்து ஏகுவித விபரஞ்சொல்லச்
சேவித்தேன் திருச்சரண மேவித்தானே. (க

சந்தம்-தரு.

பல்லவி.

தன்னன நானன் நானன நானன நானன நானன நானே தன
தானன நானன நானன நானன நானன நானன நானே

அநுபல்லவி.

வான்பொழிந்தேனமுதோடியநாவூரு
வள்ளல்சொற்கேளாவிட்டதற்கு மதி
தேனிகரானபவழப்பூசம்பாவின்
சேதத்தைசொல்கிறேனுண்டே. (உ

எட்டுபடிகொள்மரக்காலிட்டள்ளி
யிருபத்தொராயிரநானூறு கோட்டை
கட்டிக்கொண்டேகையில் மூன்றிலோர்பங்கைதன்
கைவசமாக்கினானாண்டே.

---

## திருகோண நிலத்துழவன்.

சொல்-விருத்தம்.

ஆளடிமை கொண்டாளு மாண்டேகேளீர்
அடிமைநாயியாவெனக்கிங் கவத்தைமெத்த
நீளமென்றவிருகோணநிலத்திற்காணும்
நெல்விரைத்தகளஞ்சியத்திற்கொள்ளையிட்டவ்
வேளைவிழியாதிருந்துதூக்கத்தாலே
வீறுடனேயிழுத்ததிருமோசைகேட்டேன்
கோளனென்னைக்கண்டவனுமூன்றிலொன்றைக்
கொண்டெழுந்தமா விவரங்கூறுவேனாண்டே. (௪)

தரு-சந்தம்.

தன்னன நானன நானன நானன நானன நானன நானே தன
தானன நானன நானன நானன் நானன நானன நானே.

கண்ணூரில்வாழுங்கபிபுராட்டாமைசெய்
கட்டளையைமறந்ததிற்குக் காணா
கன்னக்கோல்வைத்துக்களஞ்சியத்தில்நெல்
களவுசெய்தானே யென்னாண்டே. (௫)

பன்னிரண்டாறுபடிகொள்மரக்காலைப்
பாய்ச்சிஈரேழ்நானூறுகோட்டை கட்டு
முன்னமேமூன்றுகபங்கிட்டொருபங்கை
மோசநாசஞ்செய்தானாண்டே. (௬)

---

## அறுகோண நிலத்துழவன் சொல்

### விருத்தம்.

மூவிரண்டு கோண நிலத்துழவன் நாமம்
மொழிய நாக்கிமா இருதாளடி சேவித்தேன்
தீவிரமாக் களஞ்சியத்தி[illegible]ன்னம் வைத்துத்
திருடுநெல்லை வெளியிழுக்கும் போது சத்தம்
கூவுமந்தத் தொனியறிந்த கொடியோனெஞ்சங்
குலைந்துதடு மாறியிருபங்கைப்போட்டு
தாவுமொரு பங்கெடுத்தான் நெடுநாளாகச்
சகிக்கமுடியாத சலிப்பறைவே னண்டே. (எ)

### தரு-சந்தம்.

தன்னன நானன நானன நானன நானன நானன நானே தன
தானன் நானன நானன நானன நானன நானன நானே.

கீதமுழங்கிடுங் காஞ்சியூர் வேடன்சொல்
கேளாதிருந்து விட்டதற்கு வெளி
காதமணக்குங் கஸ்தூரி சம்பாநெல்
களவுசெய்தானே யென்னண்டே தன்னன (அ)

நாற்படிகொள்ளும் மரக்காலைப் பாய்ச்சினன்
மூவாயிரமுனூறு கோட்டை கட்ட
காலாட்டங் கண்டிட மூன்றிலோர் பங்கைத்தன்
கைவசமாக்கின னண்டே தன்னன (௯)

---

## முக்கோண நிலத்துழவன் சொல்

### விருத்தம்.

தாத்துசி பத்தாகி யிரண்டொன்றாய் நின்ற
சதானந்த சத்திசிவப் பொருளே போற்றி
கூத்தனுமி யாகாக்கும் நிலமுக்கோணக்
குண்டடியின் நெற்களஞ்சி யத்திற்கொள்ளை
பார்த்திருக்க மூன்றிலிரு பங்கைத்தள்ளிப்
பயமறுத்து வெளியிழுத்தோர் பங்குமள்ளி
வேற்றுமையற் றெமனுறவாய் சிநேகஞ்செய்ய
மேன்மையுள்ளா யுனதருட்செய் திடுவையாண்டே. (௧௦

## தரு-சந்தம்.

தன்னன நானன நானன நானன நானன நானன நானே தன
தானன நானன நானன நானன நானன நானன நானே

ஊருக்கதிகாரி குஞ்சரத் தேவன்சொல்
லுள்ளம்வையா திருந்ததற்கு ஆதி
ஈறுடனின்று களஞ்சியத்திற் கொள்ளை
யிட்டுக்கொண் டேகினு னண்டே தன்னன. (கக)

ஏர்றுபடிகொள் மரக்கால் மூவேழா
யிரத்தறுநூறு கோட்டையுள்ள முன்னே
பேரராடிக் கொள்ளவே மூன்றிலொருபங்கைப்
போட்டுவிட் டேகினு னண்டே தன்னன. (கஉ)

சூக்ஷவுலகத் தலைவன் சளிமூக்கன்
சொல்லைமறந்து விட்டதற்கு நல்ல
வாச்சுதென்றேமணி முத்துசம்பாக்கொள்ளை
வாரிக்கொண் டேகினு னண்டே தன்னன. (கங)

உள்ளநாளெல்லாங் கொடுங்கொள்ளை செய்கிறு
னுள்ளூற வாடிக்கொள் ளாமல் உல
குள்ளுள்ளே வாழ வுறக்க மறதி
யொழித்தென்னை யாளுமென் னண்டே தன்னன. ()

போன பொருளெல்லாங் கூடவே யெந்தன்
புத்தி சிவாயத்தை நாடி தினம்
வனம் பொழிய பயிர்விளைய வாசி
வரவழைத் தரு ளாண்டே தன்னன. (கரு)

சொல்லுமவ் வாதி திருவரு ளானந்த
சூக்ஷவரியெடுத் தோங்கப்
பல்லை யிளித்தேமன் கள்ளனெல்லாமுன்
பதுங்கிப் பணிந்தன ராண்டே தன்னன. (கசு)

இவ்விதம் அங்ஙனம் நடைபெறும் இடர்களை யியம்பும்
உழுவர்கட்கு அகமது முகம்மதும் ஓர்மனதாய்
திடங்கூறுகின்ற

### கட்டளைக்கலித்துறை.

ஒன்றாகக்கூடி யுவந்தரசாளு முயிர்க்குயிராய்
நின்றாதரவாய் நிறைந்தடங்காமன் னிராமயத்தை
நன்றாகக்காண விருளுள்ளுறும்பொரு ளுட்டமுற்றால்
குன்றாதவாழ்வும் மாறாதசெல்வங் குறைவில்லையே. (௧௭)

---

முகம்மது வென்னும் மனோன்மணி மணவாளி சிவித்திருக்கும் மணவறையில் அகமதுவென்னும்பரமவிராச மணவாளருடன் உவந்தணைந்த ஆனந்த பாஸ்கர கெம்பீர உல்லாச சல்லாப கிளர்ச்சியால் பேசிக்கொள்ளும் சுவால் ஜவாப்.

### அலங்காரநாவடிச்சிந்து.

பல்லவி.

பிஸ்மில்லா ஹிற்றஹுமானி
திருவானீ யுறவானீ தொடர்
பேசவரும் ஹிற்றஹீம்னீ புகழ்
பெரிதாமறை புறுக்கானரு
ளியஞானமெய் யறிவாகவே
பெட்பருளும் பெரியோனே யுன்னை
எப்போதுள்ள மறவேனே (பிஸ்)

அல்கம்தெனும் நிறைக்தோனே
அடங்கானே செழுந்தேனே உயிர்க்
காதரவான ஈமானே விந்தை
அறிவானதி லறிவாமொரு
பொருளானதி லுறவாய்வெளி
யாடிய பேரொளி தானே ஞானம்
பாடவுன் காப்பிசைத் தேனே. (பிஸ்)

ஆதிமுன்னேரொளி யாகி
மணியாகி மயிலாகி இந்தி
லாகியெக்கீனுமு ண்டாகி ஆதி

அழகானபன் னிறமேவிய
குணமானப சுதிகள்நாலென
அம்புவியில் நாவியார்க்கும் மிகு
வின்புற வந்தனஞ் சேர்க்கும் (பிஸ்)

அந்தமிலங்கு மெய்ஞ்ஞானம்
மிகுமோனம் தினம்யானும் அக
மகிழ்ந்துசொல்லுதற் கானும் சொந்த
அருள்பெற்றிரு வினையற்றிட
பொருள்பெற்றிட கதிபெற்றிட
ஆதரவாய் முகம்பார்ப்பாய் கவி
யானதிற் குன்னருள்காப்பாம் (பிஸ்)

ஆவென்று ஊவென்றதாரு
அதைக்கூறு வகைபாரு ஞான
அரிமதிதரும் பேரு இதை
யறியாதவர் புவிமீதுநான்
குருவென்றுப தேசமெலாம்
அருள்வித்ததே பொல்லாச்சூது உந்தன்
பெரும்புத்தி மிரண்டுகொள்ளாது (பிஸ்)

றசூலாயிருந்ததே மின்று
வெளியென்ன நம்பிலென்ன அந்த
ரூஹஷமியம்புமென் முன்னால் மிகு
சடராமதி யுறவானது
அறியாதவர்க் கிடரானது
சூழ்ந்ததென்ன சுகமாதே பாதம்
தாழ்ந்து பணிந்தேனிப் போதே (பிஸ்)

ஆதமேமுந்தது மென்ன
ஹவ்வாவென்ன அலியென்ன மண
மாகிய பாத்திமா வென்ன தேட
அறிதாமொரு பொருளாமசன்
குசனுந்திரு வசனமெனக்
காதர வாருள் வாயே புவி
மாதர்க் கரசியாம் நீயே (பிஸ்)

பாத்தினநம்முள்ளே தேறு
ஹக்கைப்பாரு திருவுருக் கதி
பாக்கிமா வானந்தங் கூறு மக்கப்
பதி[illegible] யவர்மாமணம்
பெறவேதிரு வுருவாகிய
பாலர்ஹசன் ஹுசை னோது அறி
வானந்தஞ் சொல்லாயிப் போது (பிஸ்)

உன் கேள்வியைக் கேட்கிறபோது
உள்ளவாது புவிமீது மதி
கிருகிருக்கு திப்போது நல்லக்
கேட்கும்படி யார்க்குமுறை
பார்க்குங்கதி சேர்க்கும்அதி
செம்பிர மாய்ச்சொல்லு வேனே உல
கின் சறகால் மொழி யேனே (பிஸ்)

சறகாலேமெய்யைப் பொய்யாக்கும்
யிருளாக்குங் குருடாக்கும் விதந்
தானுனக் கேனிந்த யோக்யம் ஓதும்
சதுர்மாமறை வெளியானதி
லுறவானசொல் லுருவாய்வரும்
தார்மணம் போலுள்ள மாதே மொழி
வாயிந்த சூட்சமிப் போதே (பிஸ்)

சூக்ஷ மியம்பிடு மென்றாய்
கதிகொண்டாய் ஆதிதொண்டாய் ஞானஞ்
சொல்ல முடிவுக ளுண்டா பதி
சுகிர்தக்கலை யதுவுற்றெழு
மிடமுற்றொளி மதியப்பொருள்
சொல்லுமுன் னானந்த சூக்ஷங் கண்டு
கொள்பவர்க் கேதரு மோக்ஷம் (பிஸ்)

எட்டிரண்டு மான தென்ன
அதிமின்னு ஹக்குமுன்னு மிட
வலமுன் னேறின தென்ன திசை
எங்குமொளி பிரகாசமே
யங்கமதி நிறைவாசமே

எகனிட முற்றதாமே அறிந்
தே யமர்செய் யிருட்போமே (பிஸ்)

ஒன்றைப்பிடித்துக்கொண் டாட
உறவாட ஒளியாட ஞானம்
ஓத அந்தகார மோட தரும்
உள்ளப்பொருள் வெள்ளக்கட
லள்ளக்குறை யாநித்தரும்
ஓத்முடி வற்றதாமே நின்று
சாதித்தவன் சித்தனாமே (பிஸ்)

ஓரெழுத் தானது மென்ன
உடலென்ன உயிரென்ன இதி
யற்ற கருவெழுத் தென்ன அது
ஒன்றோடுற வொன்றாகநஞ்
சுண்டானது கண்டாலுல
குள்ளவர்க் குள்ளிருட் போக்கும் ஞானஞ்
சொல்ல அகங்களிப் பாக்கும் (பிஸ்)

ஈரெழுத் தானது மென்ன
இருளென்ன அருளென்ன அது
எங்கிருந் தானது மின்னு பதி
இல்லமிரு ளல்லும்பக
லுள்ளமதி சொல்லுமிறை
இன்புற் றணைந்ததுந் தானே தொழு
தன்புற்றவன் பெரியோனே (பிஸ்)

மூவெழுத் தானது மென்ன
முடியென்ன அடியென்ன நடு
மூப்பொரு ளானது மென்ன ரத்ன
முத்துத்தொடர் பச்சைத்திரு
வைச்சித்திர முற்றத்தது
ஓதநிக ரற்ற தாமே புவி
யேகமும் நின்றர சாமே (பிஸ்)

நாலெழுத் தானது மென்ன
நந்தியென்ன சிந்திப்பென்ன ஹக்கை
காட வுணர்வான தென்ன விக்கை

நாதம்மதி கீதங்கதி
போதார்ந்தி வேதம்விதி
நட்புற வோதின தேது எனக்
கற்புதஞ் சொல்லாயிப் போது (பிஸ்)

அஞ்செழுத் தானது மென்ன
நஞ்சுமென்ன பிஞ்சுமென்ன உல
காளுந் திருவெழுத்தென்ன அடி
ஆதாரம தாய்நின்றது
தாதாகவந் தேவிண்டதும்
ஆர்க்குமீ தற்புதமாமே கண்ட
பேர்க்கதி மெய்ப்புகழாமே (பிஸ்)

அஞ்செழுந் தாய்வந்த தெங்கே
பிஞ்சுமெங்கே நஞ்சலெங்கே உயிர்க்
காதியானமவுத் தெங்கே காண
அறியாமலே விதியாமென
மதிமோசமா கிடுவார்தினம்
ஆதரவா யுள்ள மாதே மன
வாதறச் சொல்லாயிப் போதே (பிஸ்)

பிஞ்சு உதிர்தலு மேது
வெளிபீது அழிவேது வேறில்
பின்னிய நஞ்சதின் தீது மரம்
பேணுவிதி காணுமதி
வீணுமிதி வாணுள்கதி
விட்டவர்க்கே பொல்லாக்கேடு இறை
இட்டவைத் துள்ளுற வாடு (பிஸ்)

ஆதி மறுத்தபா வென்ன
அஹதென்ன உஹதென்ன வாஹி
தாகுமுன் ஞகின தென்ன ஆல
மெல்லாம் நிறை வல்லான்பொரு
ளெல்லாவிடுத் துள்ளமிரு
ளின்புற்றணைந்தது வாமே அறி
தன்புற்றவர்க் கிருட் போமே (பிஸ்)

ஏழுமக்கா மான தென்ன<br>
    விடமென்ன திடமென்ன ஏக<br>
மானபரவெளி யென்ன கூராய்<br>
இருளற்றது ஒளியுற்றது<br>
    அருள்பெற்றதுபொருள்பெற்றது<br>
இவ்விடம் நின்று லாசானே பாதம்<br>
கவ்வித் தொழுமென் னேசனே (பிஸ்)

மன்கிலே மூாகின தென்ன<br>
    வழியென்ன வெளியென்ன வாடா<br>
மலிருந் தாடின தென்ன ஆல<br>
மணமுற்றிரு வினையற்றது<br>
    குணமுற்றவர்க் கினைத்திட<br>
வாயற்றசை வற்றதாமே துன்ப<br>
மாய்வற்றிருந்தது வாமே (பிஸ்)

சொல்லுஞ்சி பத்தேழு மென்ன<br>
    தொழிலென்ன சூட்சமென்ன இன்ப<br>
துன்பமற் றுள்கிற தென்ன அது<br>
துணையற்றது இணையற்றது<br>
    தனையுற்றதி மணமுற்றது<br>
சுத்தமயப் பொரு ளாதி தாத்தோ<br>
டொத்தசி மத்தறிந்தி (பிஸ்)

ஏழு நபுசான தென்ன<br>
    வெழுத்தென்ன கருத்தென்ன<br>
சாவற்றேயிருந்த நபுசென்ன நந்தி<br>
ஏகன்னெறி யோகம்மறி<br>
    தாகந்தறிப் பாகுங்குறிப்<br>
பில்லாத வல்லப மாமே தெளிந்<br>
துள்ளங்கொள்வார்க் கிருட்போமே (பிஸ்)

சொல்லாமற் சொல்கிறே னேரு<br>
    அதைத்தேரு விந்தைபாரு ஒட்டா<br>
குக்ஷதின் றுடின வாறு ஆதி

தொண்டர்க்கிறை விண்டற்புதங்
கொண்டார்க்குமெய் விண்டால்கதி
சூக்ஷமறியலா மாயா திருக்
காக்ஷிதருங் கருணையா (பிஸ்)

மூடி விழித்துள்ளே பாரு
முகநேரு திருவுரு ஆதி
முன்னுரைத் தானதைத் தேறு கந்த
முனையின்கதி ரொளியானது
விரிவானபன் னிறமாகவே
முன்னொளியின் பின்னிதாமே யிட
ரென்னுங்குபி ரிருட்போமே (பிஸ்)

ஐம்பத்தோ ரக்ஷர மென்பார்
அடியென்பார் நடுவென்பார் முடி
யாமறிவுகண் டோமென்பார் கூத்
தாட்டுமதை வாட்டுமுறை
தீட்டுநெறி யாகின்றவர்
அண்ண லெனுஞ்சொல்ல லாமே யிந்த
வெண்ணமில்லார், சொல்பொய் யாமே (பிஸ்)

கோணம் பலவகை சொல்வார்
குணஞ்சொல்வார் குறிசொல்வார் பொல்லா
குற்றமுண் டானதுஞ் சொல்வார் உள்ளே
கோளான அஞ்சேழானது
வாழாவெளி பாழானது
கூத்தறி யார்க்கெல்லாங் கேடு தொந்தி
பார்த்து புசிப்பவன் மாடு (பிஸ்)

தீன்விதி தான்காணப் பாடு
மதிகேடு முழுமாடு யார்க்குஞ்
சாத்திரஞ் சொல்லுவார்க்கீடு கெவுளி
தானுமுயர் வானுங்கெரு
டானும்ஜெயக் தோணும்படி
சாற்றல்போ லாமிநதஸ் தூலம் சூக்ஷம்
பார்த்தறிந் தோர்க்கனு கூலம் (பிஸ்)

சொல்லிவிட் டேன்புவி யோர்க்கு
அறிவார்க்கு தெளிவார்க்கு ஷைகை
தொடர்ந்தறிந் திடும்பேர்க்கு வந்த
துன்பமறு மின்பமுறுஞ்
செம்பொன்னுல குங்கெம்பீரஞ்
சேரு மகத்துவம் பூட்டும் அரு
ளேளுந் திருவொளி காட்டும் (பிஸ்)

---

ஆடியுமாடா அடிமுடியில்லா அகவெளியீன்ற அரும்பொரு
ளான தாத்தன்னலூசலில் அகமது முகம்மது மொன்
றுகூடி அற்புதங்கண்டாடுகையில் கலிமாவின்
பஞபக்காவிபரித்தும் விபரியாநின்ற

## தாலாட்டு நாவடிச்சிந்து.

---

லாயிலாஹறயில்லல்லாஹு நீயா என்னில்
நடத்திமீராறுகலை நேயா நித்யம்
ஓய்வில்லாமுகம்மதுற சூலுல்லாமொழிவகைநீ
உவப்பாம் உள்ளந் தெளிப்பாம் (லாயி)

மூன்னெழுத்தில் பன்னிரண்டில் மூன்று பின்னே
முழங்கு மெழுத்திலிரு மூன்று காணு
அன்னெழுத்தையுந் தெளிந்து இன்னமும்
நபியிதுபாத் தறிவாம் மிகுவிரிவாம் (லாயி)

சொல்லுகிறேனின்னங் குபிர்சிறக்கு அதைத்
தொடர்ந்திட ரதுகண்டு நறுக்கு எமன்
வெல்லுமொருபொருளா யல்லும்பகலுமான
திருவாம் உயிர்க் கருவாம் (லாயி)

மூவேழுமூன்றுங்கூடி யாச்சு இனி
முப்பொருளானது நல்ல பேச்சு விந்தை
ஹாவெழுத்தும் ஹமெவெழுத்தும் ஹீயெழுத்துந்தேறியுள்ளங்
களிப்பாம் அகந் தெளிப்பாம் (லாயி)

மூவெழுத் தாவந்த வகை நேரு முன்னே
எழுந்தவழியறிந்து தேரு சொல்லும்
ஆவெழுத் தமைந்த விதம்நாவெடுத் துரைப்பதற்கு
அரிதே மெத்தப் பெரிதே (லாயி

மஹாவியத் தாக நிகரத்தே அதில்
மறைந்தபுதை பொருளாம் தாத்தை மிகு
தகுதிபெறு மிறைவன் மிகுதிப்பொருள னுனிற்
சாடும் வெளி நாடும் (லாயி

உள்ளெழுத்திலுள்ள முறவாடு அதில்
ஒட்டியும் ஒட்டாப்பொருளைக் கூடு வாழுங்
கள்ளெழுத்தும் வெள்ளெழுத்தும்வள்ளெழுத்துமான தின்
கருவே அறி வுருவே (லாயி

உருவாயிருந் தென்ன கூடா அந்த
உக்ஷிபத்துக்குட் பொருளை நாடா முன்னே
அருபாயிருந்தவஸ்தை யுருவாவெளி யரூபம்
ஆடும் ஒளி சூடும் (லாயி

பார்த்தவிடமெங்கும் வெட்டவெளியே எல்லாம்
படைத்தவன் தரும்பர ஒளியே ஹக்கைக்
காத்திருந்தபே ரொளி கண்ணேத்திரத்திடை நடுவிற்
கண்டேன் விந்தைகொண்டேன் (லாயி

சித்திர விநோத விந்தைக்கோட்டை நல்ல
சிறந்தலங்காரமுள்ள வீட்டை வாழும்
உத்தமி தனித்தரசு இத்தலத்து மாதுரிக
ராமோ சொல்லப் போமோ (லாயி

ஒப்பில்லா தரூப ரூபகண்ணாள் ஒரு
கருபிர்சிங்காரஞ் செய்த பெண்ணாள் சுக
பொற்பதிக்கரசு செய்யுமற்புத மகத்துவம் ஓ
பார்த்தேனே சொல்லு வேனே (லாயி

நாலுபேரிவட்கிசைந்த தோழி இந்த
நாடழிக்கவந்த பெருங்காளி மதிப்
மல்குடிக்க நாடியவள்காலிடுக்கிடை யிறுத்தும்
பதமே முத்தி தருமே (லாயி)

ஆனைப்படைகள்மிகு கோடி சிறி
தானமிருகப்படைகள் கோடி உள்ளே
தானிருந்தகோட்டைவெளி யாயிரத்தெட்டுபேர்
காவலடுத்தாள் சுகங் கொடுத்தாள் (லாயி)

ஆயிரத்தெட்டுப்பேரணி சூழ்க ஒளி
யாயகமதுடன்கூடி வாழ்க ஈன்ற
தாயுமிது தந்தையிது வாயிருந்ததென்று
மறியேனே முன்னம் யானே (லாயி)

அந்தமாதியில்லாரூப வதியே உயி
ரனைத்தரசாளும்பர கதியே அதி
விந்தைசூக்ஷாதிசூக்ஷம் வந்தவழியறிய
தொடுப்பாம் வைஷகை பிடிப்பாம் (லாயி)

சாரைநல்லபாம்புபோல பின்னி இந்த
ஜகமெல்லாம்ஆளுகின்ற கன்னி இவ
ளாரையுமிறட்டுகின்றாள் வேறுகண்டபேர்க்கு நர
கடுக்கும் துயர்கொடுக்கும் (லாயி)

அட்டதிக்குமேறிநின்ற காங்கை யார்க்கும்
அடங்காதெழும்பிநின்ற வேங்கை உள்ளே
கொட்டடித்தெழுப்பியம்பு தொட்டிழுத்து
விட்டுதைக்கத் துணிவாம் கண்டுபணிவாம் (லாயி)

அவ்வெனஉருக்கிவெளி பாய்ந்து வழி
அக்கரசிம்மாசனத்து டார்ந்து மதி
குவ்வெனதெளிந்துளத்தில் மவ்வதைமவுனம்வைத்துக்
கூடுங் கவி பாடும் (லாயி)

 ஹக்கீகத்துஹக்கு மஃறிபத்துமிக்காஹு—என்னும்

அண்டபகிரண்டமிறை வேறி புடை
யதிலிருந்தாளுகின்ல கிரி தொண்டு
கண்டடைத்தக்கினிமூட்ட நின்றபுகை யாலெழுப்பி
யுறக்கு முனைதிறக்கும் (லாயி)

எழுகடலோடிநின்ற வேம்பு குடி
யிருந்தரசாளுகின்ற பாம்பு மிகு
கோடிகோடிமானிடர்கண் ணுடை விஷமீறிகொத்தி
விடுதே உயிர்கெடுதே (லாயி)

எழுகடலேழ்பதிக்குங் கீழே சீறி
எழுந்தெங்குமோடிவருங் காளை பாயுங்
காலைகட்டிக்கலசந் தாளைநடுவிருத்திக்
கரக்கும் பால் சுரக்கும் (லாயி)

பெண்ணைக்கண்டாலாசைவந்த தேது அது
பின்னுமுன்னுமில்லா விருள் மீது தரும்
வின்னமற்றெழுந்தவொளி முன்னெழுத்
தொளிகண்டணைந் ததுங் குன்னென் றேதும் (லாயி)

குன்னென்றெழுந்ததல்லோ வாசம் பயக்
கூனென்றெழுந்ததல்லோ வேஷம் எங்கும்
அன்னென்றெழுந்தரசி லுன்னுங்கொடியிழுத்து
ஆளா வெந்தன் தோழா (லாயி)

தன்னில்தன்னைத்தேடுதற்கே அமைத் தான் கல்லான்
சராசரமாய்ப்புரிந்துகெடுத் தான் நித்ய
முன்னமூவாசையது நண்ணுமிப்பாச
உட லொழியும் உயிரழியும் (லாயி)

தெப்பக்குளத்தந்திரமேல் வீடு நல்ல
சிறந்தலங்காரமுள்ள மேடு தினங்
குப்பைகளொன்றாகத்தியிட் டுட்பொருளைக்
காணக்குளி ரொழியும் ஒளி நிறையும் (லாயி)

பூங்காவனமெங்குநின்ற கருவி நல்லோர்
புகழுதற்கானகருக் குருவி கண்
தூங்காமற்றாங்கிடுங்கூட்டில் பாங்குடன்பிடித்தடைக்க
ஜொலிக்கும் நயம் பலிக்கும் (லாயி)

பல்லுயிரைமாயவைத்த பாம்பு கெட்ட
பூனையரைக்கொல்லவொரு நோம்பு கண்டு
சொல்லும்பலபொருளொன் றுள்ள வகையறிந்து
சுகிப்பாம் நோன்பு பிடிப்பாம் (லாயி)

மக்காநகரைக்கண்டு மெச்சி நம்
மார்க்கமிசுலாத்திலாம் ஹச்சு விதி
தக்கபொருளெடுத்து ஹக்கன்கஃபாவின்முன்
கொடுக்கும் ஹச்சுக் கிடைக்கும் (லாயி)

மக்காமுகரதுவா னூரே மதி
நாவிலுயர்வழியின் னேரே செல்லும்
மிக்கானநபியிறசூல் தக்கசமாதிகண்டு
தேரா யொளி பாராய் (லாயி)

பைத்துல்முகத்திசுக்குள் நின்று திகர்
பளிங்கிக்கல்வான்வழியே சென்று ஆதி
தஹாத்துக்குறுசறுசு லக்குகலத்துக்கு மே
லானன் வெளி தானன் (லாயி)

கைப்பிடித்துநாடிசொல்ல நிசமாம் முகங்
காணுக்குறிப்பற்றவர்சொற் கசமாம் அந்த
மெய்ப்பிடித்தமாப்பிணிதன் மையறுத்த ஷைகடுத்தால்
வாழும் பிணி தாழும் (லாயி)

கல்பிலமுக்கிருக்க லாமோ மெய்
கழுவக்கழுவவிருட் போமோ ஞானங்
கல்லான்பிணியறுக்க ஹக்கிம்ஷைகிடத்திற் கால்
மடிப்பாங் கரம் பிடிப்பாம் (லாயி)

கடலாமருந்தது அல்கம்து அது
கலிமாவிலானவிதந் தேர்ந்து காண
வுடனுமுயிரொன்ருன வோர்பொருளாலே
இரு ளோடும் ஒளிநாடும் (வாயி)

அற்புதமெய்ஞ்ஞானசூக்ஷஞ் சொன்னேன் எமன்
அவத்தையால்வாடுதற்கு முன்னே மிகு
நட்புறமுஸ்லிங்களே யிப்பொருளதிந்திறையை
நாடும் தினம் பாடும் (வாயி)

ஏவல்விலகலெண்ணுப் பாவி யிரு
வினையறமுகியிதீன்பிச்சை கூவி வாழும்
ஆவியுறவிருந்து ஆளுமிறையென்பிழை
பொறுப்பாம் உவந் திருப்பாம் (வாயி)

கலிமாப்பொருளறிந்தோர் வாழி ஹக்கை
கண்டகாமிலானவைகும் வாழி இறை
அலிமாமனுர்சநகை வழுவாதவரும் வாழி
யாமே ஜெயமாமே. (வாயி)

தாலாட்டுநாவடிச்சிந்து

முற்றிற்று.

பிஸ்மில்லாஹ்.

# மனோபாஷிதப் பதிஞானம்.

## சந்தவிருத்தம்.

அலிபானதும் லாமானது மீமானதுமென்ன
    அதினூடுற வாநின்றஹே தாலானதுமென்ன
கலிமாமதி யொளியோரொளி காக்குமறிவென்ன
    காணுதவற் புதமொன்றது காட்டும்பொருளென்ன
வெளியாகுமெய் யுடலாதர வுறவானதுமென்ன
    வேதம்மறை வெளியாகுமுன் வெளியானதுமென்ன
சலியாதது மொலியாதது மொலியும்பெறலாகி
    ஜகமேவுமெய் யுயிருக்குயிர் தானுதரிமனமே. (க)

அலியென்றது லாமென்றது மீமென்றதுமெங்கே
    அதினூடுற வாநின்றஹே தாலானதுமெங்கே
கலிமாமதி யொளியோரொளி காக்குமறிவெங்கே
    காணுதவற் புதமொன்றதில் காட்டும்பொருளெங்கே
வெளியாகுமெய் யுடலாதர வுறவானதுமெங்கே
    வேதம்மறை வெளியாகுமுன் வெளியானதுமெங்கே
சலியாதது மொலியாதது மொலியும்பெறலாகி
    ஜகமேவுமெய் யுயிருக்குயிர் தானுதரிமனமே. (உ)

அலிபானதும் ஹேயாய்மீம் தாலானதுமென்ன
    அலிபேமீம் ஹேயாய்மீம் தாலானதுமென்ன
கலியாலது ஒன்றோடது கலந்தாடினதென்ன
    ஹக்கானது சொக்குமி றசூலானதுமென்ன
சலியாமையோ ரொளியானது வெளியானதுமென்ன
    சாவற்றது நோவற்றத மாவுற்றதுமென்ன
ஒலியாதது மொழியாதது முயிருக்குயிராகி
    யோதும்பலபொருளா மிகுதொன்றுதரி மனமே. (௩)

அலிபானதும் ஹேயாய் மீம்தாலானதுமெங்கே
அலிபேமீம் ஹேயாய்மீம் தாலானதுமெங்கே
கலியாலது ஒன்றோடது கலந்தாடினதெங்கே
ஹக்கானது சொக்குமிற சூலானதுமெங்கே
சலியாமையோ ரொளியானது வெளியானதுமெங்கே
சாவற்றது நோவற்றத மாவுற்றதுமெங்கே
ஒலியாதது மொழியாதது முயிருக்குயிராகி
யோதும்பல பொருளாமிகு தொல்லுதரிமனமே. (ச)

ஹூவானதும் வாவானதுங் கூடுந்தலமென்ன
குத்தோடெழு வித்தாயொரு முத்தானதுமென்ன
ஹாவானதும் ஹூவானது ஹீயானதுமென்ன
காலூன்றிய பஞ்சாட்சரங் கதிபெற்றதுமென்ன
ஆவென்றொரு பசுவாமுயி ரதுநின்றதுமென்ன
அளவற்றது பாவக்கட லதுதாண்டினதென்ன
மாவென்றதி லுறவாகவே மறவாதறிவோர்க்கு
மணமானது குணமானது தனமாமிதுமனமே. (ரு)

ஹூவென்றதும் வாவென்றதுங் கூடுந்தலமெங்கே
குத்தோடெழு வித்தாயொரு முத்தானதுமெங்கே
ஹாவென்றதும் ஹூவென்றதும் ஹீயென்றதுமெங்கே
காலூன்றிய பஞ்சாட்சரங் கதிபெற்றதுமெங்கே
ஆவென்றொரு பசுவாமுயி ரதுநின்றதுமெங்கே
அளவற்றது பாவக்கட லதுதாண்டினதெங்கே
மாவென்றதி லுறவாகவே மறவாதறிவோர்க்கு
மணமானது குணமானது தனமாமிதுமனமே. (சு)

மூங்கோணருள் பெருமந்திர மூலாதரமென்ன
மூனேயின்கர முறவாகவோ ருருவானதுமென்ன
சிந்தாகுல மறவந்தர மீதாடினதென்ன
செறியுங்கதி ரீதழாயிரத் தெட்டானதுமென்ன

சந்தாபமற் றீமானூறுந் தலமானதுமென்ன
சரணமிரு பதமேவிய தகையானதுமென்ன
அந்தாதியின் னிகராமொரு மணிமந்திரப்பொருளாய்
ஆலம்நிறை யுயிருக்குயி ரதுகண்டறிமனமே. (எ)

மூந்தோனருள் பெருமந்திர மூலாதரமெங்கே
மூனையின்கரமுறவாகவோ ருருவானதுமெங்கே
இந்தாகுல மறவந்தர மீதாடினதெங்கே
செறியுங்கதி ரிதழாயிரத் தெட்டானதுமெங்கே
சந்தாபமற் றீமானுறுந் தலமானதுமெங்கே
சரணமிரு பதமேவிய தகையானதுமெங்கே
அந்தாதியி னிகராமொரு மணிமந்திரப்பொருளாய்
ஆலம்நிறை யுயிருக்குயி ரதுகண்டறிமனமே. (அ)

அலையாத்தத்து வந்தொண் ணூற் றுறுனதுமென்ன
அறிவாதர வுடல்மூன்றுமீன் றதுவற்புதமென்ன
கலைஞானமெட் டெட்டானது கனிவானதுமென்ன
கதிர்வீசிடு மதிமாமறை கடலீன்றதுமென்ன
தொலையாப் பொருள்குல்ஹுவலா ஹுவீன்றதுமென்ன
சூட்சாதியல் ஹம்தார்ந்தொரு சுடரீன்றதுமென்ன
சலியாதிரு பிஸ்மாகுமுன் னவுதோதுவதென்ன
தானென்றது வானென்றவன் றானென்றறி மனமே. (கூ)

அலையாத்தத்து வந்தொண் ணூற் றுறுனதுமெங்கே
அறிவாதர வுடல்மூன்றுமீன் றதுவற்புதமெங்கே
கலைஞானமெட் டெட்டானது கனிவானதுமெங்கே
கதிர்வீசிடு மதிமாமறை கடலீன்றதுமெங்கே
தொலையாப்பொருள் குல்ஹுவலா ஹுவீன்றதுமெங்கே
சூட்சாதியல் ஹம்தார்ந்தொரு சுடரீன்றதுமெங்கே
சலியாதிரு பிஸ்மாகுமுன் னவுதோதுவதெங்கே
தானென்றது வானென்றவன் றானென்றறி மனமே. (க0)

தாத்துல்கிபுரீயாவெனுந் தலமானதுமென்ன
சரமோடிய வாசியக்ஷர மானதுமென்ன
போற்றியறை கன்சுல்மஃபியானதுமென்ன
புகலும்புதை பொருளெங்குமோர்பொருளானதுமென்ன
காற்றுக்கட லதிலோடிநீர்க் கதியாடினதென்ன
கதிராயிரத் தெட்டாயதுட் கனலேறினதென்ன
மாற்றிப்பிடித் தாளங்கென வணங்கும்பெரியோர்க்கு
மணமானது குணமானது தனமாமிதுமனமே, (கக)

தாத்துல்கிபு ரீயாவெனுந் தலமானதுமெங்கே
சரமோடிய வாசியக்ஷர மானதுமெங்கே
போற்றியறை கன்சுல்மஃபியானதுமெங்கே
புகலும்புதை பொருளெங்குமோர்பொருளானதுமெங்கே
காற்றுக்கட லதிலோடிநீர்க் கதியாடினதெங்கே
கதிராயிரத் தெட்டாயதுட் கனலேறினதெங்கே
மாற்றிப்பிடித் தாளங்கென வணங்கும் பெரியோர்க்கு
மணமானது குணமானது தனமாமிதுமனமே. (கஉ)

சித்தாமொரு முத்தாமொளி பெற்றாடினதென்ன
சிரமாங்கலி மாவீன்றறு நான்கானதுமென்ன
பத்தோடிரு கலியாம்வெளி பறைந்தோடினதென்ன
பறைவாமொழி யதுவந்து பனுவானதுமென்ன
குற்றமறு நவரத்தினங் கூடுந்தலமென்ன
குன்னென்றது வெளியாம்பயக் கூனானதுமென்ன
அத்தம்முற வெங்குந்நிறைந் தானுமொருபொருளாம்
அடியென்றது நடுவென்றது முடியொன்றறிமனமே. (கங)

சித்தாமொரு முத்தாமொளி பெற்றாடினதெங்கே
சிரமாங்கலி மாவீன்றறு நான்கானதுமெங்கே
பத்தோடிரு கலியாம்வெளி பறைந்தோடினதெங்கே
பறைவாமொழி யதுவந்து பனுவானதுமெங்கே

குற்றமறு நவரத்தினங் கூடுந்தலமெங்கே
குன்னென்றது வெளியாம்பயக் கூறுனதுமெங்கே
அத்தம்புற வெங்கும்நிறைந் தானுபொருபொருளாம்
அடியென்றது நடுவென்றது முடியொன்றறிமனமே. (௧௪)

பத்தாம்வய தாறுமாதவள் பாதமலரென்ன
பதமாயவள் பாதந்தொழப் பாலீந்ததுமென்ன
தத்வந்தொண் ணூற்றாறையுஞ் சதிசெய்ததுமென்ன
சாவாமலே சாவுமதி ஜயமானதுமென்ன
எத்தாமலே யெத்தும்பல்லி ளித்தோதுவதென்ன
எமனுக்கெம னானின்றவ னிவனானதுமென்ன
வற்றாநபே ரின்பக்கட லாநின்றமெய்ஞ்ஞான
மதிதந்தது விதிதந்தது மதிவிந்தையென்மனமே. (௧௫)

பத்தாம்வய தாறுமாதவள் பாதமலரெங்கே
பதமாயவள் பாதந்தொழப் பாலீந்ததுமெங்கே
தத்வந்தொண் ணூற்றாறையுஞ் சதிசெய்ததுமெங்கே
சாவாமலே சாவுமதி ஜயமானதுமெங்கே
எத்தாமலே யெத்தும்பல்லி ளித்தோதுவதெங்கே
எமனுக்கெம னானின்றவ னிவனானதுமெங்கே
வற்றாநபே ரின்பக்கட லாநின்றமெய்ஞ்ஞான
மதிதந்தது விதிதந்தது மதிவிந்தையென்மனமே. (௧௬)

அஞ்சானதும் நஞ்சானதும் பிஞ்சானதுமென்ன
ஆலம்நிறை யுயிருக்குயி ராய்நின்றதுமென்ன
பஞ்சாட்சர மொன்றாகிநற் பதியானதுமென்ன
பத்தோடிரு கால்மாவது பாயுமெழுத்தென்ன
நஞ்சாமொரு நாகம்வெளி நாடுந்தலமென்ன
நாதன்மணி மொளிமந்திரம் நல்குமிடமென்ன
அஞ்சாதவ னஞ்சாதவன் துரைராசனெப்பொருட்குஞ்
சுகமென்றறி யகமென்றறி முகமென்றறிமனமே. (௧௭)

அஞ்சானதும் நஞ்சானதும் பிஞ்சானதுமெங்கே
ஆலம்நிறை யுயிருக்குயி ராய்நின்றதுமெங்கே
பஞ்சாட்சர மொன்றாகிநற் பதியானதுமெங்கே
பத்தோடிரு கால்மாவது பாயுமெழுத்தெங்கே
நஞ்சாமொரு நாகம்வெளி நாடுந்தலமெங்கே
நாதன்மணி யொளிமந்திரம் நல்குமிடமெங்கே
துஞ்சாதவ னஞ்சாதவன் துரைராசனெப்பொருட்குஞ்
சுகமென்றறி யகமென்றறி முகமென்றறிமனமே. (௩அ)

வாசியெனு மூலப்பரி வசமானதுமென்ன
வந்தேறிய மணிமந்திர மதியாடினதென்ன
தாசிநிக ரதுபோல்வெளி தனைநாடினதென்ன
தகையற்றற வாடுமக்ஷ ரமானதுமென்ன
பேசித்தொலை யாவற்புத பேரின்பமுமென்ன
பெண்ணென்றது மாணென்றதும் பேசாததுமென்ன
மாசற்றது நேசித்தமா மணியானபேரின்ப
மறையானவன் துரையானவ னிறையைத்தொழுமனமே.()

வாசியெனு மூலப்பரி வசமானதுமெங்கே
வந்தேறிய மணிமந்திர மதியாடினதெங்கே
தாசிநிக ரதுபோல்வெளி தனைநாடினதெங்கே
தகையற்றற வாடுமதி ஜயமானதுமெங்கே
பேசித்தொலை யாவற்புத பேரின்பமு மெங்கே
பெண்ணென்றது மாணென்றது பேசாததுமெங்கே
மாசற்றது நேசித்தமா மணியானபேரின்ப
மறையானவன் துரையானவ னிறையைத்தொழுமனமே.()

வேறந்திர மாநின்றொரு மரமானதுமென்ன
வித்தொன்றது மூளைமூன்றுவி ரிந்தோடினதென்ன
சிராந்திரு முத்துப்பவ ளம்பச்சையுமென்ன
செப்புங்கரு வைந்தாமெழு சிபத்தானதுமென்ன

பாரம்மதி யொளிவாம்பணர் பனிரண்டதுமென்ன
 பகரும்மிலை பூப்-பிஞ்சு-காய் பழுமானதுமென்ன
சாறுங்கனி மதுரம்மது தலைகீழிருந்துணவே
 சண்டனுற வுண்டாகுமெய் யொன்றுதரிமனமே. (உக)

வேரந்திர மானின்றொரு மரமானதுமெங்கே
 வித்தொன்றது முளைமூன்றுவி ரிந்தோடினதெங்கே
சீராந்திரு முத்துப்பவ ளம்பச்சையுமெங்கே
 செப்புங்கரு வைந்தாயெழு சிபத்தானதுமெங்கே
பாரம்மதி யொளிவாம்பணர் பனிரண்டதுமெங்கே
 பகரும்மிலை பூப்-பிஞ்சு-காய் பழுமானது மெங்கே
சாறுங்கனி மதுரம்மது தலைகீழிருந்துணவே
 சண்டனுற வுண்டாகுமெய் யொன்றுதரிமனமே. (உஉ)

ஆவிபோமுன் னுகத்தோமுன் னதுவந்ததுமென்ன
 அஹதாமதி யுஹதாமதை யணைந்தாள்கிறதென்ன
வலிதானது ஆதம் முடல்மணமானதுமென்ன
 மாவாசைய தாய்வந்தஹவ் வாவானதுமென்ன
மலிவாமொளி மதியாகவே வருகாரணமென்ன
 மாசற்றது வீசுங்கதிர் மதியோருருவென்ன
கலியாமதை யோட்டுங்கலி மாவாழ்வுறுஹக்கை
கண்டாய் ஜெயங் கொண்டாய்குண மொன்றுகினமனமே. ()

ஆவிபோமுன் னுகத்தோமுன் னதுவந்ததுமெங்கே
 அஹதாமதி யுஹதாமதை யணைந்தாள்கிறதெங்கே
வலிதானது ஆதம் முடல்மணமானதுமெங்கே
 மாவாசைய தாய்வந்தஹவ் வாவானதுமெங்கே
மலிவாமொளி மதியாகவே வருகாரணமெங்கே
 மாசற்றொளி வீசுங்கதிர் மதியோருருவெங்கே
கலியாமதை யோட்டுங்கலி மாவாழ்வுறு ஹக்கை
கண்டாய்ஜெயங் கொண்டாய்குண மொன்றுகினமனமே. (உச)

குருவானவர்க் கதிகாரணக் குருவானதுமென்ன
ஹூவென்றது வெளியாகவங் குற்றுடினதென்ன
கருவாமீதுட் கருவாமதுகாக்கும் பொருளென்ன
கடலாளுமெய் யுடலாள்கிற கருணைப்பதமென்ன
மருவாமது மணமாமது மாசற்றதுமென்ன
மாவென்றது ஆவென்றது வாசித்தலுமென்ன
பருவத்துட னுறவாடப ஞவானதைநீக்கி
பக்காவா மிசை பாடியொளி பாதந்தொழுமனமே. (உரு)

குருவானவர்க் கதிகாரண குருவானதுமெங்கே
ஹூவென்றது வெளியாகவங் குற்றுடின்தெங்கே
கருவாமீதுட் கருவாமது காக்கும் பொருளெங்கே
கடலாளுமெய் யுடலாள்கிற கருணைப்பதமெங்கே
மருவாமது மணமாமது மாசற்றதுமெங்கே
மாவென்றது ஆவென்றது வாசித்தலுமெங்கே
பருவத்துடனுறவாடப ஞவானதை நீக்கி
பக்காவாமிசை பாடியொளி பாதந்தொழுமனமே. (உசு)

லாஹூவென வோதும் பொருள் ஹூவற்றதுமென்ன
லாமானது மீமாகுமுன் னைமமுறவென்ன
பாகுக்கவி மாவின்பனு வாய்நின்றதுமென்ன
பகர்தல்பன் னிரண்டிட்டபக் காவானதுமென்ன
வாகுமுகம் மதுபின்னுடர் பனிரண்டிலுமென்ன
வாசமுறு மெய்யுள்ளக மணமானதுமென்ன
ஹூஹூவென வோசைதொனி குடிகொண்டொளிவெளியாய்
கோனான வில்லல்லாகு வென்றுணர்திமனமே. (உஎ)

லாஹூவென வோதும்பொருள் ஹூவற்றதுமெங்கே
லாமானது மீமாகுமுன னைமமுறவெங்கே
பாகுக்கவி மாவின்பனு வாய்நின்றதுமெங்கே
பகர்தல்பன் னிரண்டிட்டபக் காவானது மெங்கே

வாகுமுகம் மதுபின்றொடர் பனிரண்டிலுமெங்கே
வாசம்முறு மெய்யுள்ளக மணமாமதுவெங்கே
ஹூஹூவென வோசைதொனிகுடிகொண்டொளிவெளியாய்
கோணையில் லல்லாகுவென் றுனென்றறிமனமே. (௨௮)

ஹூவென்றது நோக்குமொழி ஹூவென்றதுசொல்ல
சூல்லும்படைத் தாளுமில் லல்லாவெளியெல்லை
ஆவென்றதுநிசமாமிது ஆர்க்குமிதைநல்ல
அறிவானமெய்ஞ் ஞானக்கவி யானந்தமேசொல்ல
நாவுள்ளக முடலொன்றுற நாடுமொழிவல்ல
நமனுக்கெதிர் நமனைமிது நானனதுதில்லை
மாவென்றவு தாரியெனும் வழங்கும்றகுமானே
வந்தாளரு ளுந்தாளொளி விந்தாதரிமனமே, (௨௯)

ஹூவென்றது நோக்குமொழி ஹூவென்றதுமெங்கே
குல்லும்படைத் தாளுமில் லல்லாவெளியெங்கே
ஆவென்றது நிசமாமிறைந் தடங்காததுமெங்கே
அறிவானமெய்ஞ் ஞானக்கவி யானந்தமுமெங்கே
நாவுள்ளக முடலொன்றுற நாடுமொழியெங்கே
நமனுக்கெதிர் நமனைமிது நானனதுமெங்கே
மாவென்றவு தாரியெனும்வழங்கும் றகுமானே
வந்தாளரு ளுந்தாளொளி விந்தாதரிமனமே. (௩௦)

ஆலம்பதி னெண்ணுயிர மாளும்பொருளென்ன
அதுகண்டுறு வினம்பல்லுள வாய்நின்றதுமென்ன
தாலம்மீது வெளியாகுமுன் சாவற்றதுமென்ன
ஜகமேவின பொருளாசையிற் சாவுற்றதுமென்ன
கோலம்பல வகையொன்றது குணமீன்றதுமென்ன
கோசம்மத மறிவாங்குண் டலியென்றதுமென்ன
சீலம்பெரு முலகுக்குயா சீமாகியபொருளே
சிந்தாகுல மறவாதரு வருளென்றிருமனமே, (௩௧)

ஆலம்பதி னெண்ணாயிர மாளும்பொருளெங்கே
அதுகண்டுறு வினம்பல்லுள வாய்நின்றதுமெங்கே
தாலம்மீது வெளியாகுமுன் சாவற்றதுமெங்கே
ஜகமேவின் பொருளாசையிற் சாவுற்றதுமெங்கே
கோலம்பல வகையொன்றது குணமீன்றதுமெங்கே
கோசம்மத மறிவாங்குண் டவியென்றதுமெங்கே
சிலம்பெரு முலகுக்குபா ரிமாகியபொருளே
சிந்தாகுல மறவாதர வருளென்றிருமனமே. (௩௨

துரைராசர்கள் தொழும்ராசனு மிகுருசதுமென்ன
சுகமாம்பரி தாவித்தொலை வழிதாண்டினதென்ன
பறைவற்றொலி பைத்துல்முக்சுத் தீஸானதுமென்ன
பரிகட்டுற வாநின்றதூண் பாங்கானதுமென்ன
மறைவற்றுடல் மறைவாமொலி மார்கூடினதென்ன
மாசற்றொரு பொருளைத்தொழு மதிதந்ததுமென்ன
அறிவானதுக் கறிவாமிறை யறுசேரியுவந்து
அதிகாரண மிகுமிவ்வுட லகமீதறிமனமே. (௩௩

துரைராசர்கள் தொழும்ராசனு மிகுருசதுமெங்கே
சுகமாம்பரி தாவித்தொலை வழிதாண்டினதெங்கே
பறைவற்றொலி பைத்துல்முக்கத் தீசானதுமெங்கே
பரிகட்டுற வாநின்றதூண் பாங்கானதுமெங்கே
மறைவற்றுடல் மறைவாமொலி மார்கூடினதெங்கே
மாசற்றொரு பொருளைத்தொழு மதிதந்ததுமெங்கே
அறிவானதுக் கறிவாமிறை யறுசேரியுவந்து
அதிகாரண மிகுமிவ்வுட லகமீதறிமனமே. (௩௪

நாளுத்தெனுந் தலமர்மீது நம்முள்ளறிவென்ன
நலமாமலக் கூத்தாமுல கதுமேவினதென்ன
வாசிஜெப ஞாத்தவ்விட வகையானதுமென்ன
வாதற்றது பாகூத்திட மணமுற்றதுமென்ன

கூசுமொழி யதுமேவுலா ஹூத்தல மென்ன
குதறத்துடை யோன்மிக்கஹா ஹூத்தாமிடமென்ன
வாசம்பெறும் ஜெம்ஹூத்திரு வழிதாண்டியவ்வெளியின்
வழியானது அழியாதுட லகமீதறிமனமே. (௯௫)

நாசூத்தெனுந் தலமாமிது நம்முள்ளறிவெங்கே
நலமாமலக் கூத்தாமுல கதுமேவினதெங்கே
வாசிஜெப றாத்தவ்விடம் வகையானதுமெங்கே
வாதற்றது பாஹூத்திட மணமுற்றதுமெங்கே
கூசுமொழி யதுமேவுலா ஹூத்தலமெங்கே
குதறத்துடை யோன்மிக்கஹா ஹூத்தானதுமெங்கே
வாசம்பெறு ஜெம்ஹூத்திரு வழிதாண்டி யவ்வெளியின்
வழியானது அழியாதுட லகமீதறிமனமே. (௯௬)

---

பிஸ்மில்லாஹி.

## லாஹூபதிகம்.

---

ஒப்புநேரறு மற்புதப்பொருளுண்மையான கிராமயா
வான்றிரண்டொளி யொன்றதாகிய வுச்சிதப்பொருள்ஹக்கனே
அப்புமிரிதிவ் தேய்வுவாய்வா காயமைந்து பூதங்களா
யனல்சொரிந்தது கனல்நிறைந்தது ஆயிரத்தெட்டிதழுளே
முப்புவங்கெழு காமனைத்துணி மும்மதத்தி வல்லபம்
முனைதிறந்தவ ரிடாறுந்தவ மூலமந்திரவாசனே
இப்புவிக்குள் மானிடர்க்ககமிச்சையற்ற மெய்ஞ்ஞானமே
லாஹூவென்றிசை கூரநன்றிசெய் யாஹூயாரப்பல் ஆலமீன் (௧)

அறுசகுறுசுடன் லவ்குகலமணிங் தாளும்லோக மீரேழிலே
அந்தமிலங்குமா பல்லுயிர்க்குளவாக நின்றொருகூவிலே
வரிசைசுவனமே நரகமாக்குவர் வாசமெய்யறியாமலே
வந்தரமுங்கி லிருளறுத்திரு வந்துவந்திடு நாணிலே
பிரிசமாமொரு வலிப்பழித்திட பெய்யுமழைநிகர்பூவிலே
பேசிடாமறை வானரகசியம் பேசினேன் மறையாமலே
துரிதமாயெழும் வாசியென்றது சூக்குமப்பொரு ளொன்றிலே
சொல்லருந்தவம்வங்குவங்கெனச்சூட்ட லுள்ளுறுநாட்டிலே
ஆசிவாயமு மைந்திலேவரும் அல்கம்தாகிய அக்ஷரம்
அந்தவக்ஷர மீதுநின்றது அலிபுலாம்மீம் லாகூவே. (௨)

லாவிலே யிலாஹாவிலே யில்லாவிலே அல்லாவிலே
ஹூவிலே குடியாவிலே அதிகோன்முகம்மது யாதலே
காவிலே மக்காவிலே கதிர்காணுநேர் மதினாவிலே
கண்டநேர்வழி சென்றுலாவிய கரையில்லாப்பதி மீதிலே
ஆலிலேயுயிர் மாவிலேதொடர் அலிபுலாமீ மொன்றிலே
அஹமதானை முகம்மதும் அணைந்தாடிநின்ற மாக்ஷமக்கிலே
நானுமவனுற வாயணைந்ததை நாடினேன் கவிபாடினேன்
லாமலிபதானதுங் ஹேயதானதும் வாவதானதும்லாகுவே. (௩)

வானிலேபுவி தானிலே யின்சானிலே ஈமானிலே
வந்தெழுந்திஸ் லாமுங்கூடின வாசமான ஹெவாவிலே
தீனிலேயொரு நானிலேவழி சிக்கிடாவெளி வானிலே
சிந்தைவைத்த சுதந்திரப்பொருள் தேடிநின்றொரு மாவிலே
ஊணிலேகுறை நாவிலேவரு முறக்கமாத்தியப் போதிலே
உலகுவாழ்வுற பல்லுயிர்க்குவந் தாளுநாதனிப் பூவிலே
ஈனமற்றதி காரமுற்றவ னெங்குநிறைந்தடங் காமலே
யேகமானதி யோகமானது யில்லல்லாஹூ லாஹூவே. (௪)

அல்லிலேவரு மில்லிலே அடங்காமனின்றொருசொல்லிலே
அருளனைத்ததுயிலிலே சுளியாவெழுந்தொரு ஹூவிலே

வில்லிலேமுனை யம்பிலேமதி வீற்றிருந்தமா வெளியிலே
வேஷமானது வாசமானது வித்தொன்றாய்வரு சித்திலே
மல்லிலேவவ னேடிடைத்தது மாதவப்பொரு ளொன்றிலே
மனிதருக்குற மணிதர்காணுமெய் மாதவப்பொருள் ஹக்குலே
சொல்லரும்பொரு டேர்ந்து தேர்ந்தியான் சுசிகரப்பரி மீதிலே
சுத்தமானது சித்தமானது நித்தமானது லாஹுவே. (ரு)

அஞ்சிலேவரும் நஞ்சிலேகுடி பிஞ்சிலேதிட நெஞ்சிலே
அதுகடந்தடி வாரமாகவே யாடிநின்றமீ மலிபுலே
துஞ்சல்பெற்றது முஞ்சலற்றது தூக்கம்நீக்கியப் போதிலே
துறவளித்தது தரிசனந்தருஞ் சூத்திரப்பொருள் கும்மிலே
வஞ்சமற்றது வஞ்சமற்றதை வந்தனம்பற வாமலே
வாடினேன்கபி யாடினேன் அதிவாக்குமெய்யுள்ள மொன்றிலே
செஞ்சொல்மாமறை யின்றெழுந்தொரு திக்குறாகியஹக்குலே
ஜெயமதானது மயமதானது நயமதானதுலாஹுவே. (சு)

ஹம்சிலேவரும் ஜப்சிலேயொளி வம்சமாகின கும்மிலே
காதலாகவே யோதலாம்வெளி காணொணாவழி யுள்ளிலே
தன்சிருகஸ் பிகுமஃலறி சாற்றுமக்குஹூது சிதுக்குலே
தரிபடுத்துமெய் வழியடுத்திசை சாற்றினேன்புவி மீதிலே
பஞ்சைமானிடர் விஞ்ஞுமதிபெற பாவகன்னுறுங் காமிலே
பற்றியவர்கர முத்தியணிதரும் பாவமற்றது பூவிலே
அஞ்சலென்றவர் நெஞ்சிலெண்ணியே யணுவையோர்கடலாக்கியே
அறிவளித்தது மனுசரித்தது அகமுதித்ததுலாஹுவே. (எ)

அத்துலே நீடுமெத்துலேயுயிர் சத்திலேவிதை வித்திலே
ஆதிமேலுறு சேரிநின்றது அங்கியானயா சமிலே
முத்திபெற்றதி தத்துவத்திரு முன்னவனருள் வாவிலே
மொழிவதற்கிரு வொளிவருந்தொனி யோசையற்றுள்ளாவிலே
நத்துமததீப வீட்டிலேவிழி நாட்டமாவெட்ட வெளியிலே
ஞானறிந்தவ னூடுறுந்தவ நாயகத்தன் மொன்றிலே
சித்திபெற்றது முத்திபெற்றது சின்மயப்பொருள் ஹக்குலே
ஜெகமணம்பெற யுகமணம்பெற அகமணம்பெறுலாஹுவே. (அ)

ஆவிலேயிரு லாவிலேதிரு வாகிநின்றொரு ஹூவிலே
அஞ்சுமாறுமொன் றாயிணங்கிய அல்ஹக்குஅசமாவிலே
தாவிஷம்மக மோடிமுத்ததை தானெடுத்தணை யாமலே
தலைவிதிப்படி யென்றுரைத்ததி ஜயமிழந்துமன் னறையிலே
பாவியென்றொரு நாமமாமதி பவமெடுத்தலை யாமலே
பத்தமாமதி முத்தெடுத்திடு பக்குவமறி யாமலே
சாவுதநதுயிர்க் குறவிருந்தது தத்துவப்பொரு ளொன்றிலே
தகையளித்தது பகையழித்தது வகையளித்தது லாஹூலவே. ()

---

## கட்டளைக் கலித்துறை.

இருகால்மடக்கவிங்கதியோகமெய்யுள்ளெழுந்திடும்பன்
னிருகால்மடக்கவோரியல்பளித்தானெனக்கானிலுங்
கிருகாலொருகாலொருகாலில்நின்றுயால்வணங்க
இருகாலொன்றுனவிறைபாதநீடொளியான்பெற்றனே. (க)

கும்பத்திலேறிக்கூத்தாடிவந்ததிகோடிகுக்ஷக்
கம்பத்திலேறிமுன்கைகாட்டுங்கன்னியைக்கைப்பிடிப்பா
யன்புற்றவளையுள்ளகமனம்நாவுமெய்யொன்றுவந்து
இன்புற்றசோதியிறைபாதநீடொளியான்பெற்றனே. (உ)

கும்பகமென்றதியட்டாங்கயோககுணமறிய
மன்புற்றிரேசககும்பகபூரக மங்கணைத்து
கும்பித்துப்பூரித்திரேசித்தலாலேகுல்லுயிர்க்குந்
தம்பமுற்றுளுமிறைறகுமானொளிதான்பெற்றனே. (ங)

மூலக்குகையில்முகியாமலக்கினிமூட்டிவிட்டு
பாலத்துவங்கென தாண்டியன்னோர்வெளிபார்த்திருவக்
காலத்துள்ளானவனாடிருந்தோதிகளிப்பளித்தோன்
சீலத்துவங்கொடுத்தாண்டவன்பாதந்தெரிசித்தனே. (ச)

மக்கநகரிலிருள்காவனத்துறுவன்சிங்கத்தை
சக்கறஈமானோர்மனதாயதைத்தான்பிடித்து
பக்காவுல்மக்காமாமரும்பொன்கூட்டுள்ளே பதுக்கிவைத்து
அக்கரைநீடொளியல்லாவின்பாதவடிபெற்றனே. (ரு)

ஆடியுமாடாதவைந்தலைநாகமலைகடலே
மோடியவேம்புமரத்துடொளிவிரித்தாடுமதை
நாடியெண்காலைமடக்கக்கமலமாநற்குடத்துள்
ளோடியடைத்துஉலகாளுமாதியொளிபெற்றனே. (சு)

மட்டத்திலேறிவெளிவழிகண்டுமன்மொடுக்க
திட்டம்வைத்தங்கெனமொழியாக்கடிவாள்மதை
முட்டவிழுத்துமூலப்ரசண்டன்முனையடக்கி
அட்டாங்கயோகசிவஞானதிவ்யவருள்பெற்றனே. (எ)

மக்கநகரிலிருந்தரசாளும்மணிப்புருவை
யெக்கவெழுப்பிமதினவினார்வழியுள்வெளியிற்
சிக்கறக்கண்ணியிரண்டையுமொன்றாய்த்திரட்டிவைத்துச்
சொக்கிருகாலைப்பிடித்தடைத்தாதிசுடர்பெற்றனே. (அ)

ஆலமரத்துட்கமலக்குகையிலடைந்தகிளி
வேல்கொண்டெழுப்பிமேலமுச்சந்திவீதியிலே
காலைப்பிடித்திடக்கண்ணியைநாட்டிக்கருத்தலன்று
கூலம்பெருங்கூடதிலடைத்தேகுருவடிபெற்றனே. (கூ)

---

பிஸ்மில்லாஹி.

## மெய்ஞ்ஞான ஆனந்தக்களிப்பு.

பல்லவி.

ஜல்லஜலாலஹு அல்லா என்னை
தற்காக்கவேண்டுமில்லல்லா ஹுவல்லா (ஜல்ல)

அனுபல்லவி.

ஜல்லி கல்பி றாகி கபி சிற்றி
சறிஅத்து தறிக்கத்து ஹக்கீகத்துமஹுறிப்
பல்லிருளற்ற மாவுள்ளில் ஆகி
அஹதாகிநிறைந்தடங்காதவன் காப்பாம் (ஜல்ல)

அஹதுஹநானதுங் காப்பு வாஹி
தாகுமுன்ஞகும் வித்தானதுங் காப்பு
அஹவெளியருள்ஜலால் காப்பு ஆதி
அல்கம்துக்குள்ளுவங் தாண்டவன் காப்பாம் (ஜல்ல)

காப்பாகநின்றதும் நீயே கங்குல்
கரையற்ற அரிஞானக்கவியருள் நீயே
கோப்பாக நின்றதும் நீயே வல்ல
குதறத்து காதிரிக்குள் வழி நீயே. (ஜல்ல)

நீயென்றும் நானறி வுற்று சத்த
நிலைபெறுங்காதிரி நேர்வழி பெற்று
சேயென்று முருவரு வித்து வெளி
சேதாரமற்ற சிதானந்த சித்து (ஜல்ல)

சித்துக்குட் சித்தான சித்தே உள்ளஞ்
சேர்க்கு மெய்ஞ்ஞான சிதானந்தமுத்தே
பத்துக்குள் ளொன்றையும் பெற்றே யிறை
பாதத்தைப் போற்றவெனையாதரித்த (ஜல்ல)

அம்தாத்து சிபத்தொன்று கூட உள்ளே
ஆனந்தங்காட்டுஞ் ஜலாலியத் தாட
ஹம்சுக்கும் லாமலி கூட அலங்
காக்கும் ஐனெனுங் கண்ணுடி பூட (ஜல்ல)

வெளிப் பார்வை யிருவிழி மூடு நத்தி
வேடிக்கையாங் கலிமாவுற வாடு
களிப்பான மினிதருங் கூடு கமலக்
கண்ணுடிக்குள் ஹக்கைக்கண்டு கொண்டாடு (ஜல்ல)

வங்கென்னு மங்கென்னும் வீட்டில் மிகு
வாசசுவாச சிவா சிவக் கூட்டில்
தங்குமெய் வாசலைப் பூட்டி யொளி
தானவனுனவன் தானனேந் தானே (ஜல்ல)

மானுபிமானத்தை நீக்கும் லோக
மாதர்களாசை மறுவினை போக்கும்
வானுதிபேரொளி வாய்க்கும் ஞான
வழிதருங்காதிரி வாசியுண் டாக்கும். (ஜல்ல)

மும்மலஞ் சேர்க்குமிக் காயம் வெளி
மூச்சைப் பிடித்தும் பலனற்ற ஞாயம்
ஆம்மலமாற்றுமு பாயம் இறை
யவன்சொல்லை யுறவாட வழியாதகாயம். (ஜல்ல)

எட்டுகால் வாசினையக் கட்டும் வெளி
யேகாந்த வாசலொன்பதையும் பூட்டுங்
கொட்டியத் தேனுண்டு மூட்டும் நல்ல
குணம்பெற அரியமுதுண வொளி காட்டும். (ஜல்ல)

ஆலமெல்லாம் பல கோலம் வெளி
யாடிய சூட்ச மனைத்தொரு சீலம்
பாலங்கடத்துமும் மூலம் கட்டிப்
பாவைபோலாட்டும் பரனிந்திர ஜாலம். (ஜல்ல)

மும்மூல மூவாசை போக்கு கெட்ட
மூலக்கிழங்கு முளைப்பிடந் த்தாக்கு
அம்மலர்க் குள்ளிடை நோக்கு எம
னடிதொழும் நற்கலி மாவுற வாக்கு (ஜல்ல)

சோறுண்டு றங்குமா பாவி சொற்
சுகானந்தக் கலிமாமறைந்த மூதேவி
ஆருண்டும் பின்முன் னுதவி தன்னை
யறிந்தவனோடுறவான சீதேவி (ஜல்ல)

காதிரியானந்த வீடு வழி
காணாத மட்டிக்கழுதை வீண் மாடு
மாதிர மானவர்க் கீடு இந்த
மண்ணில் நிகருண்டு மோகண்டு தேடு. (ஜல்ல)

## மனோபாவிதப் பதிஞானம்

என்ன வதிசயம் பாரு இங்கு
என்னுள்ளங் கொள்ளடங்கா வெளிசேரு
தன்னிலே பொங்கிடும் நீரு குளித்
தானந்த தத்திமி கூத்துள்ளே பாரு (ஜல்ல)

எல்லா முயிர்க்குயிர் போலே வரும்
இவ்வுலகுக்கெம்பிரானிற கூலே
பல்லார்க்கு மோக்குஞ் செங் கோலே யென்னைப்
பார்க்குங் கலிமாவுள் வோயாதவேலே. (ஜல்வ)

வேலையு மற்றவன் ருனே யுள்ளே
விகசிதப் பேரொளி விளையாடி ஞனே
காலையுமாலையில் லானே யென்னைக்
காக்குமெய்ஞ் ஞானக் கடவுளானோனே (ஜல்ல)

சொல்லருஞ் சொல்லுவத் தானும் விந்தை
சூக்ஷாதி சூக்ஷமதானவ னானும்
முல்லைமணம் நிகர் சூழும் வந்த
முக்குற்ற மற்றுள்ளே மூச்சற்றுவாழும் (ஜல்ல)

வினை செத்தார்கள் கோடி தீப
மெய்ஞ்ஞான மெய்யறி யாதவன் பேடி
மானார்கவலை யுள்ளாடி கெடும்
மானிடர்க்கின்ப மகத்துவம் பாடி (ஜல்ல)

அல்லரி யொப்பற்ற காட்சி காய
மழியாமல் கற்பங்கொள்வார் பெறு மாட்சி
கொல்லு மூவாசையால் தாட்சி நல்ல
குணம்பெறுவார் மதிகுறை யில்லாநீட்சி (ஜல்ல)

மாயா விகாரம் விட் டோடும் மிகு
மாதவஞ்சேர மகத்துவங் கூடும்
காயாதிகற்பமும் நாடும் அந்த
காரமறுத்திரைபூரண மாடும் (ஜல்ல)

கண்டதெல்லா மறை வாச்சு வெளி
காணாத காட்சியைக் கண்டுறவாச்சு
பண்டுள்ள மெய்வினை போச்சு என்னைப்
பார்க்குஞ் சிதானந்தப் பூரணமாச்சு. (ஜல்ல)

பூரணமானது மல்ல வெந்தன்
புத்திக்கு மெட்டாப் பொருளாதி நல்ல
காரணமவ் வெளி சொல்ல மிகு
காவலகம்புற மொன்றுமில்ல (ஜல்ல)

எட்டாவெண் சாண்மர மேறி பாளை
யிடுக்கியே வாயுண்டு வலதிட மாறி
கொட்டீரதகள்ளுண்டு கூறி நல்ல
கூத்தாடிக் கூத்தாடிக் கொண்டணைந்தானே. (ஜல்ல)

பட்டப்பகல் போல்மின் வெட்டும் வானம்
பார்க்கத்தொனி தேன்மழைமாரிகொட்டுங்
கொட்டாவி யில்லொளி காட்டும் பயிர்
குறைவில் லாக்கதிர் மீறி முழுமேனிகாட்டும் (ஜல்ல)

மாதரிடு மையல் நீக்கும் மிகு
மாதவமாகவி யானந்தஞ்சேர்க்கும்
ஆதரவுட்பொருட் பார்க்கும் இறை
யவனருளாங் காதிர் முகியித்தினேக்கும். (ஜல்ல)

---

பதம் பல்லவி.

என்ன ஆனந்தம்பார் கலிமா
என்ன ஆனந்தம்பார்.

அநுபல்லவி.

தன்னுக்குள் தானான வனுவந் தானது
தன்னையறி வோர்க்கு மெய்தன்னிடமானது
என்னு மவுனமினி தற வாழுது
ஏகன் திருவருளுள் வெளியானது (என்ன)

அண்டபிண்டம் பண்டு மூதண்ட மென்றது
ஆதாரவாமடி வாரமா நின்றது
கண்டுதொழுஞ் சிவகாரண மீன்றது
காட்சி யென்னுமடங் காவெளியென்றது. (என்ன)

உள்ளறி வுள்ளுற வாமுற வாடுது
ஓசைமிகுந்த சிதானந்தம் பாடுது
விள்ளறிவானந்த மெய்யொளி நாடுது
வேடிக்கையாம் பரிபூரண மாடுது (என்ன)

முப்பொரிமும்மல மூவாசையோட்டுது
மூச்சைமடக்கி முனையொளி காட்டுது
இப்பொறி யாசனமாகதி சூட்டுது
ஏகபரனவ னெனக் காட்டுது (என்ன)

சந்திர சூரியன் பேரிணை யற்றது
சாற்ற நிகரரும் போரொளி பெற்றது
உந்தி யிருதய முண்டக முற்றது
ஒப்புமுப்பாழ் கடந்துள்வெளி சித்தது (என்ன)

தன்னையறிவு தவநிலை சொக்குது
தானவனை வனூடுற வாக்குது
இன்னிலையில்லாப் பதர்களை நீக்குது
ஏகனைநாட வருளடை காக்குது. (என்ன)

பதம்.

பல்லவி.

பூரணம்பெற்றேனே பொய்
வாழ்வுற வற்றேனே பரி

அனுபல்லவி.

ஆரணமுற்றுள்ளடங்கா வெழுந்தது
ஆனந்தமான அஹதுஹ தொன்றது
காரணமொன்றாய்க் கருவுருவானது
கருணாகர அருளாதரி பெருமாதவ மினிதாள்பயி (பூரண

கன்னியராசைகவலை கொடுத்தது
  காசசைமண்ணாசைகாட்டிக் கெடுத்தது
வின்னமெனத்தள்ளும்பேரை யடுத்தது
  வேலைதரும் ஆலம்பத கோலம் மொருசிலம்பரி(பூரண)

தன்னையறியாதவர்க்கெம னானது
  தானவன் தானறிந்தாலற வானது
சென்னைநகர் வாழ்ந்திருவா சானது
  சிந்திப்பவ ருந்திக்கும லந்திக்கலை சந்திப்பரி (பூரண)

பஞ்சபுலன்களுக்காதர வானது
  பல்லுயிரெல்லாம் படைக்குமுன் னானது
எண்சாணுடலுக்குயிருற வானது
  ஏகன்னெறி யோகமரிதாகத் தரிப்பாகும்பரி (பூரண)

பெண்ணைமணந்து பெலன்பெற நின்றது
  பெண்ணென்று மாணென்றும் பேசரி தானது
தன்னுக்குட்கண்ணைக் கருத்துற வானது
கடவுள்ளறிவிடையுள்ளொறிநடையற்றவகொடைபெட்பரி(பூரண)

---

பிஸ்மில்லாஹி.

# மக்காமதினப்பதிகம்.

கலிவிருத்தம்.

அவ்வல் ஆகிறுபாத்தினும் லாகிறும்
  அருபரூப சொரூபமுகம்மது
நவ்வுமாவெளியாக்கு முன்னம்பிறை
  நாடுமோரெழுத் தெல்லாமுவந்தது
செவ்வையாமூல மெல்லாம்படைக்குமுன்
  திருமுகம்மது சீவிக்குமாசனம்
பவிஷ்ய மக்கமாமதினநகர்
  பவுசுபாக்யப் பலாபலன் கூறுவாம். (க)

மங்குலங்குடை மேவநடையிடும்
மக்கம் வந்தமுகம்மது நந்நபி
அங்குமிங் குலகெங்கு நடைபெறும்
ஆட்சியானந்தக் காட்சியும் நீட்சியுந்
துங்கராமிறை தூதினிதாமொழி
சொல்லுவந்த மக்காமதினாவெளி
எங்குமோங்குஞ் செங்கோலிறசூலுல்லா
எந்தலூர் வளமிங்கிசை கூறுவாம். (௨)

மக்கமுள்ளவர் திக்குரையோதிட
மதினமெங்கு மத்தளம் போலோசையாம்
திக்கெல்லாந்தீனோர் கூடுமக்காவிலே
சேர்ந்துநன்மதினா வெளிப்பார்வையா
பொக்கக்கூடி சிறுவழிநண்டுசென்
றோசையாமதினா வெளியுள்ளுளே
றங்கெனுங்கதி முச்சுடர்பூரணங்
காணுமாமதினா டெங்கள்நாடே. (௩)

செங்கோல்வீரியர் பந்தடிகாப்பதுஞ்
சீரியோடாதடைத்துப் பிடிப்பதுந்
தங்கமெய்யொளி வேர்வைவடிப்பதுந்
தாகந்தீறத் தேன்கொட்டக் குடிப்பதும்
பங்கம்வெற்றாக்கை தட்டிக்குதிப்பதும்
பாக்கியம்பொன் கையள்ளிக்கொடுப்பது
மெங்குங்காபரில்லா விசுலாமக்கம்
எந்தல்வாழ்மதினா டெங்கள்நாடே. (௪)

காதைக்கட்டித் தொனிராகங் கேட்கிறார்
கண்ணைக்கட்டியே நாடகம் பார்க்கிறார்
பாதங்கட்டியே பாய்ந்து நடக்கிறார்
பட்சம்விட்டுட்பவு சுடன்வீழ்கிறார்
வாதந்தொட்டவ ருணற்றிருக்கிறார்
வன்னிவிட்டவர் வான்வெள்ளி பார்க்கிறார்
போதந்தொட்டவ ரெங்கும்நிறைமக்கம்
புண்யர்வாழ்மதினா டெங்கள்நாடே. (௫)

நாயுஞ்சிங்கம் ஒன்றாக்கெழும்பிடும்
  நாட்டுசிங்க முன்னேயப் போலாகிடும்
காயமெய்யுடல் மஞ்சட் குளித்திடுங்
  கையில்லாதவருந் தங்கெவித்திடும்
வாயில்லாசிசு மூலப்பாலுண்டிடும்
  வங்கமற்றவர் யாத்திரைசெய்திடும்
மாயவித்தை விகசித மாமக்கம்
  மன்னர்வாழ்மதிநா டெங்கள்நாடே. (௬)

ஏரலாமூர்த்திக் கமலம் பிறந்தவ
  னிருதயக்கமலம் பெறலானவன்
றிரவான்திசை யோடிநிலைத்தவன்
  திங்கெமன்முகம் நாலுமறிந்தவன்
ஆரவிரமுண்டக வெளிகண்டவ
  னாதரவுள்ளக வெளிசார்ந்தவன்
பார்வான்காதிர் முஹியத்தீன் கண்மக்கப்
  பதியதி மதினாடெங்கள் நாடே. (௭)

வானமேல் கடுவித்தை விதைத்திட
  வையமெங்கும் மழைமாரி பெய்குது
பானமாமழை பெய்யவ்வனமெலாம்
  பரவுந்துட்ட மிருக மடிவது
சோனமாநதியாற் கலிமாமரஞ்
  சொல்லுங்கொம்பிலே பூப்பிஞ்சு காய் பழம்
ஈனமற்றலே கீழுமுதுனுமக்கம்
  இல்லல்லா மதினாடெங்கள் நாடே. (௮)

வஞ்சியை நமனன்று பின்தேடுவார்
  வஞ்சபீ நமனைக் கொல்லநாடுவார்
பஞ்சபூதத்தைக் கூட்டுறவாடுவார்
  பழிசெய்யும் புலிப்பாலுண்ணத் தேடுவார்
நஞ்சையுண்டுடலே சீவிக்கவாடுவார்
  நாணிவாணவன் நாமங்கொண்டாடுவார்
கஞ்சமேவுந் தடாகசுகானந்தங்
  கதிமக்காமதி நாடெங்கள் நாடே. (௯)

வித்தரும் வித்தையூன்ற வம்மாமரம்
வேரில் பூப்பிஞ்சு காய் பழமாவதுங்
கொத்தில்லா வேலையூழியஞ் செய்வதுங்
கோலில்லாதவருன் றிக்குதிப்பதுந்
தத்தெதிற்குமுன் சாவாமற் சாவதுந்
தடமில்லாவழிபார்த்து நடப்பதுஞ்
சித்துக்குட் சித்தவணருளாமக்கள்
திருவளர்மதி நாடெங்கள் நாடே. (௧௦)

மண்ணில்லாவிடம் மாளிகைநின்றது
மனுவில்லாவிடம் நாடகங்கண்டது
கண்ணில்லாதவர் மாணிக்கங்கொண்டது
கரமில்லாத வருத்தங்கெலித்தது
பண்ணில்லாக்கவிப் பாடிமுடித்தது
பண்டில்லாமர மின்றுமுளைத்தது
பெண்ணுமாணுமில்லாத கலியாணம்
பேசுமக்காம தினமாநாடே. (௧௧)

முற்றிற்று.

பிஸ்மில்லாஹி.

# மெய்ஞ்ஞான ஆத்மகிரீடத்தந்தாதி.

அல்ஹம்தாவெங்கு நிறைந்தடங்காநின்ற
அஹதுஹதுவாஹி தொன்மையர்ச்சித்தல்கேள்
வல்லமையாமீமா னுள்வட்டத்துள்ளே
வாசமடி நடு முடியும்வகையொன்றான
சொல்லரும்பேரொளி வழிமையம்புலனைம்பூதஞ்
சுருட்டுமறிவெதிக்கு மொருசுடர்மெய்ஞ்ஞானம்
நல்லறஞ்செய்தெவர்க்கு மனக்களிப்பானந்தம்
நவிலவுயிர்க்குயிர்நாத னடிகாப்பாமே. (க)

காப்பாகநம்மிறையைக் காணவேண்டிக்
கழறுகிறேன் ஐவரையுட் கருத்திலூன்றிக்
கோப்பாகமெய்ஞ் ஞானங் கூர்ப்பத்தூடே
கொளுந்துசுடரொளி வடிப்பங்கூரைப்பார்க்கத்
தாப்பாகநின்றதெல்லா மொன்றாய்க்காட்டுந்
தந்தையது தாயுமது தாரமாகித்
தீர்ப்புணர்த்தி சேயதுவாலாம் பிகைப்பெண்
திருவடிக்குண்டலி பணிந்துசேவித்தேனே. (உ)

குண்டலியவ்வாசி நின்றகாரத்தாலே
கூரிருளைப்போக்கிக் குருவடியைப் போற்றிப்
பண்டேனையானறியாத பாவமென்னுட்
பகையறுத்ததத்துவனின் பாதமேத்தித்
தொண்டனுமக்கென்று தொழத்துணையாக்காணத்
தொல்புவியிற்றீவினை வல்வினையுமாற்றி
மண்டலமும்விண்டல முள்ளகம்வைத்தாலும்
மகத்துவமாவழி யறியமதிசொல்வேனே. (ங)

மதிசொல்வேன் மாநிலத்தில்வழங்கயோக
மறிந்துநிலையொரு மித்தமகத்வஞான
மதிசொல்வேன் தனதுருப்பு சினேகஞ்செய்ய
மாதவமாம் அஹதுஹது வாஹிதான
மதிசொல்வேன் புஞைதி பூதமாதி
வாசமுறவிழுந்து கெடுமதியற்றேக
மதிசொல்வேன் காதிரிநல்வழிகண்டார்ந்த
மகத்துகளுளங் களிக்கவழங்குவேனே. (ச)

வழங்குநிலை மெய்ஞ்ஞானயோகிகட்கு
வாய்மெய்யு மகங்களிப்புமடங்காநிற்கும்
விளங்குமிந்தப்புவி வசித்தலோபிகட்கு
வீணைசொல்லென்பார் விதர்ப்புக்காணர்
பழங்கதைபோற் பார்த்துவிட்டுத் தூரப்போட்டுப்
பழையபடிபிரகிருதிப் பாதைக்காண்பார்
குளங்கள்வசி முதலையைப் போற்பலநாள்குற்றங்
கூடினநீர்வற்றவதைக்கொல் லொப்பாமே. (ரு)

ஒப்பாமோவுங்களுக் கிங்குவமைகாண
வுவப்புண்மைமனமுருக வொருவனுள்ளம்
நட்பாகவேணுமென்றே பல்விகாரம்
நழுவவிடுஞ் சொல்லுனக்கு நலவுக்காக
செப்பாமெய்ஞ்ஞானமதி பின்னுள்ளார்க்குஞ்
சிந்தைதடுமாறுதலற்றீ மானுண்டாம்
இப்பாரிலுள்ளகுறை நாட்போக்காமல்
இத்தருணமுனையறி வுள்ளிருந்துகாணே. (சூ)

காணுதகாட்சியல்ல கண்டதல்ல
கண்கொள்ளாப்பேரொளி நேர்காக்குஞ்சோதி
ஆணல்ல பெண்ணல்ல ரூபமல்ல
அக்கினியுஞ்சந்திரனும் ரவியொன்றாகி
தோணுமொரு பூரணமா வெளியிட்டோங்கிச்
சொல்லுதற்கே யிங்குநிகர் துணைவேறில்லை
நாணமற்றுதவ்வி விளையாடாப்பெண்ணுள்
நட்புறுத்து மதிவிவரம் நான்சொல்வேனே. (எ)

சொல்லுகிறேன் கண்ணுருட்டியங்கென்றக்கால்
சுழன்றுள்ளேயோடியங்கே சுருண்டுகொள்வாள்
வல்லமைகண்வாயுறக்கி வங்கென்றக்கால்
வந்துஅகவெளிமுகமெய் மணந்துகொள்வாள்
சூல்லுயிர்க்கு முன்னவளை ரூம்மென்றக்கால்
குணம்பெறவே பின்வரும்நேர் கூறுஞ்சொல்வாள்
நல்லவர்க்குவல்வர மீந்தாளும்வல்லி
நழுக்களித்தலவிடரை நவிலக்கேளே (அ)

கேளப்பாவிவள்செய்யுங் கோட்டியென்மேல்
கிருபையுள்ளான் மனஞ்சலித்தழுவான்காணும்
நாளப்பா வவனவளை வேகங்கொள்ள
நான்கெடுத்தேனென்றிழுத்து நாகிற்போட்டான்
வேளப்பாவிவன்வளு மொன்றாகூடி
வெகுநாளாவக்கினிக்குள் வேவித்தார்கள்
ஏழப்பாவெழுபிறப்பைக் கடந்தவின்சா
ன்னப்பிறந்த வுடனுமெனக்கிடரைக்கேளே. (கூ)

இடர்செய்யும்வழியறி விங்கியம்பக்கேளு
இகம்வருமுன்னிடைஞ்சல் வெளியியம்பொருது
தொடர்பிடியாவரும் வழியிலங்கென்றென்னுட்
சொல்மதிப்பில்லாத பொருட்சோறுஞ்செய்தாள்
கடைநடுவு மாதிமுதலொன்றாய்நின்று
காக்கும்பஞ்சதாதுள்ளே கருவமீறி
உடலதுக்குள்ளாதர வாயிருந்தசோதி
யுள்ளிருக்கும் வஞ்சகங்கண்டோதுவேனே. (௰)

ஓதுவித்தலேது வெனக்கேளுமைந்தா
வுள்ளடங்காக்காட்சி வெளியுள்ளாய்நின்று
வாதறுத்தேயானந்த வெள்ளம்பொங்கி
வையமுதலுள்ள பொருளெல்லாம்நீங்கி
மாதவப்பெண் ஞானக் குறிப்புநானேதானும்
மையறுக்கும்நிமழ்காவரம்புகாட்டப்
போதுவரவகவெளியில்லுவந்தசோதி
பூரணமாயிவளு சிதம்புகலொண்ணாதே. (கக)

ஒன்றாகிநின்றதுக் குள்ளிரண்டுமாகி
யொத்திருந்துவாழாமா விகாரத்தாலே
கண்ணானையிருவர்மன மொருமையற்றுக்
காத்திருந்தமற் றொருவன்கருவமீறி
புண்ணானபாதாள யோனியாசை
பூட்டியல்லோ காலிழுத்துப் புவியிற்போட்டான்
மண்ணாசைபொருளாசை மூன்றும்நீக்க
மறலியிடரற்றுலகின் வாழ்குவானே. (௧௨)

வானெழுந்துபூரணமா நின்றசோதி
வனுமையொருபொருளறிந்து வணக்கமுள்ளாய்த்
தானெனவும் நானெனவு மொன்றாய்நின்ற
தத்துவந்தொண்ணூற்றாறுந் தகைநேர்காண
கோனெனுமில்லல்லாவுள் வெளியைப்பாரு
குறித்துநின்றகமலவட்டக் கண்ணாடிக்குள்
ளானதொருபொருளனைத்து மொன்றாய்க்காணு
மதிதவமிங்கிதையறிந்தே யணிந்துகொள்ளே. (௧௩)

கொள்ளுதற்குமனத்திடநேர் கூறக்கேளு
குல்லுயிராம்பல்வினமும் படைக்குமுன்னே
தள்ளுதற்கும்வேண்டுதற்கு மிணையில்லாகி
தனியவனோடவனுறவு ட்டாணாநின்ற
உள்ளிருந்துதிரையிடையோ ரில்லல்காண
வுற்றுணர்ந்துபார்க்க வெளியுற்றகாட்சி
விள்ளரிதுவானமதி யொளியொன்றாசை
விதுப்புவந்தணைந்தவிதம் விளம்பக்கேளே. (௧௪)

கேளப்பாநாவுளமு மெய்யுமொன்றாய்க்
கிருபைமிகுவானந்தக் கிளர்ச்சியாலே
நாளப்பாவனுதினமும் பிதற்றாவண்ணம்
நானறிந்துநன்னிலை பெற்றானேடானு
வாழப்பா வொப்பற்றபுரவியேறி
வழிகடத்தலப்புரவி வரையுட்டார்த்த
ஏழப்பாவெழுசபை யோர்வணங்காநிற்க
வெழுந்துவெளிசனித்து வெட்டவெளியாய்ப்போச்சே. ()

போச்சப்பாகோட்டை கொத்தளத்தக்குள்ளே
  புகுந்துநின்றபல்வினை மும்பொசிங்கிப்போச்சு
பேச்சப்பாவில்லிருந்த காட்சிகண்டு
  பெரும்புதுமைகாண வுள்ளப் பெருமையாச்சு
ஏச்சப்பாமுன் பொருட்பின் பொருடேர்பார்க்க
  விருந்ததெல்லாமெறிந்து பூரணமதாச்சு
மூச்சுப்பாசுழி முனைபூடாட்டங்கண்டு
  மூழ்வினையுமறுக்க விந்தைமுறையுண்டாமே. (கசு)

ஆமப்பா வதிவிந்தை காணவென்று
  லைம்புலனென்றுக்கியர சாளவேணுஞ்
சாமப்பாமாயை குணமேழுஞ் சாவுஞ்
  சமதமித்து வன்மனச் சந்தாபம்போக்கு
காமப்பா வுண்டகறை யற்றுண்ணுமெய்
  கன்மவினை தீருமெனக் கைக்கொள்ளாதே
யேமப்பால்செரற்சுவையுண் டிறங்குமாசா
  னிருசரணந்தொழ விடரற்றிருப்பர்தானே. (கஎ)

தானென்ற வல்லியிவளெங்குமொன்றாய்த்
  தன்னரசுக்குள் ளெவருஞ்சரணஞ்செய்ய
நானென்ற தகையனைத்த ரூப ரூப
  நாயகர்க்கு நாயகியு நானேயென்பாள்
வானென்றதவமிவட் குள்ளானசொல்லாம்
  வழியறிந்தமவுனிகளுக் கிசைந்ததோழி
நானிவளையறியாம லிருந்ததாலே
  நாடோறுங் கொள்ளையிடநாடினளே. (கஅ)

நாடுமிவள்கொள்ளை யிடும்விபரங்கேளு
  நாட்டிலுள்ள மாதரோணியாசைபூட்டி
தேடுதரவேணுமென்று நினைத்தநீலி
  கிருமையென்னும்விருந்து மென்னைக்கெடுக்கப்பார்த்தாள்
ஆடுகிற கூத்திவட்செய்மார்க்கத்தாலே
  ஆளுருவமான சடம்வடித்து விட்டும்
பாடுபடுவென்றிருந்திப் பதிலொண்டு
  பதித்துறுதிமொழியெனக்குப் பறைந்திட்டாளே. (கசு)

பறைந்துநின்ற மெய்ஞ்ஞானம் புவியுள்ளார்க்கும்
பழுவினையாம் வழுவறுக்கும் பாங்குசொன்னேன்
மறைந்துசடமழியு முன்னோர்வழி கண்டாள
மாதவமாமினிது பெறமாயைநீக்க
அறைந்துநின்ற சொல்லுறுதிநழுவாதப்பா
வாழ்றலமிவுள்ளறி வுள்ளாகப்பாரு
உறைந்துநின்ற கருவுருவுக்குருவரூப
மொட்டியுமொட்டாப் பொருட்குள்ளுறவுண்டாமே. (௨௦)

உண்டாகுமிவளடியைத் தொழுமெய்ஞ்ஞான
முள்ளிருந்தே யோதுவிப்பாருவக்கவேண்டிக்
கண்டாலுமிவள்வடிவங் காணவேணுங்
காசினியில்வருந்தி நாட்கடத்தினும்பெண்
கொண்டாலுமிவளையல்லோ கொள்ளவேணுங்
குறைவயதைநிறைவயது கூட்டிவைப்பாள்
வண்டாலுமொப்புகுழல் மாதென்றிந்த
வையகப்பெண்ணது விடவுட்டுணிவாய்நில்லே. (௨௧)

துணிவாகவிடாறுத்த வுலகத்தாசான்
சொந்தவுளமிருந்த ஞானசூட்சம்பார்த்தேன்
மணியொதுக்கி யொன்றாக்கி மலர்ச்சிகாண
மாசற்றகந்தரத்தங் கென்றுதாக்க
பிணிநமனிங்கிவள் தானேயெதிரில்வந்து
பிணிநமனுக்கெமன் மருந்துபேசம்ரூபி
யினிவிவளை மறவாமலிருக்கவேண்டி
யிருத்தியுள்ளங்கிளர்ச்சிபெற வெழுந்திட்டேனே. (௨௨)

எழுந்துநின்றேனிங்கிணை யில்லாதறிந்து
இகத்திலகப்பொருள் திருடுங்கள்ளன்போல
வுழைந்துசெலமறையு மறையாமலன்றே
யுற்றுறவோர்க்குள்ளுருக்கம் பூட்டிவைத்தாள்
அழுந்துகன்றை நினைந்துவரும் பசுவைப்போல
வாதரவாய்மொழித் தழுதுள்ளங்கிளர்த்த
வழுந்துமொழிக்கிசையனென்றும் விடுவதில்லை
வருந்தியென்னையில்லிருத்தி வாழ்த்தினளே. (௨௩)

வாழ்த்தினாளெனையவ ளென்பெருமைகண்டு
வாய்மெய்யு மகமிருகை யொன்றுகூட்டித்
தாழ்த்தினாள் காலறிந்து சிரங்குனிந்து
தயவறிந்துதாயுபதேசத்தைச் சொல்ல
மாற்றினாள்வலமிடத்தே பொருதவந்த
மாயவனும்பல்லிளிக்கும் வகைபெற்றாள்காண்
போற்றினாளெனை நிதமுமறவாநின்று
பூரணமாமிவளுசிதம் புகலக்கேளே. (௨௪)

கேட்பாருலகுள்ளோ ருவக்கவென்மேல்
கிருபைமிகுவாகவுள்ளக் கிளர்ச்சிபூட்டி
நாளப்பாமிகுநாளங் கினிதிருத்த
நாயகிமனோன்மணியும் நட்புற்றாளே
வாழப்பாரால்வழியு மொன்றாய்வாழும்
வழிவிபரம்விதவித மாவகையுஞ்சொல்ல
மீளப்பாவிடரிருளஞ் ஞானமோட
மெய்ஞ்ஞான தீபவிளக்கேற்றினாளே. (௨௫)

எற்றினாள்தீப சிரநடுவுக்குள்ளே
யினிதுபொருளறிவு கதிரிலங்கக்கண்டு
போற்றினாளுள்வெளியு மடங்காச்சோதி
புகழ்பெருமை யாரறிவார்புவியுள்ளார்க்குஞ்
சாற்றினாளினிது பொருடேர்ந்து பார்க்கத்
தனையறிவில்லார்க்கு சுகந்தானிங்கேது
ஆற்றினாள்மாயை நெருப்பற்றுவாழ்க
வாதிமுதலீறுடனின்றறை யென்றாளே: (௨௬)

அறையென்றாளுள்ளடங்காக் கிளர்ச்சியாலே
யறிவிசுலாமீ மானுமார்த்த நீதி
பறையென்றாள் வெளியுடனே பாத்தினென்றாய்
பாருலகில் மனுப்பதரற்றிருக்கச்சிற்றை
மறையென்றாள் சுணங்கின்வாய்மணி யீந்தாப்போல்
மட்டிகளுக்கறிவிருக்க மாட்டாதென்று
விறையென்றாள் வித்தரும் வித்திலைபூப்பிஞ்சா
வினியகனியுண்டுறங் காவிருவென்றாளே. (௨௭)

இருத்தலணையிறுத்தி யவனவள்முன்னின்று
இழுக்கமற வுறுதிமொழியிசைத்தவாக்கு
வருவனென நடைபெற மெய்வாட்டங்கண்டு
வானவனும்வலதிட சொருபங்காட்டிப்
பருவமதிகன்னியைக் கையணைவானென்றே
பதுங்கியுள்ளரூப வொளியாகப்பார்த்தாள்
கருவமேதுமெண்ணினளோ வறியேனுன்னக்
கவலையறக்கண்ணை வெளிகாட்டினளே. (உஅ)

காட்டினள்தன்னழகைப் பொன்னிறத்தாள்
கைப்பிடியாய்ப்பிடிக்கக் கண்ணடிக்கப்பால்
நீட்டினளிருகரமு மொன்றமேசர
நிலைபெறவிர்திருக்க விடம்நின்றுலோகஞ்
சாட்டிநாளிடையில் லொளித்திருந்துபார்க்கத்
தாரில்மனுவசைவனு வற்றறக்காட்டிப்
பூட்டிநாள்வனவளும் நடித்தல்புந்தி
பூரணமெய்ஞ்ஞான நாறட்புதையல்காணே. (உகூ)

புதைபொருளாயிருந்தபழம் பொருளீதென்று
புந்திமனநாவு மெட்டாப்பொருளாம்நன்று
கதைபலவாய்க் கற்றாலுங்காணாரென்று
கருத்துவினமொன்றாயுட் கதிமையன்று
விதையரும்வித்திருக் கலிமாநிறைசொல்லொன்று
விகிர்தமறத்தர்ச்சித்தால் மேலோரென்று
இதுவறியார்நபி சுவனப்பதியேதென்று
இறைநபியுவந்தருள யான்சொல்வேனே. (௩௦)

சொல்லுமொழியானந்த முறுதிவாக்யம்
தூயநபிஹறக்கணைந்து சுகித்தநேர்மை
யெல்லவர்க்கு வேண்டுகெனவோதிவைத்த
இனிதுதரும்நால்வழியு மிசைக்கநீதி
பல்லினர்க்குவெளியறி வுள்ளொன்றாய்நின்ற
பாக்கணைத்தும் பின்னுரைத்தபாடல்காணு
கொல்லுமெமனில்லை யுனக் குறுதிகோழன்
கூட்டுறவாயிருந்து சுகங்கொள்ளலாமே. (௩௧)

கொள்ளலாமிறையணைந்த பொக்கிஷத்தில்
குவித்தமாணிக்கமலை மலைபோலப்பா
அள்ளலாங்கள்ளனையுங் காவல்வைத்து
அவனையும்நீ துணித்திட தன்னரசுமாகும்
விள்ளலாமங்கிருப்போர்க்கடிமைவேலை
வினவினசொல்மறவாதவ்விதமேமிசைவார்
தள்ளலாம்வேறுமென்றுற் சேர்க்கலாங்காண்
சத்தியமாயிறைகலிமா தான்பெற்றோர்க்கே. (௩௨)

பெற்றோர்க்குமுற்றோர்க்கு முவப்புள்ளாக
பேசுகிறபாங்குலகோர் பிரியவாழ்க
கற்றோர்க்குமற்றோர்க்கும் விளங்கநின்று
காக்குமுயிர்க்குயிருற வுட்கருவாம்ஞானம்
நற்றோமேல்யாரெவர்க்கோ வென்றுதள்ளி
நாட்கடத்து மறதிமவுத்தறுக்காடு
எற்றூனுமாயை யறுத்திருக்கவாதி
இனிகலிமாவகை பெறமாவின்புற்றோளே. (௩௩)

உற்றோருக்குற்றவளா மிவட்குநேர்கண்
ணுவமிக்கவிங்கு நிகரற்றசோதி
பெற்றோளேயுலகமெல்லாஞ் சோரனுக்கே
பிள்ளையுமென்சொர்ந்தமென்று பிடித்திழுத்தான்
எத்தாலுமிருவர்கள்செய் மார்க்கத்தாலே
இகத்திலங்கிங்கிழு யட்டிறப்புண்டாச்சு
செத்தாலும்வைத்தடிப்பின் வாங்காநிற்க
ஜெகமனைத்துமோர் குடையுள்ளாளலாமே. (௩௪)

ஓர்குடையுள்ளாளு மோருபாயஞ்சொல்வேன்
உள்ளேழுத்திலுள் ளெழுத்தையுள்ளேகாட்டி
பார்குடையாங்கதிரெறித்து யோகஞ்செய்யும்
பானுமதியோருரு வாய்ப்படைக்கவேண்டி
நேருடையான் சுழிமுனையூடுறவுண்டாக
நெறிமந்திரமிருதந்திரம் நிலைப்புற்றக்கால்
காரனுக்குங்கதிரிதழாயிரத் தெட்டாகிக்
காரணமற்காணும்வெளி காட்சியாமே. (௩௫)

காட்சியிலுமற்புதமோர் நாளென்றாலும்
காணாதகாட்சியல்லோ காட்டிவைப்பாள்
மாட்சியெமன்வருமுன்ன மாட்சிகொள்ளு
மந்திரங்கண் ணுச்சரித்த மகத்வஞானம்
வசச்சுதென் றுசெய்முறையை மறவாதப்பா
வாலைமனோன் மணியுருவம் வழங்குமட்டும்
பேய்ச்சியென்றாலிவளைப்போல் பேய்ச்சிகாணேன்
பேணினவன் றன்னுறவு பிரியாள்மெய்யே. (௩௬)

மெய்யப்பாமெய்யுள்ளே மெய்யேயாச்சு
மேதினிபொய் யதையுவந்ததெல்லாம்போச்சு
பொய்யப்பாவேதியர்கள் பிழைப்புக்காக
புகலுமிறைசொற் சியலும்ஹா லுஞ்சிற்றும்
ஐயப்பாவிவைநான்கும் தெளியாமற்சொல்
லதுவணிந்துசிற்றது விட்டவனியோர்க்கு
செய்யப்பாநல்வழியி தென்றுசொல்லுந்
திருடர்களைக்குருவென்று செப்புவாரே. (௩௭)

செப்புமிந்தவேதியர் சொற்பிழையுமல்ல
செய்யிதுறகூலளித்த பாதைநான்கு
ஒப்புறவேசறிஅத்து தறிக்கத்தொன்றும்
உவமையில்லான் ஹக்கீகத்து மஹ்ரிபத்தும்
நட்புறவேயிவைநான்கு மொன்றுள்ளான
றல்லறிவாம்லாகிறுடன் பாத்திஹென்றும்
இப்புவியிலுள்ளவர்க்கு மறியவேண்டி
இனிதுபெருஞ்சூத்திர மிங்கியம்புவேனே, (௩௮)

இயம்புகிறேன்சூத்திரமாங் கூர்மைகேளு
இவ்வுலகுக்கறிவுயிராய் நின்றசோதி
நயம்பெறமாவொளிபரப்ப நலமென்றெண்ண
நாள்விடுத்துப்பல்லுயிரை நறுக்கிவிட்டான்
சயமடைந்தவிருள்படைக்க வேண்டாமப்பா
தன்னுடலுக்குயிரறிவு தானேசோதி
மயங்குறைவற்றருள் பெறவுள்வெளியொன்றுண்
மறைநாலுமொ ருவகையாய் வழுத்துவேனே. (௩௯)

வழுத்துகிறேன் சொல்லானசறிஅத்தப்பா
வானுலவுசூரியனின் பிரபைபோலாம்
கொளுத்துகின்ற தறிக்கத்துசியலாமப்பா
குறித்ததகிராயிரத் தெண்சுடரைப்போலாம்
அழுத்துகிறேன் ஹக்கீக்கத்துஹாலாமப்பா
அதிகவமாவட்ட வடிவம்போலாகும்
முழுத்தமுள்ளமஹ்றிபத்து சிற்றுமப்பா
மொழிமையிது அனலதுபாலொப்பொன்றுமே. (௪0)

ஒன்றாகவார்ந்து நின்றசறிஅத்தாலே
உவமையில்லான்வனுமை யறிந்துரைக்கொணாது
நன்றான தறிக்கத்து நன்னேர்காட்டும்
நவில்லாதவனறியா நடுக்கமுண்டாம்
மூன்றான ஹக்கீகத்து ஹக்குண்டானால்
முற்பனமாசிற்றணையா றாக்கமேது
ஊன்றுமிறைமஹ்றிபத்தையுவந்துகூட
ஒருவன்முஹப்பத்து முண்டாமுண்மைபாரே. (௪௧)

உண்மையப்பாநால்வழியு மொன்றேயாகும்
உறுதிதருமஹ்றிபத்தை யுவந்துகூட
பண்மையப்பாவறிவுண்டாங் குறைவிங்கேது
பழியெமனிங்கூடறுத்துட் பதவிகாட்டும்
வண்மையப்பா நால்வழியும்வழங்கவிந்த
மகத்துவத்தைக்காணாமல் மடிந்தார்கோடி
பெண்மையப்பாவுண்டாகு மெய்ஞ்ஞானந்தம்
பெருமைசிலவகை விரித்துப்பேசுவாமே. (௪௨)

பேசுகின்றநான்மறையு மொன்றாமாதி
பெருமைபெறும்நால்வழியின் பிரிவைக்கேளு
வாசமிகும்சறிஅத்து முகம்மதாகும்
வழங்குமிறைதறிக்கத்து றாஹாமப்பா
நேசமிகும்ஹக்கீக்கத்து ஆதமதாச்சு
நெறியுள்ளமஹ்றுபத்து அல்லாவாகும்
மாசறுக்கும்நால்வகையும் ஹக்குள்ளார்ந்த
மகத்துவங்கண்டிசை கூறவாசமாமே. (௪௩)

வாசமிகுவாச முயிர்க்குயிராமெங்கு
மாநிறைந்து மீறிவெளியானசோதி
ஆசைமிகுவானந்தங் காணவேண்டி
யல்லுபகலறுபது நாழிகையென் னுள்ளம்
பாசமுயிர்நாவகமு மொன்றாய்நிற்க
பானுமதியோருருவாய்ப் படைத்துத்தந்தான்
தாசனிவனென்றிரக்க மார்ந்துவந்து
தாளணைந்துதழுவசுபம் வேண்டுவானே. (சச)

வேண்டுகெனநம்மிறை யோனுவந்தசோதி
விரிகதிராயிரத் தெட்டுக்கதிகமேலாய்
தோன்றுமொருகோடி யிதமெழுந்துமந்து
தோன்றமன னூரொன்றாகி தொகுத்தஞானம்
நீண்டநிவா யரியணைந்தமுத்தைத்தன் னுள்
நிலைத்தவயிராக்கிய மாநெருப்புமூட்டி
மாண்டுருகிமண்ணேழாய் வானேழாகி
வாசமுறும்பல்லுயிர்க்கும் வகையுண்டாச்சே. (சரு)

உண்டானபல்லுயிரு மமைந்தநேர்மை
ஒருகோடிவயதிருந்து ரைக்கலாமோ
அன்றாதியெண்பத்து நான்குநூறு
ஆயிரத்துக்கானதொகை யடங்காவிந்தை
யொன்றானயின்சாணைப் படைத்தானுயன்
ஒப்புவித்தவற்புதமெய்ஞ் ஞானக்காட்சி
அன்றுடம்பார்த்தார்ந்த வாசான்சொந்த
அடிதொழுவிக்கதிக சுகம்பெருகன்றே. (சசு)

அன்றுமுதலின்றுமிடை யென்றுமாகி
அடிநடுவுமுடியு நிறைந்தடங்காதாகி
கன்றருகக்கனிந்திரங்கும் பன்மையாகி
கதிர்மதியுமொருவகை யாங்கருணையாகி
இன்றுமுதலிருவினையும் பொருத்தமாகி
யேவலொடுவிலகனு மற்றிருப்பதாகி
என்றுமிருந்தொசுறு மில்லாதெல்லாமாகி
யெழுந்தவெளியற்புத மிங்கிசையுண்பாயே. (சஎ)

ஊனாவந்துநின்றதனா லுறவுண்டாச்சு
உற்றறவுகனல்மீறி யுருகிப்போச்சு
வானெழுந்தசந்திரனு மறைவுமாச்சு
வையமசிவாசமிக நாசம்மூச்சு
பானுமதியிருவினையும் படைக்கலாச்சு
பதினெண்ணாயிர நிறைவுபார்க்கலாச்சு
வானாவதும்பூவுலகை யகம்வைத்தாளும்
மீதிதவமிக்கினி தறியாமறைந்திட்டாரே. (௪௮)

மறைத்ததுபோமீதமின் கிருந்தபேர்க்கு
மறையாமல்மறையுமதி மார்க்கஞ்சொல்வேன்
உரைத்துநின்றவிந்துவக வெளியினுள்ளே
ஓங்காரநடுமுடி முச்சுடருமோன
கரைத்துநின்ற ஹராஹா ஹரியொன்றாயாளுங்
காரணமாம் ஆ ஊ ஈ கள்ளன்வீட்டில்
இரைத்துநமனோடி விடாக்காலைக்கட்டி
மிடுகோட்டிற்சுடர்மீற வீயென்றானே. (௪௯)

ஈயெனப்பல்லிளித்தாலும் விடுவதில்லை
யென்றுமனமொருமித்துப் பூசையிட்டேன்
வாயடக்கிவற்புறுத்தி வன்னிமூட்ட
வனிதநமனும்பஞ்செனக்கை வசமதானான்
தாயணையாச்சேயெனவே தனித்திருத்தி
தான்விலகிக்கொள்ளவெளி தன்னிற்செல்ல
நாயதுபோல்நாணொடுங்கிக் கெஞ்சக்கெஞ்ச
நாயகியுமெனையுவந்து நட்புற்றாளே. (௫௦)

நட்புமிகுவானந்தக் கிளர்ச்சியாலே
நாடோறும்ஞானவறி வளித்துநின்றாள்
பெட்புமிகுமிவளு சிதமோனம்பேச
பெண்ணினமுமாணினமும் பிரியாநின்ற
கற்புடையாளிவளெனவே முன்விகாரம்
கவனமறுத்திவ ளெனையுங்காப்பாளென்ன
உற்பனஞ்செப்பிற்பன மீர்துலகுள்ளான
வுவமையில்லான்மெய்ஞ்ஞான முரைத்திட்டேனே. (௫௧)

உரைத்துநின்ற மெய்ஞ்ஞானமுவந்தபிள்ளா
யுள்ளறிவுக் குள்ளுறவாயிருந்தகாட்சி
மறைத்துநின்ற மாயைகுணமேழுபேரும்
மண்ணறைக்குள்ளடங்கு மட்டுமறையான்சாவு
ஒருத்துநின்றதிருகுமுருக் கிழுத்தவ்வாளா
லுள்ளிழுத்துக் குத்தியூழிததீயைமூட்டி
யெரித்துவிடு வெத்திரியுனக்கில்லைகண்டா
யிகபரமாமுபநிடத மினிமைகாணே. (௫௨)

காணப்பாநான்மறையு மீன்றசோதி
காக்குவழிசான்கினுக்குமரசாமெங்குந்
தோணப்பாதூறு சூலவர்கட்கீந்த
தூயபுறக்கானுல் அலிமென்னும்ஞானம்
பூணப்பாசதுவகையில் வெளியுமொன்றாய்ப்
புந்திமிகுமருமறைக்கு மெட்டாதூறுந்
தேனப்பாவுண்டுறங்காத் தொலியானந்த
தீட்சைபெறக்கிட்டுமதி செப்புவேனே. (௫௩)

செப்புவாருபதேச முறீதுவாங்கும்
சீடர்களேவுங்களகந் தெளிவுண்டாக
வொப்புவாருவமையில்லாப் பொருளொன்றாலே
யுவமையொன்றை யெல்லாமாமுவக்கவுள்ளம்
நட்புமிகவட்சரமுந் தொனியுமற்ற
நற்றவநேர்பெற்றதிக நாட்டம்பூட்ட
விப்புவியின்வாழ்வு சுகமிதுநேராமோ
வினிதுசுகமானகவி யென்சொல்லாமே. (௫௪)

சொல்லுகிறேன் நான்மறைக்கு மெட்டாநின்ற
சோதியருளானந்த சூக்ஷங்காண
அல்லுபகலற்றவக வெளியினுள்ளே
ஆதரவாநின்ற வுயிரனைத்துங்காக்கும்
வல்லமையாமிப் பொருளுக்கிணையாயிந்த
வையகத்திற்கண்டு சொல்லவாய்த்ததல்ல
பல்லினமுங் கொக்கறியாதிருக்கும்போது
பாலதுபோலொப்புவித்த பாங்காமன்றே. (௫௫)

பாங்கப்பா தனையறியப் பறுலென்றாதி
பறைந்தமொழிகங்கபியிப்பாரிற சொல்லே
வாங்கப்பாவழிவிவரங் கேட்கநல்லோர்
வையகத்துளெங்கிருப்ப ரென்றுதேடி
யோங்கப்பாபுத்தி நிறைந்தடங்காஞானம்
பூரணமாகின்ற வற்புதத்தையுள்ளம்
ஏங்கப்பா ஏங்கியழுதனேகா வென்றே
யிணையடியைத் தொழுதுகுருவின்சொற்கேளே. (௫௬)

குருவென்றால்தேவகுரு விறகூனுல்லா
குவலயத்திலுயிர்க்குயிராய் நிறைந்தசோதி
மருவென்றமருவதிக்குள் மருவாய்நின்ற
மாதலமாங்காரிரியை மறவாய்வித்தை
பெறுவேன்றானவனு மொருகுருவாமப்பா
பெருமைகதை பேசிசுவால்செய்வோன்பேயன்
கருவென்றகருவதிக் குட்கருவாங்காட்சி
கண்டறியார்குருவென்றோன் கழுதையாமே. (௫௭)

கழுதையென்றாலதை யிழிவாயெண்ணாதப்பா
ஒறக்குறவுமிகவா நீகாழிவன்றோதும்
பொழுதுகத்துஞ் சொல்பிறந்தநாளச்சத்தம்
பூமறையுமட்டுமெச் சொல்போக்காதப்பா
தொழுததுபோல் கருக்குழிவிட்டுலகிற்பிரய்த்து
சொல்மறந்தழுதவகை குட்சங்கேட்க
பழுதறுக்குங்கலி மாபக்ஷாவொன்றெல்லாம்
பாதமேற்றிகுருவெனக் கைபற்றுவாமே. (௫௮)

பற்றநீயவருறவு பிரியாதப்பா
பிரதசிரம்வைத்தழுமுன் பாவம்போக்க
கற்றநீயுள்ளுறவு மறவாநின்ற
காரணமாமொன்றெல்லா மென்றகாட்சி
பெற்றநீகுருநிக்கை கொள்ளவுள்ளப்
பெருமையற்ற சிறுமையந்தகாரஞ்சேர்க்குஞ்
சற்றநீயவருறவுஞ் சொல்லுமமாறுச்
சார்ந்தவர்க்குக் கனகசுகந்தானுண்டாமே. (௫௯)

உண்டாமிங்குங்களுக் கிங்குறுதிவாக்ய
முற்றுணர்ந்து நடவாதானுனுத்தனுக்குங்
குன்றுதவிரை கொடுத்துவளர்த்தகாளே
குத்தவருபிரை கொடுத்தகோனைச்சிந
கண்டாலும்வாயதட்டிப் பிடித்துக்கொள்வான்
கடும்பிரளியாற் கழுத்திற்கத்திவைப்பான்
விண்டேநல்லுவமை யுலகுருமார்நிந்தை
வீண்பிதற்றியவர்வாக்கால் வீணாம்பாரே. (சுo)

வீண்போகா திருவுலகுக்கதிபெற்றுளே
மெய்படியைக்கண்டு தொழுமேலாம்பாதங்
காண்பதற் கோதிவைத்த குருவெறுப்புக்
காணாதுகண்டு காலடியைச்சாரு
ஆணவமும்மலமறுத்த முதமுண்ண
ஆளடிமையாயிருந் தறிவைக்கேளு
மாண்பரடி தொழுதனைய முன்னேயான
மாபவமற்றதிகதிநல் வாழ்வுண்டாமே. (சுக)

வாழ்வுபெற்றிருக்க மதிமார்க்கங்கேளு
வலுமைபெறு மும்மலமுமாற்றியாள
நாட்டோறுமுப் பொறியுமொன்றாய்ச்சேர்த்து
நற்பிரியமாகவிமா நாட்டம்பூட்டி
சூழவருகரணமறை மறையாவிந்து
சுயமறியவேண்டி நடுவுற்றுப்பாரு
ஆளுமுயிர் அல்லாவைமறவாநின்று
லவனொளியை யகவொளியிற்காணலாமே. (சுஉ)

கண்கொள்ளாவானந்தக் காட்சிதன்னைக்
கண்டாலுமறைவாகிக் காணுநிற்கும்
பண்டுள்ளவினையறக்கு முறையானந்த
பானுமதியமுதகவிமா வுண்டோர்க்கு
நின்றுவிளையாடவெட்ட வெளியிலுள்ளே
நிலைத்தபரிபூரணமா நிலைபெற்றோங்கும்
அண்டரொடுமுனிவர் புகழ்ந்தேற்றுமாதி
யாதரவுபெற்றிட வுள்ளறிவைப்பாரே. (சுங)

உள்ளறிவுக்குள்ளறி வூடாடிப்பார்க்க
வுத்தமனுமசாட்ட மறியலாங்காண்
கள்ளறிவாக்கொள்ளையிடும் பேரைக்கூடிக்
கலந்துறவுகொள்ளவனக் கேதுகாலன்
விள்ளரிதுவான புகழாதிநாதன்
வெளியகமுங்கண்டு களிப்பானவாய்ச்சொல்
எள்ளலென்று நிந்தையில்லா துவந்துகாண
இறையருளாலினிது சுகம்பெறுவார்தானே. (கூச)

தானின்றநிலையறியார் நானென்றுண்மை
தத்துவமுப்பொறி மூக்குச்சறடுபோட்டு
நானென்றநாயனிட மிருந்தமாடு
நானவனென்றேபிதற்ற நாவுமுண்டோ
ஃனென்றழைறவானை யின்சாருக்குங்
குருவடியைத்தொழுது மொழிகூறக்கேளு
வானென்றயின்சாரு வாநேர்கண்ட
வழிபுகுத நம்பிறையை வணங்குவாயே. (கூரு)

வணங்கவந்தவழிபறைந்தால் நாக்கிசாவான்
வழியறிந்திரப்பமுற்றூற் காமிலாவான்
குணமறிவுங்குடிகொண்டால் தனவானுவான்
குருவருட்சொல்பெற்றறியான் குருடனுவான்
பிணமறநிமவுத்துடையோன் பேயனுவான்
பிதற்றியெந்நாட் போக்கினவன் பித்தனுவான்
மணமதிக்குள்மணமடங்காப் பொருளைப்போற்ற
மாதவஞ்செய்யிறை[illegible]புறவு வாய்க்குந்தானே. (கூசா)

வாய்க்குமப்பா அல்லாவு[illegible] வெளியின்சொர்க்கம்
வாய்த்தவங்கைபல்லின[illegible]மார் விருக்கமாகிக்
காய்க்குமப்பாமிருவான[illegible]கனிபூரித்துக்
கனிமொழுகுக்தேனு[illegible]டு களங்கமற்று
சாய்க்குமப்பாபூரண [illegible]ய்ஞ்ஞானஞ்சொல்ல
சாயலறுஞ்சாயல்தருந் தாழ்விங்கேது
மாய்க்கவருநமனையு மாய்த்திடுவாயுள்ளே
மவுனமணிமந்திரமோ ரெழுத்தைக்காணே. (கூஎ)

ஒரெழுத்துமீரெழுத்து மறியவேணும்
உட்புகுந்துநின்றெழுத்தை யுவக்கவேணும்
பாரெழுத்துநாலெழுத்தைப் பார்க்கவேணும்
பத்தம்வைத்துவைந்தெழுத்தைப் பதித்தல்வேணுஞ்
சீரெழுத்தாமெழுவகையுந் தெளியவேணுந்
திருவுருவாய்நின் றெழுத்தைச்சேரவேணும்
ஆறெழுத்துமஞ்செழுத்து மொன்றாய்நின்ற
அறிவிசுலாமீமானுள் ளாகப்பாரே. (௬௮)

ஆவெழுத்தும் ஊவெழுத்துமறியவேணும்
அளல்பெருகஓமெழுத் தொன்றாக்கவேணுஞ்
சாவெழுத்துமுயிரெழுத்தாய்ச் சமையவேணுஞ்
சற்குருவீற்றிருந்த விடஞ்சாரவேணுங்
கூவெழுத்தும்வாவறிந்து கூறவேணுங்
குல்லுயிருமுள்ளறியுங் குறிப்புவேணும்
மாவெழுத்தாமிங்கிதனை யறிந்தபேரை
மாநிலத்திற் குருவென்றால் வாசியாமே. (௬௯)

வாசிநின்றெழுந்த வகையறியவேணும்
வழுக்குறைந்தவகை வகுத்துப்பேசவேணும்
மாசியம்மாவாசி யிருட்டேதகாணும்
வந்தவழிபாடறிந்து வணங்கவேணும்
பூசிதமாமினியமொழி தேறவேணும்
பூசிதனுள்ளறி வொருகண் பூக்கவேணுஞ்
சோசியங்கண்டிறப் பிறப்புசொல்லிச்சாவுஞ்
சுணங்கர்களைக்குருவென்றால் தோஷமாமே. (௭௦)

தோஷமறுத்தனையறிந்து கொள்ளவேணுந்
தொந்தித்தஸ்தூலவுடம் பி[illegible]ற்கைவேணும்
வாசமுறவினசிரப்பமாக வேணும்
வந்தவழிபறைந்து மறைவ[illegible]ல்வேணும்
வேஷம்பல்விதமொன்றாய் விரி[illegible]கல்வேணும்
விதமில்லாப்பூரணமெய் விளங்கவேணும்
பாசம்பசுப்பாலுண்டுணரும் பேரை
பாரிவிவர்க்குரு வெனக்கால்பற்றவெட்டே. (௭௧)

எட்டிரண்டு மோருருவாக்காணவேணும்
இகபரமுள்ளறிந்து நிலைப்பிருக்கவேணுங்
கட்டறவாழும் மலத்தைக்கடத்தவேணுங்
தண்டமதிகடந்தவொளி காணவேணுங்
கொட்டுமொருதேனுருவஞ் சிவந்திதோணுங்
கும்மெழுந்து தவ்விநல்லகூத்துக்காணும்
பட்டுருகும் யோனியிடர்கண்டபேரை
பாரிலிவர்குருவெனக்கால் பற்றுண்ணேக்கே. (௭௨)

உண்ணாமலுண்டுநிதமு முறங்கவேணும்
ஓரெழுத்துப் பேரெழுத்தாமுவக்கவேணும்
மண்ணானமூவாசை மறக்கவேணும்
மாதுவமாங்கலையறிந்து மாற்றவேணும்
புண்ணாகப்புலனொடுக்கிப்புகுதவேணும்
புத்திசித்தமோர் நிலையிற்பொருந்தவேணும்
எண்ணாதவெண்ணமறுத் தெண்ணம்நேர
இவரடங்காப்புகழ் சிருகம்பாதஞ்சேரே. (௭௩)

சிறுபிறையாய்ப் பிறந்தவிதமறியவேணுந்
தினமதிகந்திருவளர்ந்த தேதுகாணும்
பெறும்பிறையாமீரேழி லெல்லாமென்ற
பேரணைந்தபெருமை தன்னைப்பேசவேணும்
மறுவணைந்துமறுநாளிற் குறைவுக்காணும்
மாயமறிந்தே மனதுதேறவேணுங்
கருவுருவுக்குள்ளமைந்த காட்சிதன்னைக்
கண்டுதொழுந்தொண்டர் விந்தைகாக்கப்பாரே. (௭௪)

விந்துநிலைகண்டிருந்து வணங்கவேணும்
வேடிக்கையானதெல்லாம் விளங்கவேணுங்
கந்துகங்கைவசமேறி யோட்டவேணுங்
கதிர்லிங்கமண்டபத்தில் கட்டவேணு
முக்திருப்புமுடிவிருப்பு மிடையுங்காணு
முச்சுடருமஞ்சுடராய் மொழிதல்வேணுஞ்
சந்திரனும்பானுநிகரற்ற சோதி
தனையனந்தசற்குருவின் னருட்கொள்வாயே. (௭௫)

கொள்ளுவாய் சாக்கிரமம்ருத்தல்சூது
 சூழுனசொர்ப்பன மாகுறிப்புமீது
அள்ளுவாய் சுழுத்தியுமொன்றுனசாது
 அதிதவமாந்துரிய மிருந்தாளும்போது
விள்ளுவாய் துரியாதீதஞ்சேரல்நீது
 வினையறமெய்யுயிர்ப் பாலுண்டுறங்கவாது
தள்ளுவாய் வெளியுணவுண்டழி வாமென்னுந்
 தன்னிடமுண்டது வறியத்தாட்சிகாணே. (௭௬

தாட்சிணையாஹக்கறிந்த பீர்மார்க்கெல்லாந்
 தாரில்வருங்கவனமிடர் தவறச்சொல்வேன்
ஆட்சிபெறும் நம்மிறையொன்றுனகாட்சி
 அறிந்துமறியாதவர் போலிருந்துவாழ்க
காட்சிமிகுமானந்த மிகுதமாகுங்
 காசினிகண்மனுப்பதர்கட்க் கீந்தாயானல்
போச்சுதப்பாசித்தனைத்தும் வெளியாய்ப்போகும்
 புல்லரிடமாயுதமும் புல்லொப்பாமே. (௭௭

புல்லர்களைச் சிடனென்றுகைக்கொள்ளாதே
 பூவுலகப்பொருள் பெரிதென்றெண்ணுர்போல
நல்லறிவுபெறுமளவு நாய்போற்குன்றி
 நடுங்கலஞ்சவிவனென வுள்ளறிவைமீந்தால்
பல்லறிவும்பெற்றறிந்தேன் குருமேல்நிந்தை
 பகர்ந்திடினுங்குருமுனிதல் பலியாதென்பான்
தொல்லுலகின் நந்நபிசொல்லுவந்தபேர்க்கு
 தொடர்மொழியாமினிதுகவி சொல்லுவேனே. (௭௮

சொல்லறிவு வஞ்சியர்க்கும் வம்பனுக்குஞ்
 சோர்வானவயதார்க்குஞ் சிறியவர்க்கும்
நல்லறிவாம்நால்வழியு மிணங்கலின்பம்
 நன்மைதரும் ஸாஹிறுடன்பாத்தினென்றும்
பல்லறிவுமீன்றுவந்த வாதிசிற்றை
 பறைந்தமொழியற்ப மென்னுட்பண்புமில்லாப்
புல்லர்களுக் குள்ளறிவுசொல்லாநின்று
 புகழ்முன்னோர் புந்திதரும் பொய்யற்றோமே. (௭௯)

பொய்யறுக்குமுன்னவன் சொல்லுறுதிவாக்யம்
புத்திதடுமாறுதலற்றிட மானுண்டாம்
வையகங்கண்ணுள்ள வுயிர்க்குயிராய்நின்ற
மகத்துவமா குரு முகம்மதுறசூலுல்லா
மெய்யருஞ்சொல்லினிது கலிமாவுள்ளாதி
வீற்றிருக்குமாப் பொருளைவிளக்குஞ்சீர்சொல்
ஐயமில்லாதேதார்மைபெறு மகங்கிளற்று
சித்தவமெய்ஞ்ஞானவறி வொளிமுன்னுமே. (அ0)

முன்விட்டுப்பின்னடந்து தாழ்மைசெய்வான்
மூவாசையனுவு மெனக்கில்லையென்பான்
மின்வெட்டும் பனைமைபணிவிடையாற்சிற்றை
விளக்கிவிட்டாலற்பருள மிருத்திவையான்
கள்விட்டிடி னெண்ணெயினு லெரிந்த தீபந்
தன்முகக்கச்சூடெவர்க்குந் தாங்கப்போமோ
பன்மையறிவுள்ளொளிகண் விளக்குமாசான்
பகைவெறுப்புன்முகங் கருகப்பண்ணுக்தானே (அக)

பண்ணுரைத்தஞான மதியுலகுள்ளாக்கும்
பகைகடமனுமிடர ஜநற்பதவிசேரக்
கண்ணுதலாய் நின்றகருவுருவருபக்
காட்சியொளிகாட்டுங்குரு வினவலான
வெண்ணமுற விருபபவனேகவனவாதி
யிவ்வுலகுமவ்வுலகு மிருபேருண்டாக்
திண்ணமிது மனதுறசந்தாபநீக்கு
திருமுகம்மதிருவுள மாகியசொல்லாமே. (அஉ)

சொல்லறிந்துசத்தமிலே தரித்தபிரே
தொல்லுலகுட் கும்பிகடத்தேறுதற்காய்ப்
பல்பிணிக்குமோர்மருந்தா மிருக்குற்றன்பம்
பார்த்துவனுபான மறிந்தாட்டாவின்னம்
புல்லனுமதடிதொழுக்கைப் பொருளைவாங்கி
புதைபொருளாம்ரத்தின்ப் பொக்கிஷத்தினுள்ளே
கல்லார்க்கும்வீணருக்கு மள்ளிட்டால்
கடைத்தெருவி லின்றுவிலைகூறுவானேன். (அங)

விலைகூறும்வீணர்களே யுங்கட்காதி
விருப்புறவேயோதிவைத்த விவரந்தன்னை
தொலைதூர்நின்றமண மறிந்தசூட்சா
சூட்சுமத்தைக்கண்டு வெளிசொல்லாநின்று
மலைப்பறுக்கவுள்ளுறவு பிரியாவிந்தை
மாப்பொருளைக்கண்டுதொழு மாந்தருள்ளங்
கலைப்பறுமெய்ஞ்ஞான மூண்டாமினிதுவாழ்வு
கனககககமெனுமதி நற்கதியுண்டாமே. (௮௪)

கதியுண்டாம்ஹக்குற வட்கிருபையுண்டாங்
காசினியிலிருந்து நாட்கடத்தஞான
மதியுண்டாமாபவமுக் குற்றமாற்ற
மறலியிட ரற்றதிகவாழ்வுமோக்கப்
பதியுண்டா மவ்வுலகப்பவுசுமுண்டாம்
பாதமறிந்தொரு பொருட்கைப்பற்றிநாட
விதியுண்டாய்பிர்மூறீது பெற்றோர்க்கெல்லாம்
விகிர்தமறவணங்க வதிவீறுண்டாமே. (௮௫)

வீறுடனேமூவாசை வேண்டாநிற்பார்
விண்ணுலகுமண்ணுலகும் புகழ்படைப்பார்
கூறுமொழியுள்ளெழுந்த சூக்ஷங்கண்டு
குருமொழியுஞ் சொல்லுறுதிமறவாநின்ற
பாருலகுள்ளிவர்க்கிணை நிகரில்லாநற்
பதவிதருமிறையவன் லிக்காவிற்சேரும்
பேறுபெற்றனுதினமும் பிரியாவாழ்வு
பெலனுண்டாஞ் சற்குணநற்பலனுண்டாமே. (௮௬)

பலனுண்டாமிறையுவந்த கலிமாத்தன்னைப்
பார்க்கவறுநான்கெழுத்தும் பனிரண்டாகிப்
பெலனுண்டாமம்மரத்து டேறிப்பார்க்கப்
பின்னலிலை பூப் பிஞ்சு காய் கனிக்கின்
புலனுண்டாமதுவளர்க்கத் தேனுமுண்டாம்
புந்திமிகுமானந்த வெள்ளமீது
கலனுண்டாந்தரித்து வரக்கரையுங்காணுக்
காணுமொளிக்கண்ணுறங்காச் சூக்ஷங்காணே. (௮௭)

சூக்ஷமப்பா நம்மிறைவைத்தாட்டுஞ் சூக்ஷந்
சொல்லரும்பேரொளி யணைந்தசூக்குமங்காண்
மோட்சமப்பாவினையறிந்து சரசஞ்செய்ய
மும்மலமுழுவினையும் முப்பாழும்பா
ழாச்சப்பாவாரிவிடக் காலைமாலை
யக்கினியாலொன்றெல்லாம் வெளியில்வந்து
வீச்சப்பாநாகமுடன் சாரையின்னி
வெளிக்கண் ணுங்காண விளையாடும்பாரே. (அஅ)

விளையாடிநின்றவிதம் விளம்பக்கேளு
விழியுயரநோக்கிவிட்டால் விண்ணுக்கேறுங்
கிழியோடா கீழ்நோக்கமண்மேலாடுங்
கிட்டவரவுருவொடுங்கலிடை பின்னேருங்
கழையர்டுங் கூத்திதற்குமிணையிலன்றே
காரணமாம்பூரணமுட் களிப்புமெத்த
பிழையில்லையான் சொன்னேனாகியாணை
பின்னமென வெண்ணமுள்ளான்பேயனாமே. (அகூ)

உள்ளானகவிமாவுள்ளுவந்த அல்லா
உறுதிமொழி தீபகமிங்குவந்த வாசான்
கள்ளானசொல்லமுதப் பாவுண்டுண்டு
காட்சியாமுள்ளெழுந்த சூக்குமந்தன்னை
விள்ளாதுள்ளாவிருத்தப் பாரிலுள்ளோர்
வினையறமெய்ஞ்ஞான வழிவிளங்கவேண்டிக்
கொள்ளார்க்குமஞ்ஞானம் பிரியாநின்று
கூறுமொழிமெய்யறி நற்குணமுண்டாமே. (கூ0)

குணமிகுந்தகாரணமுட் குறிப்புச்சொல்ல
கும்மிவிளையாட்டெல்லாம் பகலாமப்பா
மணமணைந்தஸ் தூலத்துள்ளெழுந்தகாட்சி
மகத்துவமாரவி மதியொன்றாகக்கூடும்
பணதிகராம் பரிபூர்ணமதிவெளிக்கண்
பார்க்கவெளிகாண் பதில்லையப்பாவின்ப
வுணவுறவுநீக்கியுள்ளே யுணவுண்டாட
வுலகைமதிபூரண மோரொளிகாண்பாயே. (கூக)

ஒரொளிவானேரொளி கண்ணிறைந் தடங்கா
வுள்ளவெளியில்லல்லா ஹூவுக்குள்ளே
நேரொளியாயின் றிலங்கும் பாத்திமாகை
நிச்சயமாவரளெடுத்தோங்கும்வேளை
பேரொளியாமலியுல்லா கத்தரிக்காய்
பெருமைபெறுமவ்வாளுக் கிரைகொடுத்தார்
சீரொளியில்லொளித் தொருவனிருவர்கோபஞ்
சினமறத்தொன்றுருபு வப்புச்செய்தானன்றே. (௯௨)

செய்தலிறையிடமிருந்த சிங்கேராலே
ஜெகமனைத்துநின்ற வுயிர்தீனிலாச்சு
மெய்தவமாமினிது கலிமாவினுள்ளே
மேன்மைபொருபொரு ளெல்லாம்விளங்கலாச்சு
மையிருளாங்குபிரறுத்துவிசுலாமாகி
மறுபடியும் நபிகலிமா மறந்தபேர்க்கு
தையிபுஷஹாதத்துக் கலிமாக்கண்டு
தானிஸ்லாமீமானுந் தழைப்புண்டாமே. (௯௩)

ஈமானுமிஸ்லாமு மிரண்டுமொன்று
யினிதணைந்தரும்பி விளையாட்டைக்காண
ஆமாவாம்லாயிலாஹ யில்லல்லாஹு
வதுவணைத்தகாட்சி யற்புதத்தையார்க்கும்
வாமமொளிசொல்ல நிகரில்லாநின்ற
வையமனுவவரவர்க் குள்ளானசிற்று
நாமமுற்றுநாதசத்தி வெளியுள்ளாடி
நாதனுறவாயிருந்து நாடினேனே. (௯௪)

நாடினுளவனவளை மிருநாளாக
நானுவந்துவிவளிருகா லொன்றுய்முத்தி
கூடினளெனையுவக் துள்ளமீந்து
கொஞ்சுதனுங்கூத்து விளையாட்டுங்காட்டி
வாடினளவளை மறந்திருந்தபோது
வானவனைநானுவந்து வருந்தவுள்ளம்
பாடினுள்பூரண மெய்ஞ்ஞானம்நூறு
பாடலரும்பொருளாசை பற்றிக்கொள்ளே. (௯௫)

பற்றுறவுகாட்டிவைக்கும் பொருளைக்கூர்ந்து
பார்த்தறிவுவகைகேட்கப் பிர்மார்சொல்ல
ஒத்திருக்குஞ்சனது சரிகாணும்வாய்ச்சொல்
உண்மைபொருபொரு ளெல்லாமென்றஞானம்
பெறறதனையுள்ளுறவு மறவாநின்ற
பெருமையதைவிண்பிதற்றிப் பேசார்சித்தி
முத்திபெறுவார்க ளையமில்லைகண்டாய்
முப்பாமுந்தாண்டி வெளியொளிகாண்பாரே. (௬௬)

வெளியில்லாமெய்ஞ்ஞானம் வெளியாச்சொல்ல
வெளியறிந்துவெளியில்லக வெளியுட்காட்சி
வழியிருக்கவழிதவறன் ஞானங்கங்குல்
வாதறுக்கும் பூரணமெய்ஞ்ஞானம்நூறு
மொழிபவுள்ளமீந்துநின்ற சூலாம்விந்தை
முப்பொருளொன்றான வெளியப்பாலுள்ளே
வெளியணைந்தகோடியித மெழுந்தசோதி
மெய்ஞ்ஞானக்கவிகாதிர் முஹியித்தீனே. (௬௭)

காதிரியாக்குதறத்துள் வீட்டைக்காணக்
கருணைபெறநேர்வழியைக் கைக்கொள்ளாமல்
மாதிரமெல்லாமீன்ற கலிமாவுள்ளே
மலைமலைபோலான பொக்கிஷங்கையாளா
ஊதாரியாச்சுதங்கே கள்ளராலே
யுற்றுணர்ந்துபாராமற் செத்தான்மெத்த
சேதாரமில்லைப்பா காதிரிக்குட்
சேரவிறையுள்ளுறவு் சிந்திப்பாயே. (௬௮)

சிந்திப்புகம்பிறையை யுள்ளுக்குள்ளே
திருவெழுந்தபொருளணைத்துங்கலிமாவுள்ளே
வந்தித்தனுதினமு மறவாநின்ற
மாதவமாம்அஹதுவஹ திவாவஹிதொன்று
சந்தித்துசஜதுறவும் றாஹஞ்சிற்றுந்
தானறிந்து விந்துநிலை தானங்காண
அந்திபகலற்றவிட மெல்லாமொன்று
பாழுநின்றபேரொளி யுள்ளல்கம்தாமே. (௬௯)

அல்கம்தாயெங்கு நிறைந்தடங்காபோற்றி
அஹதுஹதுவாஹிதெனு மருளேபோற்றி
வல்லபமாவுலகுயிர்க்கு மணியேபோற்றி
மாதவத்தோர்காணுமொளி மயமேபோற்றி
சொல்லருமைமெய்ஞ்ஞானச் சுடரேபோற்றி
சூக்ஷசுழிமுனைதிறந்த சுருதிபோற்றி
யல்லலிடரற்றவகைப் பொருளேபோற்றி
யடிநடுவுமுடிவல்கம் தர்ச்சித்தேனே. (௫)

மெய்ஞ்ஞானு ஆத்மகிரீடத்தந்தாதி

முற்றிற்று.

---

பிஸ்மில்லாஹி.

# மெய்ஞ்ஞானக்கண்மணிக்கண்ணி.

அல்ஹம்தா ஆலமனைத்து நிறைந்துள்ளடங்கா
வல்லான் சொல்லென் மெய்ம்மனம்புரியக்காப்பாமே. (௧)

அஹது ஹூதுவாஹிதுலன்றனதுக்கு முன்னிகர்த்த
தனைதாழ்மையற்றரும் வித்தானவனீ காப்பாமே. (௨)

கல்லார்க்குங்கற்றார்க்குங் கருணைதவம்பெற்றார்க்குங்
குல்லுயிர்க்குள்ளாதரவு கொள்ளுமிறை காப்பாமே. (௩)

கூடுதலுமில்லா குறைவு மற்றலாதஜூன்
ஆடலற்றவித்துவெளியான ஞானக் கண்மணியே. (௪)

ஹா ஹூ யுண்மையா காக்குவெளிஹூ நீயாம்
வாஹூதுக்குள்ளான மணிவான ஞானக்கண்ம்மணியே. (௫)

வித்தாக்குள் வித்தே வெளியகமுங்காக்குமுத்தே
சித்தாக்குட்சித்தே தெளிவுஞானக் கண்மணியே. (௬)

வானோர்குலத்தரசே வாசம்பல்லுயிர்க்குயிரே
ஞானபோகங்காட்டவந்த நட்புஞானக்கண்மணியே. (௭)

சிந்தாமணியா சீமானனைந்தகமணிமெய்
விந்துநிலைதீபவிளக்கேஞானக் கண்மணியே. (௮)

சித்தனென்றும்பேர்புனைந்து செத்திடுமுன்சாவாமற்
செத்தனென்றபேர்புனைந்த தெளிவுஞானக்கண்மணியே. (௯)

வற்றாவருட்கடலே வாசவங்கமேற்றியெங்குஞ்
சுத்தக்கரைகாட்டுஞ்சுடரேஞானக் கண்மணியே. (௧௦)

சந்தாக்கிலேற்று முன்னுட்சந்தாக்கிலேற்றியென்னுட்
சிந்தாகுலமறுத்ததீபஞானக் கண்மணியே. (௧௧)

தொண்டிகண்ட தானஞ்சுத்துவட்டநீடறைக்குள்
தண்டமையமுள்ள வெளிசார்ந்தஞானக்கண்மணியே. (௧௨)

வெட்டவெளிமை யிருட்டில்விட்டுவெளியுட்சுடலை
சுட்டெறியாமலெரித்த சுடரேஞானக்கண்மணியே. (௧௩)

மஞ்சணித்து செந்தாமரைக்கண்ணொளிவிரித்து
அஞ்சொகுத்து முற்றொழுகையானஞானக்கண்மணியே. (௧௪)

அஞ்சொகுத்து அல்லாகுவானகலிமாவின்றனு
உஞ்சேபித்துநாட்டமுவபபுஞானக்கண்மணியே. (௧௫)

சித்திபெறவுள்ளே திருவிளையாட்டும்பார்த்து
முத்திதருமத்துவிதமுத்தே ஞானக்கண்மணியே. (௧௬)

பெற்றார்க்குச்செயருமை பேணுதலில்லாவிடுத்தால்
மற்றார்க்குமென்ன வுள்ளமலரே ஞானக்கண்மணியே. (௧௭)

என்னிலுமேன் மக்களைத்தனையோகோடியினம்
உன்னைவிடத்தாயினிதேது எதுஞானக்கண்மணியே. (௧௮)

தாயாயிருந்ததும் நீதனையணைந்ததந்தையுநீ
மாயாவணைந்த திவ்யமணியேஞானக்கண்மணியே. (௧௯)

வாக்களித்துப்பின்னால் வருமளவுமென்றுயரம்
பார்க்கவுனக்கின்பப்படுமோ ஞானக்கண்மணியே. (௨௦)

நீசொல்லும்வாக்கு நெடுநள் துயர்போக்கு
தீஞ்சொல்லுறை பூட்டுஞ்செந்தேனே ஞானக்கண்மணியே. (௨௧)

துன்பப்பெண்மாயை துயரறுக்கவுள்ளூறுந்தேன்
இன்பமுண்டுபாடவினிது ஞானக்கண்மணியே. (௨௨)

மாயப்பெண்ணுள்ள மறக்கமனோன்மணியென்
தாயேவந்தின்பந்தரு மெய்ஞ்ஞானக்கண்மணியே. (௨௩)

கண்ணாடிக்குள்ளொளிவு காட்டிமறைவற்றுலகப்
பெண்ணாசைநீக்கவரும் பெண்ணே ஞானக்கண்மணியே. (௨௪)

பெண்ணாசைவிட்டுப்பிரிந்தோடப்பின்றொடர்ந்து
கண்ணாசைவிட்டறுத்த கண்ணே ஞானக்கண்மணியே (௨௫)

கண்ணுமற்றுமூக்கு மற்றுகாதுமற்றுவாயுமற்று
எண்ணமற்றெல்லாம் நிறைந்தபெண்ணே ஞானக்கண்மணியே. ( )

வெளிப்பெண்மேலாசை விட்டாடாநீநினைந்த
களிப்பென்ன பெண்ணேயுட்கண்ணே ஞானக்கண்மணியே. (௨௭)

கோடிகதிரிலங்குங் கோவுலகம் வாழுமுத்தே
கூடியணைந்து சுகங்கொள்கைஞானக்கண்மணியே. (௨௮)

கண்ணுமிடைமூக்குங்காது மதிவாயுடனே
நண்ணுமெய்யுள்ளான சூட்சநட்புஞானக்கண்மணியே. (௨௯)

ஏழுகண்ணுமொன்றாயிணங்கும் பரிபூரணக்கண்
ஆறுமுயிர்க்காதரவுள்ளறிவுஞானக் கண்மணியே. (௩௦)

கண்ணிருவிழிக்கொளிவு காட்டுங்கதியுள்ளறிவு
எண்ணமுறவுள்ளுவந்த பெண்ணே ஞானக்கண்மணியே. (௩௧)

பூசிப்பாமுன்னைப்பொழுதிர வற்றுள்ளிருத்தி
நேசிப்பாம் நெஞ்சுநிறைவுஞானக்கண்மணியே. (௩௨)

தன்னையறியார் தானிலைப்புநீச்சறியார்
என்னபலன்பெறுவாரினிது ஞானக்கண்மணியே. (௩௩)

வந்தவழியறியார்வழிநிரப்பங்கொண்டணையார்
எந்தவிதம்பிறெனப்பேரேது ஞானக்கண்மணியே. (௩௪)

கண்ணுக்குட்கண்ணே கதிரலங்குமாணிக்கமே
விண்ணுக்குளேற்றும் விளக்கேஞானக்கண்மணியே. (௩௫)

வீணாசைமாதர் வெளிமயக்கங்கண்டிசைந்த
ஊணாசையற்றுறங்காவுண்மைஞானக் கண்மணியே. (௩௬)

ஊணாசையற்று வுறங்காவுறங்கவெளி
வீணாசைகண்மூடி விழிக்குஞானக்கண்மணியே. (௩௭)

புந்திக்குமெட்டாப் பொருளேயனுதினமுஞ்
சிந்திப்புட்குள்ளுவந்ததேனே ஞானக்கண்மணியே. (௩௮)

உன்மேல்பிரியமன மோயாதநாட்டமுனக்
கென்மேல்பிரியமில்லாதேது ஞானக்கண்மணியே. (௩௯)

உன்னாசையாலே வுறமுறையெல்லாமறந்து
மென்னாசைசற்று முனக்கிலையோஞானக்கண்மணியே (௪௦)

வேற்றுமைகொண்டென்னை விட்டுப்பிரிந்தாலென்மனஞ்
சாற்றவரிதான சலிப்பாகுஞானக்கண்மணியே. (௪௧)

பொருடந்துவிட்டுபொருட்புத்தன முற்றொடர்ந்து
மருளவிடாணமனமேது ஞானக்கண்மணியே. (௪௨)

கள்ளனும்நீயாமெய்காக்கு மதிகாவலுநீ
உள்ளபொருளுள்ளவன் கண்ணுள்ளஞானக்கண்மணியே. (௪௩)

மாயசித்துக்காரிமயக்கெலாம் நானறிவேன்
காயசித்திகாக்கக்கடனுமெய்ஞானக்கண்மணியே. (௪௪)

உள்ளபொருளெல்லா முருக்கிச்சுட்டுத்தின்றுபின்னங்
கள்ளத்தனம்படைத்தகண்ணே ஞானக்கண்மணியே. (௪௫)

மேனிநிறமஞ்சணித்து மெலிந்தகிழடாக்கிவிட்டு
தான்விலகிக்கொள்ளத்தகுமோமெய்ஞ்ஞானக்கண்மணியே. (௪௬)

காலைப்பிடித்துக்கடைத்தெருவுக்குளிழுப்பேன்
பாலைக்குடிப்பேன் சமர்த்துபாருஞானக்கண்மணியே. (௪௭)

ஏழையென்று வுன்மனமீதெண்ணிவிளையாடுகிறாய்
கோழையறுத்துன்மனங்கொள்வேனே ஞானக்கண்மணியே. (௪௮)

பின்னிவிளையாடிப் பிலம்பார்த்துன்மெய்வலிக்கி
வன்னிவெந்நீர்மேற்கழுவு வாமெய்ஞ்ஞானக்கண்மணியே. (௪௯)

என்பலத்தையுன்வசமா யிட்டதனுலேழையென்று
தன்பலத்தைக்காட்டத்தகுமோ மெய்ஞ்ஞானக்கண்மணியே. ()

எல்லாமுனக்களித் தேகமாய்க்கண்டுவந்த
பல்லான்குறைநிறையப் பார்க்குஞானக்கண்மணியே. (௫௧)

உத்தமிப்பெண்ணென்று மூவந்தாதரவுபெற
பத்தினியானற்பகட்டு மேதுஞானக்கண்மணியே. (௫௨)

ஆயிரம்பேருக்கதிகமான பெருங்கூட்டத்துக்குள்
ஈயில்லாக்கள்ளுண்டு வெளியிடுமெய்ஞ்ஞானக்கண்மணியே. (௫௩)

ஈயில்லாக்கள்ளுண்டிக மெய்யுணவிழுந்து
மாயவித்தைகொண்ட மணமேதுஞானக்கண்மணியே. (௫௪)

கூடிவருந்தநற்குணம் பெறவுட்கொஞ்சிவிளை
யாடியிருந்தமதியா மெய்ஞ்ஞானக்கண்மணியே. (௫௫)

ஆடியிருந்தாளல்லுபகலற்றவிடம்
நாடியிருந்தமதி நட்புஞானக்கண்மணியே. (௫௬)

தேர்மேலைம்பத்தாறு தேசநடை பெற்றபெண்ணே
யாருமுண்டோ நேருனக் குள்ளறிவுஞானக்கண்மணியே. (௫௭)

சங்கையும்போக்குஞ் சரிக்கிழடைவாலிபஞ்செய்
கொங்கையமுதூட்டிமுத்தங் கொடுமெய்ஞ்ஞானக்கண்மணியே.

முத்தங்கொடுக்குங்காலை முத்திசித்திவந்தடுக்குஞ்
சித்தங்கொடுத்துமணஞ் செய்மெய்ஞ்ஞானக்கண்மணியே. (௫௯)

வேற்றுமையும்வேண்டாள் மெய்யுள்ளுவந்தபெண்டாள்
பத்மினிக்கண்ணையகிப்பண்டுள்ள ஞானக்கண்மணியே. (௬0)

பல்லாக்குமேலேற்றிப்போக்குந் திருக்காட்சிவெளி
யெல்லார்க்குஞ்சொல்லினிது ஞானக்கண்மணியே. (௬௧)

உள்ளபொருளெல்லா முலகோர்க்கினிதளிக்காற்
கள்ளப்பொருளென்றகதை யாமெய்ஞ்ஞானக்கண்மணியே. (௬௨)

கள்ளபொருடன்னைக்கடையில் விற்கச்சொல்லிநீயக்
குள்ளவரெனைப்பிடிப்பா ருண்மைஞானக்கண்மணியே. (௬௩)

காட்டியுநீவைப்பாய் கல்லார்கற்றோர்பிரியம்
பூட்டுதலுமூட்டும்புனித ஞானக்கண்மணியே. (௬௪)

எப்படியுமுன்சொல்விடரில்லை யென்றாலும்
அப்படியுன்சிற்றையக மெய்ஞ்ஞானக்கண்மணியே. (௬௫)

பெண்ணைநிதழுவுமாயைப் பேய்பிடித்தப்பித்தர்தரை
மண்ணைத்தெய்வமென்ற மனமேதஞானக்கண்மணியே. (௬௬)

மண்ணைக்கல்லைத்தெய்வமென்று மனுப்பதர்கைகொண்டுசத்தி
பெண்ணைத்தொழார்கிட்டபிழைபா மெய்ஞ்ஞானக்கண்மணியே.

மண்ணைத்தெய்வமென்று மாற்றிவைத்தபாவனையென்
கண்ணுறங்காக்காட்டிவைத்த கண்ணேஞானக்கண்மணியே. ()

[illegible]கையெடுத்த சூதர்களுள்ளக்கிரீசன்
நாலறியார்விட்டகற்றும் நாரேஞானக்கண்மணியே. (௬௯)

மெய்யைப்பொய்யென்று மேலாம்பதமிழந்து
பொய்யைமெய்யென்றேதும்பிழையேதுஞானக்கண்மணியே. ()

மெய்யும்பொய்யுமொன்றாய் மெய்யனைத்தமெய்யறியப்
பொய்யுமெய்யுமற்றபூரண மெய்ஞ்ஞானக்கண்மணியே. (௭௧)

சூலைவிட்டுவந்துமிற சூலைவெளியாக்குமுன்னே
காலம்விட்டழிவிடருண்டா மெய்ஞ்ஞானக்கண்மணியே. (௭௨)

சூலைவெளியாக்கிவைத்து சொல்லயெமன்பல்லிளித்து
காலனுமுன்கால்தொழக் கண்காணுஞ்ஞானக்கண்மணியே. (௭௩)

எத்தாற் பிழைப்பாரிவ்வுலகிற் மெத்தவுண்டுஞ்
செத்தாற்பிழைப்பரெவர் செப்புஞானக்கண்மணியே. (௭௪)

செத்தாற்பிழைப்பார் திருவடியைச்சார்ந்தவர்கள்
மற்றோர்மடியக்களிமண் மெய்ஞ்ஞானக்கண்மணியே. (௭௫)

உப்புணவுமற்றுஉள்ளுணவு பெற்றவர்க்கு
ஒப்புவமைமயில்லானு வந்தஞானக்கண்மணியே. (௭௬)

எட்டுச்சுவனங்கடந்துதேகவெளிபொட்டலிலே
பட்டப்பகலானமதி பண்ணேஞானக்கண்மணியே. (௭௭)

வட்டிரண்டுமாகி யிடையிலொருசூலாகி
யிட்டம்வைத்ததேள்வினை யாட்டேதுஞானக்கண்மணியே. (௭௮)

வாழும்பெண்ணிந்தவையமெலாம் போற்றவந்த
தேனுஞ்வெளியில்விளையாட்டேது ஞானக்கண்மணியே. (௭௯)

தேனுடனேபாம்புஞ் சிக்கிவிளையாடவிட்டு
நானுமெனக்குள்ளுவந்த நட்புஞானக்கண்மணியே. (௮௦)

தேளாதிஹம்ஸேவ சிக்குலாமீமலியே
ஆளாளுமெய்ஞ்ஞான வறிவேஞானக்கண்மணியே. (௮௧)

ஓயாமனுன்னேஞ்சிவப்பணைக் தணைந்திசடந்
தேயாதுநாயம் வனுத்தேனே. ஞானக்கண்மணியே. (௮௨)

னானென்றவுன்னுடம்பு நோவாதலிபேற்றி
தேனையுண்டுநாரையனைந் தேனே ஞானக்கண்மணியே. (௮௩)

நீயென்றனைவிரும்ப நெஞ்சுநிறையாசையுண்டும்
ஞாயமுண்டோநான்விரும்ப நட்புஞானக்கண்மணியே. (௮௪)

பெருமையினிதுட்சிறந்த பேறுசித்திமுத்தியிந்த
வறுமைபறவந்துவாழ்குவா மெய்ஞ்ஞானக்கண்மணியே. (௮௫)

தாரணியிடாறுத்த தவமாதவர்வாழி
காரணங்கண்காதிர்முஹீதீனி ஞானக்கண்மணியே. (௮௬)

மிச்சையற்றமெய்ஞ்ஞானி மேன்மைதருநாமமுகிதீன்
பிச்சையெனும்பட்டம் வாய்ந்தபேரேஞானக்கண்மணியே. (௮௭)

பாதிரவிநாள்முழுதும் பண்ணும்பூரணம்வாழி
காதிர்மூஹித்தீனும்வாழி கண்ணேஞானக்கண்மணியே. (௮௮)

## மெய்ஞ்ஞானக்கண்மணிக்கண்ணி

முற்றிற்று.

பிஸ்மில்லாஹி.

குதுபுகளின் நாயகமாகிய

முகியித்தீன் ஆண்டவர்கள்

# தத்துவ நிலை.

## தனியன்.

பாசமெவ்வுயிர்க்குப் பன்மலர் மணம்போல்
நேசமாதவ மெய்நிலைபெற நினைவாம்.




## வஞ்சி விருத்தம்.

நேச வாசக ராசனே
நேச ராசக தீசனே
நேச தீனிலை பாசனே
நேச பாசமா வாசனே.

குதுபுறப்பானி கௌதுசமதானி

முகியித்தீன் ஆண்டவர்கள்

# மகத்துவ நிலை.

தனியன்.

வான்மதியொளியோருருவரும்பொருணீ
தானகப்பொருடந்தாண்டருள்வாநீ.




வஞ்சிவிருத்தம்.

வானீ திபர மானவா
வான மாதவ நீதவா
வாதனி ஹா-ஹூ ஹி மூவா
வாமுகி யித்தீனீவா.

## பிஸ்மில்லாஹி

பதம்-பல்லவி.

ஹூவல்லாவறிந்தேகூறடி - அடி
குத்தெழுத்தேழு மிசைந்த ஒற்றெழுத்தேகாட்சரமே (ஹூ)

அநுபல்லவி.

நாவதிருஜல்லியென்ன நத்துக்கல்பிரிகியென்ன
கோவருள்பெறுங்கபியிற் கூறவறிவாலறிந்து
கோனருள்பெற வடியிற்
கும்பித்துஸ்தம்பனஞ் செய்ய
மாநீதமறிந்து தொழ
மன்னுங்குருவன்னி மூட்டி. (ஹூவல்லா)

சரணம்.

கோணமிருநாலிலென்னடி - ஒன்று
கூறியமுக்கோணத்துள்ளே சிறியெழுந்தேறி யாடுங் (கோண)

அடி ஆணவஞ்செலுத்துகின்ற அம்பிகையொற்றைக் கண்ணளே
நாணமற்ற ணைந்தவட்ட நற்றடியூன்று கோணளே
வானொளிமுக்கோண வீட்டில் வந்நடஞ் செய்பவளே
ஈனமற்ற முச்சுட்ராயெங்கு நிறைந்த கண்ணளே. (ஹூ)

ஒன்றிரண்டு மொன்று மென்னடி — அடி
யோசைமணிப் பூரகத்தி ரேசககும்பகஞ் செய்ய (ஒன்று)

அது அன்றுமின்று மென்றுநிறை கொண்டடங்காநின்றதுரை
யான அல்லாகு முகம்மதாத மிதுவாம்
முண்டகமிருதயமும் உந்தியடி நடுமுடி
முச்சுடருமோரொளியே சுச்சுடரிலங்கும் பெண்ணே (ஹூ)

எழுகண்ணிசைந்த தென்னடி - அடி
யெட்டிரண்டும்போற்சுழன்று ஒட்டிடாதருபமென்று(எழு)அது

வாழுமண் சிலத்தலத்தி லேழுமக்கா மத்திபத்திற்
சூழும்வெளியொளி விளையாடி வரவே
தேனுநிகரான சற்பம்நாளும் விளையாட கற்பம்
செம்பொற் சட்மானகண்ணேயெப்பிரானுவந்தபெண்ணே().

வாயில்லாச்சொல் வந்த தென்னடி - அடி
வாசமுற்றகுண்டலிக்கண்ணே சவிதொனியொளியாய் (வாயில்)

அது லாயிலாஹா யில்லல்லாஹூ முகம்மதுராசூலல்
லாஹியென்று ஓதுங்கலிமாவின் கருவாம்
ஒய்வில்லாமலோடிய சையாதவை நெனுங்கலிமா
உற்றகுண்டலி யறிந்து நற்றவமெனத் தெளிந்து (ஹூ)

அச்சமற்றிருந்த சொல்லென்ன - அடி
ஐம்புலனென்றுக்கிவிள்ள கெம்பீர வுல்லாசங்கொள்ள. (அச்ச)

அது எச்சமற்றுயர்ந்த கூட்டிலுச்சி தச்சுளினைப்பூட்டி
பட்சமுற்றதைத் தழுவி பானமுதுண்டோது முகிநீன்
பிச்சையிசைநாடுங் கவிநற் சுகமாந்திருச்செவி
இச்சையறநாடுங் கண்ணே முச்செகம்புகழும்பெண்ணே.()

---

பதம்-பல்லவி.

யாஉஜூது - யாஉஜூது
யாஉஜூதுக்கே கைறு.

அனுபல்லவி.

ஆவியுறவாய் நிறைந்து
ஆளும்றகுமா னொளியே. (யாஉஜூது)

சரணம்.

ஒப்பிலாதோர்பொருணீ யுவந்திருந்து வந்தடுத்தாய்
நட்புறுங்கதீ முல்லமாவான ஆஷக்கைவிடுத்தாய் (யாஉஜூது)

அவ்வலஹு தாய்நிறைந்தாய் அண்ணலுஹுதாய்ச் சிறந்தாய்
நவ்வியொன்றி லானவாஹி தானறப்பில்ஆலமீனே. (யாஉஜூது)

ஆலமறுவாகிலசையா தெழுந்த வற்புதமே
கோலம்பல்லொன்றுனீ ரூபங்கூறுமீதானீன்றரித்தாய் (யாஉஜூ)

ஆலமஜிசாமிலார்ந்துவாடி நின்ற வானந்தமே
ஸ்தூலசூக்மங்காரண மூன்றுமென்றுருவின் சானுவந்தாய்.(யாஉ)

தாத்துஜலாலான ஜமால்போற்ற வொன்றுவந்த கமால்
லாஹூத்து ஜெபறாத்துக்குன் ஹூதாத்துமவுஜூதாத்ததுநீ ()
ஆலம்சஹிராலங் கபிராலம் நிறையால மீனே
தாலமனுவோர்க்கறிவு சாற்றுங்காதிர் முகியித்தீனே. (யாஉ)

---

பதம்-பல்லவி.

வெட்டவெளியாகிப் போச்சே
மெய்ஞ்ஞான சூட்சம் (வெட்ட)

அனுபல்லவி.

வெட்டவெளி யாகிப்போச்சே கிட்டையிலிருந்து பார்க்க
ஒட்டிடாத கப்பொருளை யிட்டம்வைத்து வந்துநோக்க (வெ)

சரணம்.

கோட்டையுயரேறிப் பாடவுங் - கொடியிழுத்து
ஹூம்மெனும் பெண்ணவ ளாடவும்
தேட்டம்வைத்தவளை நாடவுஞ் - சிமாட்டியுடன்
சிவித்தரசனைத் தேடவும்
நாட்டமா மேழுங்கடந்து
நானென்றவனைத் தொடர்ந்து
கூட்டமறப்பார்க்கும் போதங்
குற்றவனுனையிருக்க (வெட்டவெளி)

அவ்வலகதாகவந்ததும் - உஹூதுவாஹி
தாகியெங்கு மாணிறைந்ததுங்
ஹூவ்வெனவெளியெழுந்ததுங்-கோனவனருள்
கூரிருளற நிறைந்ததும்
அம்மொழியதை யறிந்து
தம்மிலே தனையுவந்து
கும்மிவிளையாடும்மாது
அம்மலர்க்குள்ளாடும்போது. (வெட்டவெளி)

நானதுக்குள் நானவனுகி-யடங்காசூக்ஷம்
காடும்விந்தை யானந்தமாகி
கோனவன்றன் கோனவளாகி - யணைந்தமுதங்
கொண்டிருளற வொளியாகி

நாணமற நின்றவட்டம்
நல்லருளனு விற்கூட்டம்
ஈனமற்றலி பிற்றேட
இல்லல்லாவறிந்து நாட. (வெட்டவெளி)

அஞ்செழுத்தின்குணம் நாடி - அணைத்துமொன்ற
தானவொருவகை பாடி
பிஞ்செழுத்தின் பிரிவோடி - நஞ்செழுத்துடன்
பேணுமவ டனைத்தேடி
தஞ்சமென்றவ ளடுத்துக்
கஞ்சமலர்த்தாள் பிடித்துக்
கெஞ்சுமுகிதின் பிச்சைகாக்க
வஞ்சலற்றவ்விடமீ பார்க்க. (வெட்டவெளி)

பதம்-பல்லவி.

பட்டமேறுதுபார்-பரிபூர்ண
பட்டமாடுதுபார்.

அனுபல்லவி.

கட்டமுகாகிய சிவலோகத்திலே
காரணங்காணும் லாஹூத்துமக்காமிலே
மட்டட்டங்காவுள் வெளிதருமானந்த
மக்கங்கடந்த மதினவ்வெளியிலே. (பட்ட)

நாஹுயார்தானக் தரிப்புங்கடந்தது
நாதகீதங்கள் முழங்குமிடமது
மூலமுக்கோணச் சுழிமுனையூடது
முத்திதருமதினு வுள்வெளிமீது. (பட்ட

அண்டபுவனம் நிரம்பினவாயு
வடங்கவேகாட்சர மைம்பத்தொன்றும்வழி
கண்டங்கடந்தநியோக வெளியுட்
கயிறுவிடாமலுயிருக் குயிர்பூர்ண. (பட்ட

அச்சமறநமன்கண்டு வணங்கிட
அம்புவியோர்தன்னறிந்து தெளிந்திட

மிச்சையறுத்த மெய்ஞ்ஞானமுகியித்தின்
பிச்சைக்குசித்தி முத்திதரும்பூர்ண. (பட்ட)

பதம்-பல்லவி.

ஜெபதாபரம்-ஜெயம்-ஜெயம் வா
ஜெனன-ஜீவ திவ்யகுண (ஜெப)

அனுபல்லவி.

தபமாகதி யருளாளனீ-தாபந்தொலைத்திடாதனி
சித்தனீ-முத்திசேர-ஜெய-ஜெயவாகனி
உபநிடதப்பொருட்கரூபா
யோகாதி சயந்தரும் பாதம்நீ
நிபுணனீயாதரவாகனீ
நித்ய நேச வாச னீதா
சரிக-ரிகம-கமகரி-கா-மி
சரிக-னீதம-மருகா
தாதிரு-வாதற
மாதவ-மீ-மீ-தா-தா (ஜெப)

சரணம்.

(க) காமமாபவக்கடலைத்தொலைக்க
கவலையற்றகங்களிப்பைக்கொடுக்க
தாமதஞ்செய்திடாமலிப்போமுத்தி
தந்தருள் தயா பரனு நீ.
தகையற வருள் தானே
ததி-ததி-தா-தனி
நோக்குவிழிநேரிலொளி
நூராயிலக்கிய பாதம் நீ
வாக்குமனம்-நாவுமொன்றுற.
வாநீதிபரமான நீதா. சரிக (ஜெப)

(உ) கம்பமற்றருட்கடலின்னமுதங்
கழகமொன்றுண்டுசுகிக்கும்புனிதம்
செம்பொற்கமலாசனத்திலிருந்த
செங்கீரையாடுமொழியும் நீ.

இனவிருளறுத்தோனே
திருவுளநாதனே
அம்பரம்பூவிரேழுலகும்
அமைந்தபல்லுயிர்க்கடங்காதாளும் நீ
தம்பமென்றழுதறிவோருள்ளஞ்
சார்ந்தமாதவதயை விநோதா சரிக (ஜெப)

(௩) வெளியிலெம்மணுகியபூமாது
விழிபண்வீசுங்கண்வலையுள்மீது
அழிவேனுங்கண்ணிய துட்சிக்காது
ஆதரவு செய்தாளும் நீ
அஹதானுன்லிக்காவிற்சேர
ஆதரவாக னீ
களிதரும்பொற்கமலாசனங்
கனிந்துறவுற்றிருந்தவனும் நீ
தெளிவுறுங்கவிமுகியித்தின்பிச்சை
சிந்தாதரவிந்தைவிநோதா சரிக (ஜெப)

கீர்த்தனைகள் முற்றிற்று.